ஓம்:

# ராமகீதோபநிஷத்

தென்னும்

## குருசிஷ்ய ஸம்வாதம்



ஆசிரியர்


ப்ரம்மஸ்ரீ ஸ்வாமிராமசர்மா
மாயவரம்—ஸ்கந்தபுரி.



...டை சுவாமிகளின்
சிஷ்யர்களால்

திருநெல்வேலி மேலரதவீதி
ஸ்ரீமுருகானந்தா பிரஸில்,
பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை தர்மத்தின் பொருட்டு ரூபாய் 3.



ப்ரம்மஸ்ரீ ஸ்வாமி ராமசர்மா,

மாயவரம்—ஸ்கந்தபுரி

OM.

# INTRODUCTION.

This Rama Gitopanishad is indeed; a memento to the keen intellect of Nagammai alias Gayatri, a typical Devadasi. It is now to be published in book-form owing to the efforts of many an admirer of hers, the chief of whom happen to be the popular citizens of Rajapalayam.

I have been for a long time attached to the Swamiji referred to in the book as one of his ardent disciples. So I was pressed to supply the key thereof on the plea that it may be placed in the hands of many a variety of readers. But my diffidence for the task in view of my limited experience stands in the way; and yet I see that I am drawn out to stand before the public by the force of that Divine Love which, I perceive, is utilising me as a suitable tool for its propagation in this material world of ours.

At the outset, it is to be borne in mind that in this ancient Land of ours there were several schools of Philosophy, all managed by different Rishis of old— the venerable Seers of the mysterious ways of God. Of these, the superior school of philosophy had two sections, the High School and the College. The school of Yoga beginning from Chariyai formed the High school and that of Gnana, the College. The students of the College were called 'Brahmins'; they were of course selected on the results of an eligibility test which was none else than a sound vichara—a ripe faculty to discriminate with certainty the Truth from Untruth:

and thenceforth the course of study ran from Sankya to that for the attainment of the spirit of Sanyasa. This course was covered in four indissoluble ashramas, viz, Brahmacharya, Grahastha, Vanaprastha and Sanyasa. In this land of Brahmagnanis, the present generation has come to own these names as mere titles–some marks of honour—without in the least knowing, or rather even attempting to know the real significance thereof; the result being the disintegration of society and the consequent discord among the different members of the nation.

Under these circumstances, this Gita which treats of the said college course in all the four stages, of course in a garb suited to the present day environments is presented to the public and it is hoped that it may serve as a true guide to understand the national spirit of India. The said ashramas were found necessary in those days in order to achieve the spiritual realisation with the then material surroundings. The face of the earth is changing; we are now confronted with a new phase of life. The result is that we choose and adopt only such material forms as are found agreeable and possible under our present circumstances.

And in this Gita, the reader will find only pure intellectual food, which, I hope, he will try to assimilate with his material surroundings, if need be, with a proper guide and thus achieve the spiritual realisation in his own walk of life. This is what is called Practical Vedanta or Practical Wisdom. Swami Ramathirtha says that Japan and America are pushing forward because of this Practical Wisdom applied to their everyday engagements whether spiritual or material and that

India, our dear Motherland, the Land of spiritual giants, now lags behind for want of this Practical Vedanta. Without realising this Truth—the Truth of Existence—one cannot prosper whether in this world or after. When a nation gives room to this poverty of Practical Wisdom—this ultimate Vedanta, Experience says that its fate is doomed and that it is to become the manure for the propagation of better-placed nations in whose grip is the seed of Vedanta. Thanks to the attainments and the greatness of our ancestors, our Motherland has many a time been favoured with timely help so that such crises have been averted all along. The spirit of the ancient Upanishad was lost by the sons of Bharata and the result was the catastrophic civil war which brought forth the Soothing Song of the Lord—the Bhagavad Gita. Again, the land of Divine Freedom was rent by internecine quarrels both political and economical, but engendered by religious feuds: the great Shankara made his appearance and once again set up the balance of Equanimity aright. In this way, the Indian Nation has all along been saved by Divine Help so that it has not until now dwindled into insignificance. We are now in the throes of another conflagration. If we do not now prove our fitness to survive this crisis as well, we will be overcome by younger generations who, with their hold on the Truth Eternal, will easily overpower our weaker members and convert these old rotten clogs—the remnants of once prosperous trees—into manure fit for their propagation. There is no use in craving after Liberty, Fraternity or Equality. The fitness is not in the vocal clamourings but is far, farther away from the superficial appearances. It is in the innermost heart of hearts. It is Knowledge that makes one

fit If the seed of Knowledge Absolute—what is called மோனவித்து in tamil, the seed proper—has been sown in the purity of your heart, my dear Reader, then is the time for you to declare your nativity, your Godhood. Then and then only you become fit for this Liberty, which you have been hankering after for so long. It is then that Liberty will seek you and these appearances which you were wont to think were all that was necessary to achieve this Liberty, will become natural as it were; and there will be none on the face of this Earth—nay, in the Creation even—to dare you in the face. My dear Reader, just reconnoitre your inner heart and decide:- is this the Liberty you want, or is it simply the socalled political freedom which is but a shadow of this true Liberty and which is sure to fly away on the appearance of a greater force? Observe Mahatma Gandhi and draw from his life the light necessary to understand his teachings Then you will come to know that he has got a firm grip in this Truth—the Existence Absolute. Again you will find that it is the utter relaxation of the lower self and the consequent suzerainty of the Intellect that has made Tagore what he is now. Ramakrishna Paramahamsa never went to an ordinary school, but he had this seed sown in time and the result is now what you see—the spread of Vedanta through the nook and corner of the world.

Now, you may ask me how to achieve this. Rama Gitopanishad gives you the answer. You have to take in the spirit of this Gita and inject it little by little into your mind so that it is in time converted, as it were, into a spirit floating on the spirit..al ocean, as of old when Lord Krishna floated on the ocean of Bliss,

himself lying at oaso on the heart of a banyan leaf. Onco you manage to achieve this, then yon aro free. You become the master of tho situation wherevor you be and the Kingdom of God will be brought unto you.

In conclusion, I invite the Reader, to go through the author's Keynote to this Gita (in English) which is already before the public in book-form and the tamil introduction as well. These, I am sure, will help him further to realise the spirit of the Gita proper. As one of the disciples concerned in the welfare of the Dharma referred to therein, I also mingle my voice with my brothers in requesting the readers to subscribe their mite in the propagation of the Dharma.

Om Shanti Shanti Shanti. Om.

C. Subrahmanyasarma,
Bharadwaja Ashram,
Sheramadevi.

January, 1928.

# முகவுரை

ஸ்ரீராமகீதோபநிஷத் தென்னும் இவ்வரிய நூலை பக்தகோடிகள் படித்துய்யுமாறு, வெளியிடும் பொறுப்பை நாங்களே வகித்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்ட எமது பிரிய சகோதரர்களின் வேண்டுகோளுக்கிணங்க இப்பணியை ஏற்றுக் கொண்டோம்.

இந்நூலுக்கு முகவுரை யெழுத எமக்கு ஆற்றல்போதா தென்பதை நன்கறிவோமாயினும், வினைவசப்பட்டு அப்பொறுப் பையும் தாங்கவேண்டியதாயிற்று.

இத்தகைய நூல்களுக்கு முகவுரை எழுதுவது இலேசன்று. பொதுவாகவே தத்துவநூல்களெல்லாம் உரைகளாலும், வியாக் கியானங்களாலும் கவரப்பட்டு, உண்மை அறியப்படாது மூடு மந்திரமாகவே யிருந்துவருகின்றன. இந்நிலையில் எதேனும் எங் கள் சொந்த அபிப்பிராயத்தைச் சேர்த்து நீண்ட உரையொன்று செய்துவிடின் அதுவும், பண்டைய வார்த்திகங்களைப்போல, சம் பாஷணைரூபமாய் மிகத்தெள்ளிய நடையில்சுருவாய் வெளியாக் கப்பட்டிருக்கும் உபநிஷத்தின் தத்துவமான இவ்வேதாந்த நூலை மறைப்பதற்கான ஒரு உரையாய் விடுமோவெனப் பயப்படு கிறோம். எனினும், வாசகர்களை நூலுக்குட் புகுத்திவிடவேண் டியதற்கான சிலவிஷயங்களை மாத்திரமாவது கூறுதுவிடின், குன் றக்கூறல் என்னும் குற்றத்திற்குள்ளாவேமென அஞ்சி, சிறிது எழுதத்துணிந்தோம்.

முதலில் நூலிற்காறும் குருசிஷ்யர் இருவரையும்பற்றிய நாமரூபாவஸ்தையின் சரித்திரத்தைச் சிறிது சுருக்கமாய்ச் சொல்வது அவசியமாகிறது. நாகம்மை என்ற காயத்திரி பொன்னியென்னும் காவேரியால் அலங்கரிக்கப்பெற்ற மாயூரத்

நிற்குத்தெற்கே வழுவூரென்றும் திவ்யக்ஷேத்திரத்தில் பிறந்த ஜாதிதாசியானவள். பூர்வஞ்செய்த பிராரப்த வினையால் பரதமப்பியசித்து, அதில் கீர்த்திவாய்ந்து, அந்த தர்மத்தில் நின்று யோகாப்பியாசத்தையும் நடத்திவந்தவள். வினைப்படி காலக்கிரமத்தில் எமது சத்குருநாதராகிய இந்த ஸ்வாமிகளையும் அவள் சந்திக்கநேர்ந்தது. அக்காலத்தில் அவளுக்கு உண்மை விசாரமுதிக்க, அந்தவிசாரத்தின் பயனாய் விளைந்த அவளுடைய கேள்விகளுக்கு விடையளித்ததின் மூலமெழும்பிய நூலேயாகும் இந்த ராமகீதோபநிஷத்து. இவ்விஷயத்தில் சென்னை ராஜதானியின் தென்பக்கத்தில் வசிக்கும் யாவத்திராளும் அநேகமாய் அநுபவத்தில் அறிந்திருப்பார்கள். தற்காலம் மேற்படியம்மை பரகதியடைந்து சுமார் மூன்று வருஷகாலமாகிறது. எனினும், இதுகாலபரியந்தம் எவ்வளவோ ஆசைப்பட்டும் இந்நூலை அச்சிட்டு வெளியாக்க ஸ்வாமிகள் உத்தரவு கிடைத்திலது. என்னே பெரியோர்சித்தம்? ஆயினும் இப்பொழுதாவது எம்போன்ற பக்தகோடிகளின் பிரார்த்தனைக்கிசைந்து இதை வெளியாக்க அவர்கள் சம்மதம் தந்தது ஓர் நற்காலமே. அந்த வம்மையின் விசேஷபக்குவத்தைக் குறிப்பித்து, அவளுக்கு என்றுமழியாத ஒரு ஞாபகச் சின்னமாய் விளங்குவது இந்த நித்திமான நூல் என்று அவர்கள் கருதியதே நம்பாக்கியமாகும்.

மற்று இதன் கர்த்தாவாகிய குருஸ்சுவாமிகள் இன்றும் ஜீவந்தராயிருந்துகொண்டு, மேற்கூறிய வழுவூருக்கருகாமையில் ஸ்கந்தபுரியென ஒரு ஸ்தலமேற்படுத்தி, அதில் ஆத்மஞானபிவிருத்தியின் பொருட்டு ஜாதி—மத—குலபேதமின்றி அன்னதானத்துடன் ஞானோபதேசங்கொடுக்க மடமொன்றும், பக்திபோகசாதனத்திற்காக சுப்ரம்மண்ய ஆலயமும் பாண்டுரெங்கக்ஷேத்திரமும் ஆக இரண்டு கோவில்களும் ஏற்படுத்தி, சென்ற பதினறு வருடங்களாய் நடத்திவருவது கண்கூடாகக் காணத்தக்கதே.

இது நிற்க, இந்நூலைப்பற்றிச் சிறிது கவனிப்போம்.-

“பிள்ளைமை விளம்பினை பேதை நீ யெனு
தொள்ளிய புதல்வனை யுறப்பி யென்னுவா

வெள்ளலை யாமினி வியம்ப லாற்றுவேன்
தெள்ளிய பொருளென அரசர் செப்பினன்.
(கம்பராமாயணம் –யுத்த– மந்திரப்படலம்.)

என்று விபீஷணாழ்வார், ஸ்ரீராமபிரானைச் சாருவதற்கு முன்னர், தன் தமையன் ராவணேஸ்வரனிடம் முறையிட்ட பான்மையே இவ்விடத்தும் பொருந்தும். அறிவிலும், கல்வியிலும், அநுபவத்திலும் கடையேங்களாயினும், எமது உடல்-பொருள்-ஆவி மூன்றையும் இந்த கீதையிற்காணும் வண்ணம், மாது ஸ்ரீசுகம்மை யொப்ப எம்குருநாதரிடம் ஒப்படைத்து, இருபதாண்டுகளாய் அவருக்குத் தொண்டுபுரிந்து, இத்தியாதி விஷயங்களில் பரிசிலனைசெய்து வந்திருக்கிறோம். தவிரவும், அநேக பண்டிதர்களையும், சாதுக்களையும் தரிசிக்கநேர்ந்திருக்கிறது. அக்காலங்களில் அவர்களுடைய அநுபோகங்களையும் அறிந்து தெரிந்துகொண்டிருக்கிறோம். இந்நிலையில், இந்நூலின் அட்பத்தைச் சீர்தூக்கியளவில், இது இக்காலத்திய விசாரபார்களுக்கு இன்றியமையாத நன்னூலென ஓர்ந்துகொண்டோம். மேலும் ஸ்ரீபகவத் கீதையென்னும் பொக்கிஷத்தைத் திறந்தனுபவிக்க இது ஒரு திறவுகோலாயும் அமையும். இதன் உண்மையை விவேகிகளும் பக்தர்களும் நூலினுட் புகுந்துபார்த்தே தெளிந்துகொள்ளலாம். எனினும் இதன் சிறப்பு லக்ஷணங்களிற் சிலவற்றை இங்கு எடுத்துக்கூறாதுவிடுதல் அழகாயிராது.

(i) சொல்லாமற்சொல்லி, காட்டாமற் காட்டுவதே தத்பதார்த்தத்தின் அழகென எல்லாவேத நூல்களும் முறையிடுவது, இதில் பரப்பிரம்மத்தை லக்ஷியத்தால் அறிவிக்கும் முறையினின்றும் நன்குவிளங்கும்.

[ii] குருவினிடத்தில் சிஷ்யன் நடந்துகொள்ளவேண்டிய விதமும், காட்டவேண்டிய சிரத்தா பக்தியும், மனத்தில் மறைந்து கிடந்த ஞானத்தில் சமனிலைகாட்டி யொழுகும் நியாயமும் இந்நூலினின்றும் அழகாய்த்தெரியவரும்.

[iii] மேற்கோள்கள் அதிகமின்றி கேவலம் சாமானிய வாக்கிய கனதியோடு மாத்திரம் அமைந்திருப்பதுமல்லாமல் முன்னோர் கூறியதையே கூறும் வழக்கை முற்றிலும் மாறி, க்ஞ யுக்திக்கு மனுபவத்திற்கு மொத்ததான, தன் அனுபவத்திற் காணும் பற்பல உடமானங்களைக்கொண்டு தத்பதலக்ஷியத்தை யுணர்த்தும பான்மை சாலச்சிறப்புடைத்தாகும்.

(iv) சொல்லி[illegible]றும் விஷயமென்று கூறி, கிரந்தகர்த்தாக்கள் இ[illegible]மென்னும் பெருங்கனதி யுள்ள போர்வையால் உண்மையை மறைத்து அற்ப சின்னங் கூட வெளிவாராவண்ணம் செய்திருப்பது போன்றல்லாமல், மறைத்துக் கூறலென்னும் பொதுவிதிக்கும் விரோதமில்லாது சாமான்ய மஸ்லின்றுணியென்னும் திரையால் மூடப்பட்ட தெர்ப்ப சாதாரண சொற்கட்டாலமைந்த இந்நூலின் நடை, கிரியை முதல் யோகம் வரையுள்ள பக்குவிகளுக்கும் தத்பதார்த் தத்தை இலேசில் உணர்த்தும் பான்மை யுடைத்தெனத் துணிந்து கூறலாம்.

[v] தவிரவும், இந்நூல் நூதனமானதல்ல; ஆதியாயும் புராதனமாயுமுள்ள கிரந்தங்களை அநுசரித்ததே. அவற்றின் கருத்து சிறிதும் மாறாது, சுருக்கமாயும், வியக்தமாயும் கூறப்பட் டிருக்கிறது. சாக்ஷாத் கிருஷ்ணபகவான் வாக்காகிய ஸ்ரீமத் பகவத் கீதையிற்காணும் சாங்கியயோக மார்க்கத்தைப்பற்றிய அத்தியாயங்களி லடங்கியிருக்கும் அதி குஹ்யமான விஷயங் களே இதிலுமடங்கியிருப்பவை.

நிற்க, இதற்குரிய பக்குவ சோதனையோ மிக வெளிது. இதிலுணர்த்தியிருக்கும் சுளுவான உபமானங்களைக்கொண்டு, உபமேயத்தைச் சித்தாந்தித்துக்கொள்ளுதற்கு வேண்டிய அப்ப அறிவும் கல்வியுமுள்ளவர்களுக்கு இது போதியநூலாகும். மற்று, இதற்கு முற்றிலும் அன்னியமான உலக வியவகாரிகளுங்கூட இதில் ஆசக்திபெற்பட்டு தற்காலத்திய நாவலைப்போலேனும்

இதை வாசிக்கநேருமாயின் அவர்களுக்கும் பிரம்மவிசாரம் ஒருவாறு உதிக்கலாமென்றே எண்ணுகிறோம். இல்லாவிடத்தும் உலகவியவகாரத்திலாவது, நாமரூப சம்மந்தப்பட்ட எக்கொள்கையிலேனும். அவசியஞ் சிறந்து விளங்குவார்களென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. ஜாதீய உணர்ச்சியிலோ, நாகரிக வாழ்க்கையிலோ, அல்லது தேசஐக்கிய விஸ்வாசத்திலோ, மற்று எத்தொழிலாயினும் பிரவர்த்தித்த புத்திசிக்க கூர்மையாயும் சிரேயஸ்கரமாயும் விளங்குவதோடு அவர்களுக்கு இம்மைப்புகழும் சித்திக்குமென உறுதிகூறலாம். தவிர, கல்விபயின்று நாகரிகசிகாமணிகளாய் விளங்கும் நம்பெண்மணிகள், மதப்போர்புரிய முன்வருங்காலத்தும், கற்பென்னும்நிலைமை குறையாது தத்தம் கணவர்களைப்பேணி நிகழ்ந்த தர்மத்தை நன்கு நடத்தச்செய்யும் வல்லமையும் இந்நூலுக்குளதெனச் சொல்லுவது மிகையாகாது.

சிறப்பாகக்கூறுமிடத்து, நாமரூபமில்லாத வஸ்துவுக்கு ஆபரணம் பூட்டிப்பார்த்தல் இலக்கணமென்றும், இலக்கணம் பூட்டுமுன்னிருந்த அவஸ்தையை—நோக்காதுநோக்கிப்பூட்டியதால்—இலக்கியமென்றும், அவ்விலக்கியமே ஞானநூலில் அறிவின் லக்ஷியமாகுமென்றும், பாஷாவித்பன்னர்கள் உணர்ந்திடின், இந்நூலிற் காட்டியிருப்பதினின்றும் இலக்கணநூலைச் சாதன சதுஷ்டயங்களடங்கிய ஓர் நூலாகவும் இலக்கிய நூலை அறிவுருவாயுங் காண அவர்களுக்கு இது ஓர் நந்தாவிளக்குப் போன்று உதவும். ஜோதிஷ மர்மமறிந்த வித்வான்கள் நாமரூபத்தில் நின்று வியாபகமாய்ப் பார்ப்பினும், இந்நூலைக்கொண்டு அந்த ஜோதிஷவழியிலேயே ஜோதியைத்தரிசிக்க சாத்தியமாகும். மற்று, பரதமப்பியசித்த தாசிகளையும், அவிசார புத்தியுடைய வேசிகளையும்கூட இந்நூல் ஒருபடி உயர்த்த முடியுமேயானால், சங்கீதவித்வான்கள்—வக்கீல்கள் முதலியோர்களுக்கு, இந்நூலால்வரும் பலாபலன்களைப்பற்றி விசேஷித்துக்கூறவேண்டியதில்லை. சுருங்கக்கூறின், முக்திவிஷயத்தை நீக்கிவிடினும் கேவலம் விவேகம் சம்மந்தப்பட்டவரையிலுங்கூட இதற்கு விஜாதியுளதெனத் தோன்றவில்லை.

ஆதலின் அறிவிற்சிறந்த பெரியோர்கள், இதுவரைகூறியிருப்பதில் அறியாமை வசத்தாயியற்றியிருக்கக்கூடிய குற்றங்களைப் பொருட்படுத்தி எம்மைத்தள்ளிவிடாது, தங்கள் சந்நிதியிற்கொண்டுவந்திருக்கும் இவ்வரியநூலை ஆதரிக்கும்படி வேண்டிக்கொள்கிறோம்.

இன்னுமோர் விஷயம்,— தத்துவஞானம் எங்கும் பரந்து ஓங்கி வளரவேண்டுமென்பதே எமது தீர்க்கசங்கற்பம். அதன் நிமித்தமே மடம், ஆலயம் முதலிய நிருமிக்கப்பட்டன. இந்நூலையும் அதற்கிணங்க இனமாய் அச்சடித்துக் கொடுக்கவேண்டுமென்றே இதுகாறும் எண்ணியிருந்தோம். ஆனால் தற்காலம் வினைதலைகீழாய் மாறிவிட்டது: "நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைக்கும்" இந்நூலுக்குக் கர்த்தாவகவும் எமது குருநாதனுகவுமுள்ள ப்ரம்மஸ்ரீ ராமசர்மா ஸ்வாமிகளின் பிராரப்த சரீரம் வினைவசப்பட்டு மிகத்தளர்ந்து போய்விட்டது. இந்நிலையில் மேற்படியாரால் ஸ்தாபிக்கப்பட்ட மடம் ஆலயமுதலிய தர்மங்கள் ஒழுங்காய் நடைபெறுவதற்கில்லாது, அநேக இடையூறுகளுக்குட்பட்டுக் குறைந்து வருகின்றன. அவற்றைச் சீர்பெறப்பூர்த்திசெய்ய இன்னும் சுமார் இருபதினாயிரம் ரூபாய்வரை வேண்டியிருக்கிறது. ஆகவே என்னகொடுத்தும் பெறமுடியாத இந்நூலைத் தர்மமாகவே வழங்க ஆசையிருப்பினும் அது சாத்தியப்படாததாலும், கிரயமென்று சொல்லரற்கட வழங்க வெமக்கிஷ்டமில்லாததாலும், தர்மார்த்தமாய் சத்தின் அபிவிர்த்தியைக்கோரி பிரதியொன்றுக்கு ரூபாய் மூன்றுக்குக் குறையாமல் அதற்கு மேற்பட்டு அவரவர் சந்துஷ்டியைப்பொறுத்து, அறத்தில் நின்று, ஒவ்வொருவரும் உதவும்படி மேற்படி ப்ரஹ்மஸ்ரீ சர்மா ஸ்வாமிகளுடைய சிஷ்ய கோடிகளாகிய நாங்கள் பிரார்த்திக்கிறோம்.

மேலும்பலஜோலிகளுக் கிடையில் 'ப்ரூப்' பார்க்கும் வேலையையும் நாங்களே ஏற்றுக்கொள்ள முடியாமற்போனதினின்றும் அச்சுப்பிழைகள் மிகமிக மலிந்துகிடக்கின்றன: இருப்பினும் கூடியவரை பிழைகளைத் தொகுத்து அவற்றிற்குத் திருத்த

மூம் சேர்த்திருக்கிறோம்: அவைகளையும் மற்றும் கண்ணிற்படக் கூடிய சில்லரைப் பிழைகளையும் திருத்திப்படிக்குமாறு அன் பர்களை வேண்டிக்கொள்கிறோம்.

மற்று, இந்நூலை வெளியாக்குவதற்கு உத்ஸாகத்தோடு உதவிபுரிந்தவரும எங்கள் சுவாமிகளிடத்தில் விசேஷ பக்தி வாய்ந்தவருமான ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீமான் C. S. ஸ்ரீராம தேசிகமய்யங்காரவர்கட்கு எங்கள் அன்பார்ந்த நன்றிகாட்டுவ தோடு, அவருக்கு இன்னும் இத்தகைய அறங்களுக்கு மனத் தாலும் தனத்தாலும் உதவிபுரியுமாற்றலை மேன்மேலும்கொடுக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக!

இங்ஙனம்
பெத்தையாபிள்ளை யென்ற
அழகுமுத்து
த. அ. அர்ச்சுனராஜா.

ராஜபாளையம்
பிரபவ௵ மார்கழி மீ

உ

# ஸ்ரீராமகீதோப நிஷத்.

## முதலாவது அத்தியாயம்.

### ஸாங்கிய யோகம்:—

### கடவுள் வணக்கம்.

அறுசீரடி விருத்தம்.

ஆரியர் பேணு மிந்த அற்புத கீதை யோதி
சீரிய வீடு பெற்றுச் செழுஞ்சுட ரொளியில் நின்று
வீரிய புருடனாக விரிந்திட வந்த வித்தைப்
பேருரு வற்ற வந்தப்பெருமையைத் துதித்துச் சொல்வாம்.

நித்திய மின்ன தென்று நேதிசெய் துணர்ந்த மேலோர்
சத்தியந் தன்னைச் சார்ந்து சாந்தியி னுற்ற பின்னர்
மித்தையா முலகந் தன்னில் மேவி நின்றோதும் ஞான
முத்தர் கடம்மையன்றி மொழிந்திடக் கடவுள் வேறோ.

முன்னிலை யழிந்ததாறு மொழியுமிவ் வேத கீதை
தன்னிலை யறியுமாறு தற்பதம் விளக்கலாலு
மன்னிலை யமிர்த முண்ணு வறிவதினுற்றலாலு
பின்னிலை தன்னை யன்றி பெற்றவோர் பொருளுமுண்டோ.

### நாகம்மை.

நாகம்மை:— சொச்சமான ஆகாசம் அந்தகார மேகங்களால் சூழப்பட்டிருப்பது போல் அஞ்ஞானத்தால் கவரப்பட்டு நடக்கும் வழி தெரியாமல் நான் தத்தளித்துக் கொண்டிருக்கும் சமயத்தில், சூரியோதயம் போல் என் திருஷ்டிக்குத் தோன்றும் ஹே! சற்குரு சுவாமி! ரக்ஷிக்கவேண்டுமென்று தங்கள் பாதபங்கஜங்களைப் பற்றி யிருக்கும் என்னை, 'நான்'

என்றும் கர்த்தா இந்த தேகத்தில் யாவனென நிச்சயித்து அறியுமாறு செய்யப் பிரார்த்திக்கிறேன்.

குரு:— தாயே! உன்னுடைய கேள்வி எனக்கு அத்யந்தம் சந்தோஷத்தை விளைவிக்கின்றது. நீயோ பெண்பால், அதிலும் தாசி. இப்பேர்ப்பட்ட மோக்ஷ இச்சை நிகழ்ந்து, தன்னை அறியும் ஆவல் ஏற்பட்ட உனக்கு, நித்ய மங்களம் உண்டாகுக. இந்த விசாரம் எல்லோருக்கும் எளிதில் வாராது. வெகு ஜன்மங்களிற் செய்த புண்ணிய விசேஷத்தினால் இந்த விசாரம் உதிக்கும். நீ இதைப்பற்றிக் கவலையுற வேண்டாம். ஆயினும் என் கேள்விக்குச் சாவதான சித்தத்துடன் யோஜித்துப் பதில் கூறுவாயாக. இப்பொழுது நீ நன்றாய் யோஜித்து 'நான்' என்னும் சப்தம் எவ்வாறு உண்டாகிறதென்றும், எப்படியிருக்கலாமென்றும் விசாரணை செய்து பதிலளிப்பாயாக.

நா:— சற்குரு சுவாமி! உத்திரவுப்படி நன்றாய் நிதானித்துப் பார்க்கையில், சரீரத்தின் புறம்பிலுள்ள, நரம்பு தோல்களின் சம்பந்தத்தைப் பற்றியாவது, அல்லது சரீரத்தினுள்ளே யிருக்கும் மாமிசங்கள் எலும்புகளைப் பற்றியாவது யாதொரு சம்பந்தமுமில்லாமல், 'நான்' என்னும் பதார்த்தம் சரீரமாகிய சிமிளிக்குள் ஒரு தீபம்போல் அமைந்து, சிமிளிக்குச் சம்பந்தமன்றியில் தீபம் பிரகாசித்துக் கொண்டிருப்பது போல, இந்த 'நான்' சரீரமாகிய சிமிளிக்குள் தானே விளங்கிக்கொண்டிருப்பதாக நிச்சயித்துணர்கிறேன். தவிரவும் அது இறப்பதற்குரியதல்லவென்றும் தீர்மானிக்கிறேன்.

குரு:— தாயே! உன்னுடைய ஆராய்ச்சி சுகப்பிரம்மத்தை ஒத்திருக்கிறது. நிரம்ப சந்தோஷம். நீயே தன்யை. எனக்குரிய பக்குவி; ஆயினும் அது இறப்பதற்குரியதல்லவென்று சொன்னாயல்லவா? அதற்கு பூர்த்தி செய்யத் தவறிவிட்டனை.

இப்போது யோஜித்திருப்பார். இறப்பதற்குரியதல்லாத ஓர் வஸ்து பிறந்திருத்தல் கூடுமோ?

நா:— என்னையாள வந்த குருமூர்த்தி! நான் இவ்வளவு தூரம் உணர்ந்ததும் அவ்விடத்துச் சன்னிதான கிருபாவீக்ஷண்யத்தாலன்றி மற்றும் எனது கல்வி கேள்வியின் விசேஷத்தாலென்று நான் நினைத்தால் அது பொய்யே யாகும். இப்பொழுது சன்னிதானம் விளவிய கேள்வியானது, என்னறிவென்னும் விளக்கைத் தூண்டிப் பிரகாசிக்கச்செய்வதால், உத்திரவான குறையை நான் பூர்த்தி செய்துகொண்டேன். அதிற் சந்தேகமில்லை. அதாவது இறத்தற் கேதுகரமில்லாத ஒரு வஸ்து பிறந்தது என்று சொல்லத்தகாது. ஆதலின் பிறப்பிறப்பற்ற வஸ்து நானே என்று சத்தியமாய்த் தீர்மானித்தேன். ஆயினும், இதற்கு மூலமும், இதைக் கவர்ந்துகொண்ட தேகத்தின் காரணமும், மற்றேனைய நாம ரூப அங்கங்களின் வைபவங்களையும் உணர்ந்து, நீக்கும் சக்தியுடையவளென எனக்குத் தோன்றவில்லை. ஆதலால் இவ்வளவில் அறிந்தால் அநுபவிக்கப்போதுமா என்ற சங்கை உண்டாகிறது. ஆகையால் தங்களைச் சரணாகதியென்று நம்பிய என்னை எவ்விதம் ஆட்கொள்ள வேண்டுமோ, அவ்விதம் கடாக்ஷித்து இந்தப் பிறப்பென்னும் கடலைத்தாண்டுமாறு செய்ய, பக்தி வினயத்தோடு தங்கள் முன்னும், பின்னும் இருபக்கங்களிலும், மேலும், கீழும், எங்கும் நமஸ்கரிக்கின்றேன். நான் உங்களுக்குரிய சிஷ்யை, அல்லது புதல்வி. அடிமைக்குத் திருவுளம்பற்றவேணும்.

குரு:— அகோ! ஆச்சரியம், பெண்ணே! அறிதற்கரிதான நான் என்னும் தத்பதத்தை உள்ளது உள்ளதாகவே அறிந்துகொண்ட உனக்கு அதைக்கவர்ந்து கொண்டிருக்கிற நாம ரூபமுள்ள கடபடாதிகளை ஆராய்ச்சி பண்ணி நீக்கும் சக்தியில்லையெனத் தீர்மானித்தது, இந்திரிய திருஷ்டியின் பிரமிப்பே என்று, நீ அறிந்துகொள்ளக்கடவாய். ஆனால் இப்படி அறிந்ததே அநுபவிக்கத்தகுமா என்ற சங்கை நிரம்ப

உசிதமானது. அதற்கு நான் சமாதானங் கூறுவதைச் சாவதான சித்தத்துடன் கேட்பாயாக. பெண்ணே! அறிதல் ஒன்று, அனுபவிப்பது ஒன்று. தற்காலத்தில் நூற்றுக்குப் பத்து, சாமான்யமாயறியலாம். உன்போலறிதல் சாமான்யமல்ல. அப்படி யறிந்த கோடியிலொருவனே அனுபவித்தல் கூடும். தவிரவும் பதார்த்தம், நீ நிச்சயித்தபடி சரியாயிரினும், உன்னால் அனுபவிக்கமுடியாதெனச் சொல்வதற்குக் காரணம் என்னை யெனில் ஒருவன் ஒன்றை அறிதலுக்குச் சத்துரு கிடையாது. அனுபவிக்கப்புகும் காலத்தில் தான், சத்துருக்கள் விளைவது சகஜம். அதற்குத் திருஷ்டாந்தம்:— நமது சொத்தை ஒருவன் பத்து வருஷமாய், மோசடியாய் அனுபவித்துவருகிறான். ஷை சொத்து, 10 வருஷத்திற்கப்பால் ஒருமனிதனால், நமக்குப்பாத்தியப்பட்டதென அறிந்தோம். அறிந்தமட்டில் விடாமல், பரம்பரையாய் அனுபவித்து வந்த சாசனங்களும், பட்டாக்களும் விசாரணை செய்து, ரிக்கார்டுகள் கைவசப்படுத்திக்கொண்டோம். இந்தக் கட்டம்வரை நமக்குச்சத்துரு கிடையாது. தவிரவும் நாம் அனுபவித்ததாகவும் ஆகாது. பின்னால் அனுபவிக்க யத்தனப் படுங்காலத்தில் தான், சத்துருக்களால் கலகம் விளையும். அந்தக்கலகத்திற்குப் பின் வாங்காமல், நாம் தேடிய சாதனத்தைக்கொண்டு சத்துருக்களை ஜயித்து, சொத்தை அனுபவிக்கப்புகுந்தால், அந்த அனுபவம் சாந்தியைத்தரும். இதுபோலவே, நீ உன்னை அறிந்துகொண்ட அளவில் உன்னை மறைத்து உண்மைக்கு மாறாய் நானென்று வசிக்கும் எந்தெந்த சத்துருக்களோ அதனதன் தத்துவத்தை விசாரித்து அதை அற, போர் புரிந்து கெடுத்தாலன்றி நீ அறிந்தவாறு அனுபவிப்பது அசாத்தியம்.

நா:— சுவாமி! தங்கள் கிருபாவேசத்தினால் எனக்குச் செய்யும் இந்த ஹிதோபதேசங்கள் என் மனத்தைப் பரிசுத்தப் படுத்தி என்னை இந்த உலகம் அறியாதபடி காந்தம் என்னும் சக்தியால் இழுக்கப்பட்டவளா யிருக்கிறேன். தவிரவும் அனேகம் சாதுக்களையும், சந்நியாசிகளையும் தரிசித்தும்,

கிஞ்சித்து பகவத் கீதை, கைவல்யம், பிரபோத சந்திரோத யம் என்னும் நூல்களைப் பார்த்தும், எனக்கு இப்பேர்ப் பட்ட உத்தம போதம் விளங்காமல்மறைத்தான பிரமிப்பை அடைந்தேன். அது இந்த சன்னிதான விசேஷத்தால் என்னை விட்டு இன்றோடு நீங்கியதற்கு என்றால் என்ன கைம் மாறு செய்ய முடியும்? இந்த இடத்தில் நாயனர் திருக்குற ளில்:—

"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்றலரிது."

என்றபடி இருக்கிறது.

குரு:— தாயே! உன்னுடைய சம்பாஷணை எனக்கு அத்யந்தம் ரம்மியத்தைத் தருகிறது. நீ பயப்படவேண்டாம். சாதுக் களும், சன்னியாசிகளும் கொடுத்த பிரமிப்பையும், நூல்கள் கொடுத்த பிரமிப்பையும் எனக்குச் சொல்லலாமோ?

நா:— சுவாமி! அந்த பிரமிப்பு சன்னிதான சிரவணத்தால் மறைந்து போனதுந் தவிர அதின் காரணம் இனி வருவித் துத் தான் சொல்ல வேண்டியவளாயிருக்கிறேன். அதா வது, பெண்கள் மோக்ஷத்திற்கு அருகர்களல்லவென்று பல் லோரும் ஒரே தன்மையாய்க் கூறுகின்றனர். சாஸ்திரங் களோ வெனில், 96 தத்துவங்கள் உளதாயும், அவற்றைத் தாண்ட நான்கு சாதனங்கள் உளதாயும், இவற்றை அநேக ஜன்மங்களில் அப்பியசித்துப் பெறவேண்டுமென்றும் தெரி விப்பதோடு ஓர் சற்குருவைத் தேடி உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் பண்ணி அவர் மனப்பாங்கிற்கேற்ப நடந்து, சொன்னபடியுங் கேட்கில் எளிதில் ஞானோதயம் ஆகுமெனவுங் கூறுகின்றன. இதில் சாதுக்கள், சன்னியாசி கள், இவர்களின் சன்னதி எனக்கு நிஷ்பிரயோஜனமாய்ப் போய்விட்டது. சாஸ்திரப்போக்கில் நான் மொழிந்த கடைசி விஷயத்தில் கிஞ்சிற்று நம்பிக்கை உண்டாயிருந்தது. அத லால் நாமரூப திருஷ்டியால் பிரமிப்பை அடைந்திருக்கிற னென்று தாங்கள் தெருவுளம்பற்றியது சத்தியமாகும்.

கு:— சந்தோஷம் அஞ்சற்க. பெண்ணே! கவனித்துக் கேட்கக் கடவாய். ஞானமானது எங்கும், எல்லாவிடத்துமுளது. அது இல்லாமல் ஒரு வஸ்துவாவது உருப்பெற்று விளங்கமுடியாது. அதற்கு ஆணென்றும், பெண்ணென்றும் பேதங்கிடையாது. சிருஷ்டிக்குத் தென்படும் நாமரூபத்தில் தான், ஆண், பெண் என்ற விவகாரமே அல்லால், அந்தர் முகத்திலுள்ள அருவத்திலாவது, அதற்கப்பாலுள்ள ஞானத்திலாவது, அவ்வியவகாரம் கிடையாது. இன்னமும் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர, பஞ்சம முதலிய இந்த ஐந்து ஜாதிபேதங்களும், ஞானத்திற்குக் கிடையா. ஆதலின், மலம்நிறைந்த மதத்தில், மதம்பொழிந்துசொல்லும் அன்னோர்கள் வாக்கியங்களுக்கு, நீ செவி கொடுக்கவேண்டாம். அவர்களோடு தர்க்கிக்கவும் வேண்டாம். அந்தப் பிரமிப்பு இனி அறநீங்கட்டும். சாஸ்திரங்களின் விஷயத்தைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன், சிறிது கேள். தத்துவங்களை அனுபவித்தவனுக்கே, சாஸ்திரங்கள் பிரயோஜனமேயொழிய அனுபவியாத மற்றேனையோர்களுக்கு மிகுதியான அஞ்ஞானத்தையே விளைவிக்கும். ஏனெனில், ஞானநூலில் முறையிடும் விஷயங்கள் எல்லாம் மனோவாக்குக் கதீதமான வஸ்துவை, குறிப்பினாலும், பாவத்தினாலும் காட்டி, தன்னறிவால் அறிய வைப்பது. இன்னும் வாக்கியங்களின் அர்த்தத்தைவிட்டு, அதின் லக்ஷ்யத்தை நோக்குவோர்க்கே அது பயன் படும். ஆதலால் சாமான்ய ஞானமுள்ளவர்கள். அதிகாரிகளாகார்கள் இதற்கு ஞானவாசிட்டத்தில் அதிகாரிகளின் லக்ஷணங்கூறி யிருக்கிறது.

"பந்தமுற்றனன் பாகதியடையவென்
றுந்த நிச்சயமுளா னறிவிலானலான்
சிந்தனைத் துயர் கெடச் சித்தைச் சேர்ந்துளான்
இந்த நூற்குரியவனென்று கொள்கவே."

இது அதிகாரியின் லக்ஷணம். வாக்கியத்தைக் கவனிக்க வேண்டிய விதிக்குக் குறள்:—

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

இதனால் வார்த்தைக்குரிய அர்த்தத்தை விட்டு, லக்ஷியத்தைப்பற்ற வேண்டுமென்று கூறுகிறது. தவிரவும், தத்துவங்கள் 96 என்று சாஸ்திரங்கள் சொன்னது, பொதுப்பட்ட நியாயமென்று அறியாது, ஜீவகோடிகள் ஒவ்வொருவருக்கும் அந்தயே பிரயோகப்படுத்துவது பொருந்தாது. எனெனில் ஒரு ஜீவன் எத்தனையோ ஜன்மமெடுத்து வந்திருக்குமாதலின், அதற்கு முந்தின ஜன்மத்தில் எத்தனை தத்துவங்களைக் கடந்து இந்த ஜன்மா இப்போது தத்துவத்தை அபேக்ஷிக்கிறதென்று, ஒரு வைத்தியன் நாடி பார்த்துச் சிக்ஷை அறிவதுபோல, ஆசாரியனான வைத்தியன், சிஷ்யனது பவநோய்ச் சிக்ஷை, அவனுடைய நடை, உடை; பாவனைகளாலும், அவனுடைய கர்மானுஷ்டானங்களாலும், அவனது வாக்கியத்தின் விருத்தியாலும், அவனது மனம் செல்லுமிடங்களாலும், ஆராய்ச்சி பண்ணி தத்துவங்கள் இத்தனையெனத் தீர்மானிக்கப்படவேண்டும். அது எது போலென்றால், ஆதிகாலத்தில் வேகமாய் நடக்கக் கூடிய ஒரு மனிதனை ஒரு நாழிகை நடக்கச் செய்து, அதை ஒரு நாழிகை வழி தூரமென்றும், அந்த அளவைக்கொண்டு காதம், யோஜனை என்று கற்கள் நாட்டினார்கள். அதில் ஒரு பெண்பாலோ, அல்லது மந்த நடையுள்ள ஆண்பாலோ, வழிநடக்கில் கிரமமாய் ஏற்பட்ட ஒரு நாழிகை வழி, இவர்களுக்கு இரண்டு நாழிகை வழியாக ஆய்விடுவது சகஜம். இன்னும் ஓடுங்குதிரைக்கு, ஒரு நாழிகை வழியானது, கால் நாழிகையாக ஆவதும் சகஜம். ஆதலால் தத்துவம் ஒன்றுக்கு மேற்பட்டு, அவனவன் பக்குவத்திற்குத் தக்கவாறு, நிரம்பக் குறையவும், கூடவும் செய்யும். மைல் கல்லின் சித்தாந்தம், பொதுவாக எப்படி அமைக்கப்பட்டதோ, அதுபோலவே தத்துவங்களும், சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கின்றன. அன்றியும், குருமுகமன்னியில் சாஸ்திரங்களை ஆராய்ச்சி பண்ண, எந்தப்பக்குவியும், அருகனல்ல. ஆதலால், உத்தம விவேகத்தில் பிறந்த உனக்கு, சாஸ்திரங்களும், சந்நிபாதிகளும், பிரமிப்பை உண்டுபண்ணிவிட்டார்கள் என்பது

வாஸ்தவந்தான். அது தற்காலத்தில் உன்னைவிட்டு நீங்கி விட்டது என்று கேட்க எனக்கு ஆனந்தமே. எனினும், நீ சொல்லியவற்றில் கடைசியாய், எந்தக்குருவினிடத்தில் உடல், பொருள், ஆவி மூன்றும் தத்தம்பண்ணி, அதன் மூலமாய் ஞானத்தை அடையலாமென்று உரைத்த சாஸ்திரத்தின் அந்தப்பாகத்தில் நம்பிக்கை விழுந்ததோ, அந்த நம்பிக்கையே மறைந்தான் சிரேயசுக்கிடமாயிருக்கிறது. ஆதலின் அந்த நம்பிக்கையைக் கொண்டு உன் உடல், பொருள், ஆவி மூன்றையும் எனக்குத் தத்தம் பண்ணி நான் சொல்லும் வண்ணம் நடப்பாயாகில் நீ நிர்க்கதியாவது சத்தியமே. உன் அபிப்பிராயமென்ன?

நா:— சந்நிதானத்தின் கேள்வி, அடிமையின் பக்குவத்தை இன்னும் பரிசோதிப்பதாகவே உணர்கிறேன். என்னிடத்திலுள்ள உடல், பொருள், ஆவி மூன்றையும் தங்களுக்குத் தத்தம்பண்ணி தங்களிஷ்டம்போல என்னை நடக்கும்படி சொல்லி விலகிய விஷயத்தின் மர்மத்தைப் பின்னால் சொல்லிக்கேட்பதற்கு ஆவலுள்ளவனாயிருக்கிறேன். எனினும், எத்தனையோ தத்துவங்களால் என்னை யறியவிடாது தடுத்துக்கொண்டிருந்த கணக்கிலடங்காதவைகள் தங்கள் திருக்கரஸ்பர்சத்தினாலும், பரிசுத்தமான ஆசிர்வாதத்தினாலும், நேத்திர விக்ஷேபத்தினாலும், ஆகாய கங்கை வருஷித்தாற்போன்ற வேதாந்த அமிருத வசனத்தினாலும், என்னுடையது என்ற பல பேத பாவனைகளைச் சந்நிதானத்தின் கிருபாவேசத்தினால் ஆகருஷித்துக்கொண்டு, மீண்டும் என்னைத் தத்தம் பண்ணும்படி கேட்டுக்கொண்டால், ஏழையாகிய நான் எவ்வாறு பிரதியுத்தரம் சொல்ல மாட்டுவேன்? ஆதலின் இனிமேல் எனக்கு முன்னிலையாய் எந்தவஸ்துவும் தோன்றாதிருப்பதற்குள்ள பிரயத்தனத்தை நான் எடுத்துக்கொள்வதாயும் என்னை யறியாமலே சந்நிதானம் எல்லாவற்றையும் ஸ்வீகரித்து என்னைத் தன்னந்தனியே விட்டுவிட்டதாயும், சத்தியமாய்ச் சொல்வேன். ஏனென்றால் சந்நிதான தரிசனம் கிடைத்த நாள்முதல், அநேக க்ஷண பரியந்தம், என்னையே

நோக்கி அதன் விசாரணையிலேயே சந்நிதானத்தோடு ஆத்ம போதமுற்றுக் கலந்திருப்பதாலும், சந்நிதானம் சொல்லிய படி எந்த வஸ்துவையும் தற்காலம் அர்ப்பணஞ் செய்ய இட மில்லை என்பதை உறுதியாய்ச்சொல்வேன். இனிமேலும் என்னை மீண்டடையா வண்ணம் பன்முறை பிரார்த்திக்கின் றேன். அன்றியும், ஜீவகோடிகளுக்கு ஆகார பேதத்தினால் வயிறு கனதியாகத் தோற்றி, வைத்தியமுறையால் மலங் கழிந்த பின்னர், வயிற்றினுடையபிரக்ஞை எப்படி இராதோ, அதுபோலவும், நன்றாய் மென்று தின்னும் வஸ்துக்கள் பல் லிடுக்கில் புகுந்துகொண்டு பல்லின் மேல் பிரக்ஞை வைத் துச் சங்கடப்படும் ஒருவன், குச்சி என்னும் சாதனத்தால் அதை நிவிர்த்தி செய்து, பல்லின் பிரக்ஞையை இழந்து எவ்வாறு சாந்தியடைவானோ, அவ்வாறு எல்லாத் தத்துவங் களும் என்னைவிட்டகன்றும்ஹத்தான சாந்தியிலிருக்கிறேன்.

கு:— தாயே! நீ சூக்ஷ்ம புத்தியினால் ஆராய்ச்சிபண்ணி சுத்த அத்வைதமாய்ப் பேசும் இலக்ஷணம், மஹத்தான ஆனந் தத்தை விளைவிப்பதோடும், நான் உனக்குப் போதிக்கவேண் டிய விஷயங்கள் யாவையும், உன்னை வினவும் ஒவ்வொரு கேள்வியிலிருந்தும், நீயே தீர்மானித்துப் பிரஸ்தாபிப்பதை நான் அமிர்தமாய் உட்கொண்டு ஆனந்திக்கிறேன். ஆயி னும் நான் தத்தம் பண்ணும்படி கேட்டுக்கொண்ட உடல் பொருளாவி மூன்றின் மர்மமும், அதன் தத்தத்தால் என்ன பிரயோஜனமென்று என்னை வினவியபடியால் அதைப்பற்றி யுனக்குச்சொல்ல நினைக்கிறேன். ஆதலின், இந்திரிய நிக்ரஹ சக்தியுடன் கேட்டு உன் ஆராய்ச்சியையும் எனக்குச் சொல் லுவாயாக. பெண்ணே! உடலும், ஆவியும் மனத்தால் வந்ததேயாகும். உடல் மண்ணுக்கு இரையாகுமென்பதை யாவரும் அறிந்த விஷயம். பொருள் என்பது மனமென்று நீ அறிந்துகொள்வாயாக. ஷை மனத்தையும், ஆவியையும் எமன் கைப்பற்றுகிறான். மானிட ஜென்மத்தின் பெருமை என்னவெனில், மண்ணுக்கு இரையாகும் உடலில் மனம் பற்றுயிருக்கவும், எமனுக்கு இரையாகும் பொருளாவியை,

உன்னை யார் என்று உணர்ந்தாயோ, அதனிடத்தில் இரண்டறக்கலந்து வாழச்செய்வதே பெருந்த அறமாகும். ஆதலின் ஒருவாறு அதனை உணர்ந்தவிடத்தும், இந்த உடல், பொருள், ஆவியினிடத்தில் இருந்த வாத்ஸல்யம், தகுதியல்லவென பரிஷ்காரமாய்த் தோற்றினாலும், பழக்கவாசனையினால் அது உண்மைத் தத்துவத்தை மறைக்குமாதலின், பக்குவியாயுள்ள ஒரு சிஷ்யன் ஆசாரியனிடத்தில் சத்தியமாய் இதை அர்ப்பணஞ்செய்துவிடில், ஷை சத்தியத்தைத் தழுவும் சிஷ்யனது பக்தியின் விசேஷத்தினால், இந்த மூன்றினால் வருகிற லாப லோபங்கள், எவ்வளவு கடூரமாய்த்தன்னைப் பாதித்தாலும், ஷை சத்தியத்திற்குப்பயந்து உண்மைச் சிஷ்யன், வெறுக்கும்படி நேர்ந்து 'நானே பிர்மம்' என்று நீங்காதிருப்பான். இதுதான் இதன் குஹ்யம்.

நா:— ஹேப்பிரபோ! உலகத்தில் நாம ரூபத்தில் தென்படும் எந்த உயர்ந்த உணவும், புஜித்துப் போதுமென்று திருப்தியடைவது சகஜம். ஒரு குளத்தில் குடங்கொண்டு ஜலம் முகர்ந்தால் அதற்கும் அளவிருக்கிறது. உலகத்தில் எத்தனையோ ஜீவநதிகள் வற்றாது ஓடிச் சமுத்திரத்தில் பாய்ந்தும், அளவுக்கு மிஞ்சி பன்னிரண்டு மாதங்களிலும் மழை வர்ஷித்தாலும், அதையும் கிரஹித்துக்கொண்டு தன் சுபாவத்திலிருக்கும் கடலைப்போல தங்கள் அமிர்த வசனங்களாகிய மழைத்துளிகளை அன்னியமாய் ஒரு இடத்திலும் விடாமல், என்னுள்ளே கிரஹ்யம் பண்ணி வைத்துக்கொண்டும் நிறைந்து ததும்பாமலும், இன்னும் வர்ஷிப்பதை எதிர்பார்க்கிறேன். தவிரவும் என் ஆராய்ச்சியால் பேசும் விஷயங்கள் நீண்டோ அல்லது குருகியோ யிருப்பினும், ஒரு முறை மழை பெய்த பின்னர் சூல்கொண்ட மேகங்கள் வானத்தை அளாவியிருப்பின், அது பொழிவதை எதிர்பார்த்துத் தவளைகள் கத்துதலின் சுபாவத்தையொத்து, நான் உளறுகிறதாய் நினைக்கிறேன். ஆயினும், குரு சந்நதியின் காருண்யம் உவமைக்கடங்காததென நான் சொல்வேன். ஏனெனில் அநேக வியாதிகளால் பீடிக்கப்பட்டு வருந்துவதும், கடைசி

யாய் அக்கினிக்கோ, அல்லது மண்ணுக்கோ, இரையாகக் கூடிய உடலையும், சத்தியத்திற்கு விரோதமான போக போக்கியங்களை இச்சித்து அதனால் வருந்தும் மனத்தையும், எமனுக்குச் சதா பயப்படும்படி செய்யும் பிராணனையும், குருவுக்குக் கொடுத்ததென்றால் சிஷ்யனாகிய ஒருவனுக்கு என்ன நஷ்டம் நேரிடும்? இதில் எந்த மூடன்தான் மறுதலிப்பான்? அப்படி மறுதலிக்கக் கூடிய ஒரு ஜீவன் இருக்குமோ என்பதையும், எனக்கு விரித்துக் கூறப் பிரார்த்திக்கிறேன்.

கு:— அறிவிற் சிறந்த அரிவையே! நீ வினவிய கேள்விக்கு நான் சொல்லும் வசனங்களை ஆதரவுடன் கேட்பாயாக. உலகத்திலுள்ள ஜீவர்கள் சிலர் யாசிக்கும் நிலைமையில்லாத பக்ஷத்தில், தானஞ் செய்யும் பிரபுக்களிருப்பினும் தானம் பிரகாசிக்கவும் காரணமில்லை. ஆயினும் யாசகர்களால்தான், ஈகையுள்ளவர்களை உலகம் சுட்டிக்காட்டுகின்றது. அங்கது போல உண்மையில், ஞானத்தை அபேக்ஷிக்கும் சிஷ்யர்கள் இல்லாத பக்ஷத்தில், நீ சொல்லும் குருவின் கருணை ஒருக் காலத்திலும் பிரகாசியாது. இது நிற்க, உன்னுடைய மற்றொரு கேள்விக்குச் சமாதானம் கூறுவோம். உலகத்திலுள்ள ஜீவர்களுக்கு இயற்கையில் மூன்று மார்க்கங்களை அனுஷ்டிக்க ஹேதுகரமாயிருக்கிறது. அது பூர்வ ஜன்மாந்திரத்தில் செய்த புண்ணிய விசேஷத்திற்குத் தக்கவாறும், அறிவிற்கேற்றவாறும் இருக்கிறது. அவையாவன:— பாவம், புண்ணியம், ஞானம், ஆக மூன்று. அதில் புண்ணியம் இன்னதென அறியாது, (1.) பாவமே செய்து உடலை வளர்க்கும் தர்மத்தையுடையவர்களின் மார்க்கம், பாவமார்க்கமென்று கூறத்தகும். (2.) தான தர்மங்களைச் செய்து அஹிம்சா தர்மத்தை எடுத்துக்கொண்டு, யாகம், எக்யம் முதலான கருமங்களை அனுஷ்டிக்கும் தர்மத்தையுடையவர்களின் மார்க்கம், புண்ணிய மார்க்கமென்று மேலோர் கூறுவார்கள். (3) மேற்சொன்ன இரண்டையும் விட்டு நீ, தற்கால நிலையில், உன்னை ஆராய்ச்சிபண்ணிநிற்கும் முயற்சியிலுள்ளவர்களின் மார்க்கம், ஞானமார்க்கமென்றும், முக்தி

பார்க்கமென்றும், மோக்ஷமார்க்கமென்றும், உயர்ந்த சாதுக்கள் கூறுவார்கள். ஆதலின் மற்றிரண்டு மார்க்கத்திலுள்ளவர்கள் ஜீவத்தன்மையிலுள்ள என் போன்றவனை நீ, சாறு கறி யடைந்ததுபோல நாமரூபமுள்ள தெய்வங்களின் பிராப்தியினாலும், சொர்க்கம், கைலாசம் என்றும் நாமரூபமுள்ள போக இச்சையினால் பீடிக்கப்பட்ட புண்ணியமார்க்கத்தவர்களும், மிருகம் போல் காலத்தைக்கழித்து எமனுக்கிரையாகும் பாவமார்க்கத்தவர்களும் ஆக இரு கக்ஷியார்களும் என் பகிர்முக விகாரத்தைத் திருஷ்டியினால் விசாரித்து என்னிடம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் பண்ணமறியார்களென்பதை நீ நன்குணரக்கடவாய்.

நா:— சுவாமி! தங்கள் ஹிதோபதேசங்கள் மிகுந்த உற்சாகத்தை விளைவிக்கின்றன. நான் அறியவேண்டிய விஷயங்கள் அநேகமிருப்பினும், தற்காலத்தில் நானிருக்கும் எல்லையில் விளையும் சத்துருக்களை ஆராய்ச்சி பண்ணி அவற்றை நிவிர்த்திக்க முயலுகின்றனேன். ஏனெனில் தங்கள் சன்னதியில் நானிருக்கும்வரை எனக்கு முன்னிலையில்லாதொன்றும் தோன்றுவண்ணமாயும், சன்னதி விலகிய பின்னர், இந்திரியங்கள் வாயிலாயும், மனோவாயிலாயும் அநேக இடையூறுகள் நான் அறிந்தவாறு நிற்கமுடியாமல் மறக்கச் செய்யும் வன்மையினால் இவைகளை ஒவ்வொன்றாய் விசாரித்து, சிந்தனை பண்ணித் தள்ளினாலன்றி அவற்றின் இடையூறுகளைச் சகித்தல் அசாத்தியமெனத் தோற்றி, நான் விசாரிக்கப்புகின், சரீரம் நான் அல்லவென்று கண்டித்து நிவிர்த்திக்கின்றேன். எப்படி யென்னில், எத்தனையோ சரீரங்கள் இறந்து கிடப்பதை நான் பிரத்தியக்ஷத்தில் பார்த்திருக்கின்றேன். அக்காலத்தில் அச்சரீரம் 'நான்' என்று சொல்ல முடியாததின் நிமித்தம் இந்தச் சரீரம் நான் அல்லவென்று கடந்தேன். அதன் பின்னர், ஐம்புலன்கள் எனைவழிமறித்துக்கொள்ள அதைத் தீர விசாரித்து அவைகள் உலக வியாபாரத்தை நடத்தும் சக்தி உடையன அல்லவென்றும், ஞானேந்திரியங்கள்ஐந்துக்கும், ஐந்துஜன்னல்களாய் அமைக்

கப்பட்டு ஞானேந்திரியங்களே உலகத்திற்கு வழிகாட்டுகின்றனவென்றும், இறந்துபோன பிரேதத்தின் மூலமாய்த் தீர்மானித்து அதுவும் நானல்லவென்று சங்கை அறக்கடந்தேன். அப்பால் செல்லுங்கால், ஞானேந்திரியங்கள் ஐந்தால் வழிமறிக்கப்பட்டேன். அவற்றை விசாரிக்குங்காலத்தில் அவை சுயமாய்த் தன் தன் தொழிலைச்செய்யச் சக்தியற்று இருக்கின்றனவெனக் கண்டேன். அது எப்படியெனில், ஒரு ஜீவன் வழி நடக்குங்கால், அவனுடைய மனம் ஒன்றில் ஆலோசனை செய்துகொண்டு அவன் வழி நடந்தால் ஞானேந்திரியங்கள் அவனிடத்திலிருந்தும், எதிர் வருகிற மனிதனையாவது பின்னால் தன்னைக் கூப்பிடுகிற மனிதனையாவது கவனிக்கமுடியாமல் போவது ஜீவசுபாவமாயிருக்கிறது. அதை விசாரிக்கப்புகின் மனம்பற்றினாலன்றி ஞானேந்திரிகளுக்கு யாதொரு யோக்யதையுமில்லையெனத்தீர்மானித்து, அவற்றையும் நானல்லவென்று கண்டித்து அப்பால் சென்றேன். அதன் பின்னர் மனம் வழிமறித்து, நானே நீ என்று மயக்கும் சில காரணங்கள் தென்பட்டன. அதாவது இந்தச் சரீரத்தினிடத்தில் ஸ்பரிச உணர்ச்சியால் எங்கும் வியாபகமாய் மனம் இருப்பதனாலும், மனமயர்ந்தவிடத்தில் உலகம் இல்லாமலுமிருக்க அனுபவிப்பதால், கிஞ்சிற்று சங்கையுற்று அதை நீக்குகிறதற்கு ஆழ்ந்த யோஜனைசெய்து பார்த்தேன். பகீரதன் கங்கை கொண்டு வந்த மொழிக்கிணங்க அதை நீக்குவதற்குத் தத்துவ ஆராய்ச்சியில் மிகுந்த சிரமப்பட்டேன். அப்பால் சந்நிதானத்தை நோக்கித் திருவருள் பாலிக்கக்கருதி அந்த இளைப்பினால் அயர்ந்து நித்திரைபோய் விட்டேன். அந்த நித்திரையில் சந்நிதானந்தோன்றி என்னை ஆசீர்வதித்து, 'நீ இனி தெளியக்கடவாய்' என்று என்னை ஆறுதல் செய்ததாய் சொப்பனங் கண்டு திடீரென்று நித்திரை தெளிந்து நான் நின்ற ஆராய்ச்சி யென்னுமிடத்திற்கே மீண்டும் வந்து சொப்பனத்தை யோஜித்தேன். அதன் முடிவென்னவெனில் நித்திரையில் மனதோடு ஐந்து இந்திரியங்களும் இறந்து கிடக்க, ஜாக்கிரம்போல் சொப்பனத்தில்

தந்திரமாய் விளையக்காரனை மென்னையென்று நோக்கப் புகுந்தவெனக்கு அடியில் வருமாறு விளங்கியது. அது வல்லவெளியில், மேலே சொன்ன ஆறு இந்திரியங்களால் கற்பித்த உலகம் என்னும் கொட்டகையில் விளையாடிய ஆட்டம் அம்பலமாயும், உலகத்தை மறைத்து அந்தர் முகத்தில் விளையாடும் இந்த சொப்பனம் அறையினுட்டமென்றும் நிர்மாலித்தபோதும், இந்த அறையினுட்டம் இரகசியமாய்நடந்திருந்தும், அக்காலத்தில் ஆறு இந்திரியங்களால் நித்திரையென்னும் போகத்திலிருக்க, விழித்தபின்னர் அச்சொப்பன ஆட்டத்தை அக்காலத்தில் கண்டிருப்பது யாராயிருக்கலாமென நோக்கப் புகுந்த மாத்திரத்தில், மனம் தலைகுனிந்து நிற்கப்பார்த்த நான் அதுவும் நான் அல்லவென்று நிர்மாலித்து, பின் நான் என்பது யாவன் என உசாவும் சமயத்தில் வேறு ஒன்றும் முன்னிலையில் விவகரிக்க நேராமையாலும், விவகரித்துக் கண்டித்த வஸ்து நானாகவே இருப்பதாலும், சந்நிதானத்தின் பிரத்தியக்ஷத்தில் உணர்ந்தபடியே நான் மீண்டும் அந்தப்பதத்தில் அமர்ந்தேன். இதினிடையில் நான், தத்துவம் 96 இருக்கலாமெனத் தீர்மானித்தேன். ஆனால் எனக்கு 12 தத்துவங்களே சத்துருவாய் நின்றனவென்றும், அவற்றை நான் கண்டித்து நீக்கினது மெய்யேயெனினும் மீண்டும் வாதையில்லாமல் இருக்கக்கூடுமென நிச்சயமாகச் சொல்ல முடியாதவளாயுமிருக்கிறேன். ஆதலால் என் உடல், பொருள் ஆவி மூன்றையும் நானாகக்கொடுத்தாலும், சக்தியின் வலுவால் எடுத்துக்கொண்டாலும், நான் இனி விரும்புவதில்லையெனச் சத்தியமாய்ப் பிரதிக்ஞை பண்ணும் எனக்கு, நான் குறிப்பிட்ட 12 தத்துவங்களையோ அல்லது கூடுதலாயுள்ளவைகளையோ என்னைவிட்டு நீங்குவதற்குரிய உபாயத்தைக்காட்டி என்னை ஈடேற்றும் கடமை அவ்விடத்திற்கே.

கு:— ஏ! என்னருமைக்குழந்தாய்! உனக்குக் கிஞ்சித்தும் கவலை வேண்டாம். மோக்ஷத்துக்குரியவள் நீயே. எக்காரணத்தினாலோ உனக்கு பெண்ணுருவம் நேர்ந்தது. உன் அறி

வின் விசேஷத்தை என்றால் சொல்லமுடியாது. ஆயினும் உன்னுடைய நாமதேயம் வேதமாதாவாகிய காயத்திரி என்று பெயரால் உன்னை இனி அழைக்கத்திருப்தி அடைகின்றேன். ஆகையால் உன் விசனத்தை விட்டுவிடு. இன்னும் சிஷ்யர்களுக்கு இரண்டு நியாயங்களுண்டு. அவை என்னவெனில் மர்க்கடம் என்றும், மார்ச்சாலம் என்றும் சொல்லிய இரண்டில் மர்க்கட நியாயமே விசேஷம். இந்த விசேஷத்தின் நியாயமாவது குரங்கு தன் குட்டியைக் கவனிக்காது குட்டி தன் தாயாகிய குரங்கைப்பற்றியே தன் ஜீவனையும் வளர்த்துக்கொண்டு தன் தாயின் உயர்ந்த சுபாவத்தைத்தானாகவே, பற்றிய பற்று விடாமல் அடைந்து, தான் பெருங்குரங்காகி அதற்கப்பால் பற்றைவிடுகிறது. மற்றொன்று பூனையானது தானே தன் குட்டியைக் கருதி அதற்குரிய போஷணைகளைச் செய்து வயது வந்த பின்னர் பெரும்பூனையாக்கி தாய்ப்பூனை விடுகிறது. இவ்விரண்டில் உத்தமமான, மர்க்கட நியாயத்தைப் பெற்ற சிஷ்யப்பெண்ணாய் எனக்கமைந்ததைப்பற்றி நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். தவிரவும் மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என் சிஷ்யர்களுக்கு நான்கு பக்குவங்களும் உண்டு. இந்த நான்கில் உத்தமமான தீவிரதரப் பக்குவியாயுமிருக்கின்றனை. உன்னை ஈடேற்றுவதில் எனக்கு ஓர் சிரமுமில்லை. நீ மோக்ஷத்தில் ஜீவனோடு வசிப்பாயென்பது சத்தியமே. குறளிலும்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."

என்றபடி உன்னுடைய மனோ பாவம் ஒத்திருக்கிறது.

காயத்திரி:— என்னையாளும் சற்குரு சுவாமி! வேதாந்தவிசாரம் உதித்த பின்னர் உலகத்தில் நாமத்தை மாற்றுகிறது சுபாவமாயிருக்கிறதே. அதன் காரணமும், இன்னும் நான் அறிய வேண்டிய விஷயங்களையும் திருவுளம்பற்றுமாறு பிரார்த்திக்கின்றேன்.

கு:— ஹே! அன்பென்னும் அணிகலமே! நீ ஆராய்ச்சி பண்ணிய தத்துவங்களைத்தவிர, வேறு தத்துவங்களிருப்பினும்

அவைகளெல்லாம் பிரம்பச் சிற்ப்பட்டவைகளாதலால் அனி வோரயுள்ள தத்துவங்களைக் கண்டு, அதை வெட்டமுயன்று விட்டபடியால், மற்றெனைய தத்துவங்கள், அதில் விளைந்த இலை, பூ, பிஞ்சு, காய், கனியை யொத்ததேயாகும். எனி னும், நீ விசாரணை பண்ணி நீக்கிய தத்துவங்கள் உன் கண் டனைக்குக் கட்டுப்பட்டு இருக்கவேண்டுமானால் நீ பெருத்த வைராக்கியத்தை வளர்க்கவேண்டும். வைராக்கியம் வர வேண்டுமென்றால் மெய், பொய் என்ற இரண்டு மாத்திரம் உணர்ந்து நீக்குதல் போதா. அத்துடன் ஷை தத்துவங் களில் என்ன தோஷமிருக்கிறதென்று விசாரிக்கப்புகின், தோஷத்தால் மனவெறுப்புண்டாகி மனப்பற்று அறும். ஆதலால், நீயாகவே ஒவ்வொன்றிலும் உள்ள தோஷத்தை விசாரிப்பாயாக. இது நிற்க, நாமத்தை மாற்றுவதிலிருந்து பெருத்த லாபம் இல்லாவிடினும் முன் பெயர் அழிந்ததின் காரணத்தையும், நவீனப்பெயரின் தத்துவத்தையும் ஆலோ சித்து, முன்னின்ற இடத்தை மாற்றுவதற்கு, ஓர் பிரக்ஞை யை யுண்டுபண்ணி, ஊக்கம் விளைவதற்கு அறிகுறியாயிருக் கிறது. அதற்கு மேற்கோள்:— திருவாசகம்:—

"முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள், மூர்த்தி அவ னிருக்கும் வண்ணங் கேட்டாள், பின்னும் அவனுடைய ஆரூர் கேட்டாள் பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள், அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள், அகன்றாள் அகலிடத்தே ஆசாரத்தை, தன்னை மறந்தாள் தன் நாமங் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவன்றாளே." என்ற படி உன் நாமத்தைக் கெடுத்து, வைராக்கியத்தை வளர்க் கக்கடவாய்.

சரீர தூஷணை;—

கா:— பிரபு! ஆக்ஞைப்பிரகாரம் ஆலோசனை செய்ததில் இந்த சரீரலாவண்யத்தில், ஸ்திரீகள் புருஷனைக் கண்டு மோகித்த லும், புருஷர்கள் ஸ்திரீகளைக் கண்டு மோகித்தலும், ஷை மோகத்தால் ஸம்யோகப்பிராப்தி யடைந்து அதில் விளையும்

சுகத்தால் சரீரத்தை அபிமானித்து வருகிறார்கள். இது முற்றிலும் மிருகத்தன்மையாகும். எதெனனில் பரஸ்பரம் ஸ்திரீ புருஷர்கள் தழுவுவதில் சுகமுண்டென்னில் கிஞ்சித் தும் பலமாய் இறுக்கிக் கட்டிக்கொண்டால் துக்கத்தை விளைவிக்கிறது. தவிரவும் ஒரு புருஷன் ஸ்திரீயின் காதலினால் இரவு முழுதும் ஆலிங்கன வையோக மயமாய்க் காலங் கழிக்க வேண்டுமென்று கருதுகிறவன், ரதிமுடிந்த பின்னர் அதற்கு மாறாய் வெறுப்பினால் பிரத்தியேகப்பட எத்தனிக் கிறான். ஆதலில் இந்த சுகமானது ரூபலாவண்யத்தை மன தில் அனுசந்தானம்பண்ணி அதன் மூலமாய்க் காதல் விருத் தியாகி, அதன் துவாராசுகமுண்டாவதால், இந்தச்சுகம் சரீர சம்யோகத்தினால் உண்டானதில்லையென்றும் மனத்தின் கற் பனையால் விளைகிறதென்றும் நன்றாய்த் தீர்மானித்தேன் இதற்கோர் திருஷ்டாந்தமுண்டு. என்னவெனில், ஒரு புரு ஷன் ஒரு ஸ்திரீயினிடத்தில் காதலடைந்து, அந்த ஸ்திரீ அன்னிய புருஷனுக்குப்பாத்தியப்பட்டவளாயிருந்து, அந்த ஸ்திரீயை அனுபவிக்கக் கருதி தனக்கு வேண்டிய ஒரு தூத னால் தனித்த இடத்திற்கு இராத்திரி பன்னிரண்டு மணிக்கு வரும்படியான ஏற்பாட்டை செய்கிறான். அதற்கு அந்தத் தூதன் இவனுடைய கொடிய காமத்தை அறிந்து, புத்திகற் பிக்கும்பொருட்டு; யௌவன புருஷனாகிய ஓர் வஸ்தாதை, பெண் வேடந்தரித்து வரச்செய்து அந்தத் தனித்தவிடத் திற்குச் சென்று வாய்ச்சரசம், கைச்சரசம் வரை எவ் வளவு திருப்தியை அடைய வேண்டுமோ அவ்வளவு திருப்தி யடைந்து அதி மோகத்துடன் கட்டிக்கொண்டு, ரதிக்கு ஆரம்பிக்கும் கால் அதுவரையும் அடைந்த திருப்தி என்ன மாய் மாறுகிறது என்ற அவஸ்தையை நோக்குங்கால், அந்த சரீரத்தினிடத்தும் சுகம் ஒருக்காலும் கிடையாதென்றும், மனத்தின் கற்பனையேயென்றும், அப்படியடையும் ரதியின் சுகம் சரீர கர்மத்தின் எடைக்கு ஆயிரமடங்கு குறைந்த தென்றும், அதற்குக் காரணமாயுள்ள மனோ கற்பனையின் காதலாகிலும், ஒரு இடத்தில் எப்பொழுதும் உள்ளதா

வெளியில் மாறிவிடக்கூடியதென்றும் சத்தியமாயுணர்த்தேன். (உ.) இந்த சரீரத்தில் சுகம் இல்லாவிடினும் துக்கமில்லாமலாவது இருக்கிறதாவென்று நோக்குங்கால், இது துக்கம் விளைவதற்கே காரணமாயிருக்கிறது. எனெனில் இந்தச் சரீரம் பால்யம், யௌவனம், கௌமாரம், விருத்தாப்பியம் என நான்கு அவஸ்தைகளை உடைத்தாயிருக்கிறது. பிரதம அவஸ்தையிலும், கர்ப்பவாசத்திலும் நரகலால் பூசப்பட்டு வளர்ந்த சரீரமென நன்குணரலாம். பாலாரிஷ்டம், காப்பாநென்றும் சில அசிங்கமான வியாதிகளால் பிடிக்கப்பட்டுக் கடர்தலைப் பார்க்கலாம். தவிரவும், இந்தச் சரீரமானது தோல், நரம்பு, இரத்தம், மாமிசம், எலும்புகளால் அமைப்பெற்றது. இத்துடன் உலகத்தில் எத்தனை சிக்குகள் காணப்படுமோ, அவைகள் எல்லாம் நிறைந்து, அது ஒவ்வொன்றாய்ப்பிரகாசிக்குங்காலத்திலும், அதன் கொடுமையால் துக்கிப்பது மன்றி, அங்க ஹீனம் நேரும்படியான சிக்குகள் வரில், அது அபாரமான துக்கத்தையும் தருகின்றது. இவற்றையெல்லாம் கவனியாதிருந்தாலும் யௌவனத்தில் உன் மத்தத்தால் சரீர சம்பந்தப்பட்டவளா பூரண திருப்தியையும், கௌமாரத்தில் திருப்தியின் வாசனையையும், விருத்தாப்பியத்தில் பெருத்த துக்கத்தையும் விளைவிக்கக்கூடிய இந்தச் சரீரம் முழுதும் துக்கம் நிறைந்ததே யன்றி மேற்சொல்லிய நான்கு அவஸ்தைகளினாலும் மாறுதலடையும் சுபாபமாயிருக்கிறது பற்றியும், இதில் பற்று வைத்தல் எக்காலத்திலும், எவ்விடத்திலும், எச்சந்தர்ப்பத்திலும் துக்கமெனச் சொல்வதில் யாதொரு சந்தேகமுமில்லை. (3) ஆரம்பத்தில் சொன்னபடி இன்பம் இல்லாவிடினும் துக்கத்தோடு மாத்திரம் இருக்கிறதாவென்னில் அப்படியுமல்ல. நாம் உலகத்தில் நடந்துகொள்ளும் ஆசார முறைக்கும் மனப்பாங்கிற்கும் விரோதமாயும் இருக்கிறது. என்னவென ஆலோஜிக்கும் பக்ஷத்தில், இதன் சிநேகம் நாம் நடந்துகொள்ளும் தர்மத்திற்கு முற்றிலும் விரோதமாயும், அசிங்கமாயும், அநாகரீகமாயும் இருப்பதால் இதை வெறுக்கத்தக்கதேயாம். எனெ

னில் சகஜமாய் அடிக்கடி வெளி யேறும் மனுஷ ஜன்மத்துக்குள்ள இரண்டு மலங்களில் நமக்கு வாஞ்சை கிடையாது. அதைச் சேகரித்து வைத்திருப்பதும், அதை விளைவிப்பது மான இந்தச் சரீரத்தில் வாஞ்சை வைத்தல் கூடாது. ஒருக்கால் இது சரீரத்துக்குள் நமது திருஷ்டிக்குத்தென்படாமல் அம்மலங்கள் உற்பத்தியாகி விசர்ஜிப்பதாயிருக்கிறது என்று நினைத்துத்தள்ள முடியாது. இவ்விடத்தில் மலத்தால் நிறைந்த ஓர் பாட்டிலைச் சீல் பண்ணி ஒருவன் கையில் கொடுத்து அதை ஓர் அபூர்வ லேகியமெனக்கொண்டுபோகச் செய்தால் அந்த லேகியத்தின் தத்துவம் அறிகிற பரியந்தம் பாட்டிலைக் கையில் பிடித்துச் செல்லுவான். அதன் உளவு தெரிந்த அவன் மித்திரன் அதைத் திறந்து காட்டி அவனை முகரச்செய்தால் அவன் அபிமானித்துத் தூக்கிச் சென்ற பாட்டிலின் கெதியும், லேகியத்தின் கெதியும் என்னவாகும் என்று நிதானிக்கில், இந்தச் சரீரம் வெறுக்கத்தக்கதே. இன்னமும் பிரத்தியக்ஷமாய் வியர்வை கிளம்பி அவ்வியர்வையின் நாற்றம் காற்றின் சுபாவத்தால் அபூர்வமாய்த் தன்மூக்குக்கேறி ஜீவர்கள் வருந்துவதும சகஜம். இன்னமும் வியர்வைக்கும் மூத்திரத்திற்கும் யாதொரு வித்தியாசமுமில்லை. மூத்திரமும் உப்பே. வியர்வையும் உப்பே. அது வஸ்திரத்தால் மறைத்து ஓர் சிறு குழாயின் வழியாய் வருவதும், வியர்வை பாதமுதல் கேசம் வரை பனித்துளிகள்போல் உரோமக்கால்களின் வழியே வருவதுமான இட வித்தியாசத்தைத் தவிர வேறு வித்தியாசமில்லை. இதுவே அநாகரீகம்; இதுவே ஆசாரக்குறைவு; இதுவே மலத்தின் பற்று. ஆதலால் முக்காலத்திலும் வெறுக்கத்தக்கதேயாம். மனுஷ தர்மத்திற்கும் விரோதமென்றும் சொல்லமரம். அதென்னவெனில், இயற்கையில் ஜீவர்கள் சுசிகரமில்லாத ஜீவர்களை எட்ட வைத்துப்பேசுவது வழக்கம். போஜன காலத்தில் அமேத்தியத்தைத் திருஷ்டிக்குப் படுமாறுவது அந்த வார்த்தை காதில் விழும்படியாவது கேட்பதில் வெறுப்பாகும். தான் வசிக்கும் கிரஹத்தில் அசுத்தமாய் இருந்தாலும்,

வெறுப்பே! நாலாவது, நான் வசிக்கும் குடும்பத்தில் ஆண்,
பெண்கள், அழுக்கு வஸ்திரம் தரிப்பதிலும் வெறுப்பே
யாகும். வழி நடையில் சண்டாளன் நெருங்கி வந்தாலும்
வெறுப்பு. மற்றேனைய துர்க்கந்தங்கள் திருஷ்டிக்குத்தென்
பட்டாலாவது, முகர்ந்தாலாவது வெறுப்பு. ஆகையால்
இந்தச் சரீரப்பற்று அநாசாரம். (4) இன்னும் நாம் உயர்ந்த
உத்தியோகத்திலிருக்க, நம்முடைய சகோதரன் கோயில்
பரிசாரகனாயிருந்தால் அவனை சகோதரனென்று சொல்லவா
வது, பந்து என்று சொல்லவுங்கூட இஷ்டமில்லாமல் அவன்
யாரோ என்று சொல்லுகிறது சுபாவம். இன்னும் தன்
ஜாதியை உயர்த்தியும். மற்றொரு ஜாதியை தாழ்த்தியும் நம்
முடைய அந்தஸ்தை உயர்த்திக்கொள்ளல் சுபாவமும். ஆதலி
னால் இந்தச் சரீரத்தின் ஸ்நேகம் அகௌரவம். மேற்சொல்
லிய இத்தனை காரணங்களாலும், நான் என்று சொல்லப்
பொருந்தாமையாலும், சார்வதமில்லாமையாலும் இந்தச்
சரீரத்தின் பற்றை இனி நீக்கிவிடுவேன்.

"ஐம்புலன்களின் தூஷணை:—"

புலன்களை விசாரிக்குமிடத்து, காமலாகிரிகொண்டவர்கள்
மனதை, உற்சாகப்படுத்தும்பொருட்டுப் புலவர்கள் தன்வித
வத்தென்னும் திறமையால், ஒவ்வொரு புலன்களையும் வாசா
மாத்திரமாய்க் கவிகளால் வர்ணித்ததைத் தவிர வேறு சுக
மில்லை. கட்புலனானது ரூப இந்திரியம் மறைந்தும் அழகா
யிருந்தல் கூடும் ஆதலால் சார்வதமல்ல. இன்னும் ஷை
புலன்களைந்திலும் மூக்கில் சளியும், கண்ணில் பீளையும்,
காதில் குறும்பையும், நாக்கில் கோழையும் அடங்கி அதில்
இருந்து வெளியாவது நாம் அடிக்கடி நோக்கியிருப்பதால்,
நாம் அனுஷ்டித்து வரும் ஆசாரத்துக்கும், நாகரீகத்துக்கும்
விரோதமாயும், அசிங்கமாயும் இருப்பதால் இவைகளையும்
வெறுக்கத்தக்கதுதான் என்று தீர்மானித்தேன்.

"ஞானேந்திரியங்களின் தூஷணை:—"

ஷை ஞானேந்திரியங்களைந்தும் ஒரு காலத்திலிருப்பதும்,
ஒரு காலத்தில் இறப்பதுமான சுபாவத்திலிருப்பதாலும்,
மனத்தின் கர்த்திருத்வமன்றி தனக்கென ஓர் செயலுமில்லா

புளிருப்பதாலும் மேலே சொல்லிய ஐம்புலன்களின் மலர்த்தில் சம்ஸர்க்கஞ் செய்துகொண்டிருப்பதாலும் அசுத்தமும் இவருக்கு நுக்கதே.

"மனத்தின் தூஷணை:—"

மனமானது சங்கல்ப விகல்பதொழிலுள்ளதாயும், சரீரத்தைதோர் விருக்ஷமாகவும் கருதிவருகிறது. எப்படியென்றால் பறவைகளானவை விருக்ஷத்தைத் தங்களுக்குக் கிரஹமாய் வைத்துக்கொண்டும், அதில் பழம் யேற்படும் காலத்தில் நின்றுகொண்டும், அதை வெட்டிச்சாய்க்கும் காலத்தில்கிஞ்சித்தும் நன்றி இழந்து துக்கமின்றி வேறோர் மரத்தை எப்படி அடைகின்றனவோ, அதுபோலவே இந்தத் தேகம் மரிக்கும் காலத்தில் வேறோர் தேகத்தைப் பிடித்துக்கொள்ளும் சுபாவமாயிருக்கிறது. அன்றியும் குறிப்பிட்ட வஸ்துச்சுகத்திலும் நிலைத்திராமல் மாறுதலடையுந் தன்மையுள்ளதாயும் இருக்கின்றது! இன்னும் பற்றுகிறதற்கும், விடுகிறதற்கும் கால வரம்பு அற்றதாயும் இருக்கிறது. இன்னும் பொய்யில் பிரியமும்,சத்தியத்தில் அப்பிரியமும் காட்டுகின்றது. வியக்தமாய்ச்சொல்லுமிடத்து குரங்கின் சுபாவமே பூராவும் நிறைந்ததாயிருக்கிறது. எப்படியெனில் இரவு, பகல் இரண்டு காலங்களிலும், கொம்பைவிட்டுக் கொம்பு தாவுவதுபோல இந்த மனமும் ஒவ்வொருவிஷயத்திலும் தாவிக்கொண்டிருத்தல் சகஜமாயிருக்கிறது. குரங்காகிலும் ஒரு காலம் நித்திரை செய்யும். இந்த மனம் நித்திரை செய்வது பல காட்களில் ஒரு காலமிருக்கலாம். அது எப்படியெனில் ஜாக்கிர சொப்பன அவஸ்தைத இவ்விரண்டும் நீக்கி சுஷுப்தி அவஸ்தையையே மனம் அயர்ந்ததாகையால் இது மனத்தின் தொழிலுக்கு அபூர்வம். ஆனால் சொப்பனவஸ்தையிலும் இந்திரியங்களைத் தான் இழுத்துக்கொண்டு தூங்குவதாக உலகத்திற்குக் காட்டி அந்தர் முகத்தில் விளையாடிக்கொண்டிருக்கும் சொப்பனவஸ்தையான கபடத்தில் தீரமானது அன்றியும் பெரிதைச் சிறிதாக்கியும், சிறிதைப் பெரிதாக்கியும்,

பொய்மையை மெய்யாக்கியும், மெய்யை பொய்யாக்கியும் இது போல் மற்றேனைய விஷயங்கள் அடங்கிய விபரீதத் தன்மையில் பிறப்புற்றிருப்பதோடும், மேலேசொன்னசரீரமுதல் இந்திரியங்கள் வரை தன்வயப்படுத்திக்கொண்டும், தான் எஜமானனாகவும், தனக்கன்னியமாயிருக்கும்சத்தியமான ஓர்எஜமானனை மறைத்து இந்தச் சரீரத்தில் மேலே பிரஸ்தாபித்தபடி நிந்திக்கக் கூடிய போக இச்சைகளுக்கு காரணமாயும் இருந்துகொண்டு, காம வேட்டையென்னும் லீலபுரிவதால் இந்த மனத்தையும் வெறுக்கத்தக்கதென உணர்ந்தேன். இனி நான் இவ்வாறு நிந்தித்துத் தள்ளியதுசத்தியமாயினும் இன்னும் நான் எடுத்துக்கொண்ட தத்துவ மார்க்கத்தில் பூரணமாய்ச் சோதித்துத் தள்ளத் தவறி இருப்பின், அதை எடுத்துக் காட்டிப் போதித்தருளுமாறு அடிபணிகிறேன்.

கு:— அம்மை! மெத்த வியப்படைந்தேன். உன் ஆராய்ச்சிக்கு யார் நிகர்? வசிஷ்டர் முன்னின்ற ராமனை ஒப்பாவாய். உட்கார் கடைசியாய் எந்த வஸ்து உண்மையை மறைத்துக் காட்டும் சுபாவத்தில் நீரமுடையதென வியந்து அதிந்தனையோ, அந்த வஸ்துவினிடத்தே புதைந்து கிடக்கிற சில தத்துவங்களை உன்னை ஆராய்ச்சிபண்ணவொட்டாது மயக்கியதைப்பற்றி ஒரு விதத்தில் சந்துஷ்டியும், ஒரு விதத்தில் துக்கமும் அடைகிறேன். இது எதுபோலிருக்கிறதென்றால் மகா பாரதத்தில் பீமனும், துரியோதனனும் கடைசியாகக் கெதாயுத்தம் செய்யுங்காலத்தில் வெகுநேரம் யுத்தஞ்செய்து ஒருவரை யொருவர் கொல்லமுடியாமல் தம் தம் உயிர்நிலை தெரியாது யுத்தஞ்செய்கிறதென பீமனுக்குப்பரம ஆசிரியனும், பரமாத்மாவுமான ஸ்ரீ கிருஷ்ணபகவான் சன்னதியில் பேசிக்கொண்டுயுத்தஞ்செய்ய ஆரம்பித்தார்கள். அக்காலையில் பீமசேனன்சத்தியமாய்த்தன்னுயிர்நிலையைச்சொல்லியுத்தஞ் செய்தான். துரியோதனனோ அசத்தியமாய்த் தன்னுயிர் நிலையை மாறுதலாய்ச்சொல்லி யுத்தஞ்செய்தான். அந்தயுத்தத்தில் பீமசேனன், துரியோதனனே சொன்ன உயிர்நிலையை நம்பித்தன் கெதையால் எத்தனை அடி அடித்தாலும் மூர்ச்சை

அடையவில்லை. பீமனோவென்னில் சத்தியஞ்சொன்னதினால் துரியோதனன் அடியால்மூர்ச்சையடைந்து இரண்டுமுறை தெளிந்துமீண்டும்துரியோதனனை அடிக்க கதையைசுழற்றுங்காலத்தில் 'பலே பீமா' என்று கிருஷ்ணபரமாத்மா தன் தொடையைத்தட்டிக்காண்பித்தார். உடனே அதனைக்குறிப்பினாலறிந்த பீமன் துரியோதனன் தொடையிலடிக்க, மூர்ச்சித்துவிழுந்தான் என்ற கதைபோல், ஆரம்பத்தில் உன்னைத் தனித்த நிலையில் விசாரித்து அதன் பின்னர் அதை மறைத்திருக்கும் தத்துவங்களாகிய சரீரமுதலுள்ளவைகளைவிசாரிக்கப்புகுந்த உனக்கு, மறைத்த தத்துவங்களின் எஜமானனாகிய மனம் துரியோதனனைப் போல தன்னையே காட்டி தன் அந்தரங்கப்படைகளை மறைத்து மோசம் செய்துவிட்டது; இது இன்னும் எவ்வாறு ஒக்குமெனில். தீபமில்லாமல் படுக்கையில் படுத்திருக்கும் ஒருவனை மூட்டைப்பூச்சிகள் நிர்ப்பந்திக்கும் சமயத்தில், அவைகளைக் கொல்லவேண்டுமென்ற நோக்கத்தோடு தீபத்தை ஏற்றியவுடன், மூட்டைப்பூச்சிகள் எவ்வளவு சீக்கிரத்தில் மறைவது சகஜமோ, அதுபோல நான் என்னும் விளக்கைக் கையில் பிடித்த உனக்கு மனதோடு உறையும் தத்துவங்கள் மறைந்துவிட்டன ஆயினும் இது சகஜம். இவ்வளவு அறிதலே அசாத்தியம். இனி மறைந்து கிடக்கும் தத்துவங்களை கிருஷ்ண பரமாத்மா பீமனுக்குக் காட்டியதுபோல் நான் உனக்குக் காட்டுகிறேன்.' அதை சாவதான மனத்துடன் கேட்டு, கொல்லுவாயாக.

காயத்திரி:— சுவாமி! சந்நிதான உத்திரவை சிரமேற்கொண்டேன். இந்தவிடத்தில் அடியாளொன்று தெரிவிக்க விரும்புகிறேன். அதில் குற்றமிருந்தால் க்ஷமிக்கவேண்டும். சந்நதியில் கூறிய, பாரதத்தில் கிருஷ்ணபரமாத்மாவின் சிஷ்யனாகிய அர்ச்சுனன் தன் புதல்வன் அபிமன்யுவைக் கொன்ற ஜெயத்திரதனை அஸ்தமனத்துக்குள் கொல்வதாய் பிரதிக்ஞை செய்து காலைமுதல் மணி மூன்றுவரை கால் வரிசை சைந்நியத்தை வெற்றி செய்து தாண்டியிருப்பதைக்கண்ட

பராக்ரம, பக்தி சைந்யத்தை வெற்றி செய்வதற்குத் தன்னுடைய பக்தன் சிரமமாய் வெற்றிசெய்ய நேரம்போதாதென்று நினைத்துத் தன் சக்கரத்தால் சூரியனைக்கிஞ்சித்துக் கிஞ்சித்தாய் மறைத்துக் கடைசியாக அஸ்தமனமானதாகக் காட்டி, ஜெயத்ரதன் நிர்ப்பயமாய் வெளியேற அர்ச்சுனன் அக்னியில் பிரவேசிப்பதை எக்களிப்போடு நெருங்கிநோக்கும் சமயத்தில், தன் சக்கரத்தை கிரஹித்து சூரியனையும், ஜயத்ரதனையும் சுட்டிக்காட்டி பிரதிக்ஞையை நிறைவேற்றியதுபோல், சரணாகதியென்று நம்பிய எனக்கு ஆத்மாவுக்குச் சமீபத்திலுள்ள அந்தக் கரணம் நான்கையும் வெளிப்படுத்தி சூடனை விழுங்கும் ஜோதிபோல் ஆத்மாவாகிய என்னுல் விழுங்கும்படியான கிருபையைக் காட்டப்போவதாக நினைக்கிறேன்.

கு:--- அறிவிற் சிறந்த அன்பே! உன்னிடத்தில் என்னதவறு இருக்கிறது? நன்கு மொழிந்தனை. சங்கை அற ஆசாரியன் சந்நிதியில் விவேகப் போர் புரிவதல்லவோ சிஷ்யனது தர்மம்! ஆசாரியன் சொல்வதை யெல்லாம் கேட்கக் கடமைதான். தன்னறிவிற்குப் படாத விஷயங்களைத் தர்க்கித்துக் கேட்கப் பயமிருக்கில், அந்தப் பயம் பக்தியெனக் காணப்படமாட்டாது. தவிரவும் கற்பிற்சிறந்த ஸ்திரீகள் இரவில் சயனக்கிரஹத்தில் தன்னுடைய பதியோடு நிர்ப்பயமாய்ச் சம்பாஷணையாலும் அடித்தல், கிள்ளல், தழுவுதல், கடித்தல் என்னும் பலவித லீலைகளால் ரதிக்குமுன்னர் பரஸ்பர வாத்ஸல்யத்தோடு நடைபெறவேண்டிய சைகயோக காலத்தில் பகலில்காட்டிய அடக்கம், ஒடுக்கம், அமரிக்கை, தலைகுனிந்து நிற்றல் சமிக்கையால் பேசுதல் என்னும் பழக்கமே உபயோகஞ்செய்யில் அவள் குலமகளிர் அல்லவென்றும், பதிவிரதா தர்மம் இழந்தவளென்றும் சொல்லப்படலாகும். இன்னும் ஓர் வாலிபன் பயில்வானைக் குருவாயடைந்து குஸ்திவித்தை பயிலுங்கால், எந்தெந்தப் பூட்டை எப்படி எப்படி விலக்கிவிட அடிக்கும் மர்மத்தைச் சிஷ்யனுக்குச்சொல்லவேண்டிய நிமித்தம் அந்தந்த வாதனைகளைச் சிஷ்யனுக்கு உண்டுபண்

ணிக் காட்டுவது மூலமாய்த் தான் ஷை மர்மங்களைச் சிஷ்யன் அறிய முடியுமாதலால், அந்த இடத்தில் குரு போதிப்பதை மேற்கொண்டு சிஷ்யனிடத்திலுள்ள வாத்ஸல்யம் மறைந்து போயிருக்கின்றது. அதுபோலவே ஆசாரியன் தான் போதித்தபடி ஷை மர்மங்களில் ஒன்றைத் தன்னிடத்தில் காட்டி இதை எப்படி பீட் அடிப்பாயென்ற சிஷ்யனிடத்திலிருந்து ஆசாரியன் வித்வத்தைச் சோதிக்குங்கால் ஆசாரியன் என்ற பாவத்தால் சிஷ்யன்பீதி அடையில்மேலும் மேலும் சிஷ்யன் ஆசாரியனிடத்திலிருந்து எப்படி வித்தையைக் கிரஹிப்பான்? சிஷ்யனும் ஆசாரியனைச் சத்துருபோல பாவித்து பூட்டை அவிழ்த்து பீட் அடித்தாலன்றி ஆசாரியன் சிஷ்யனைப்பற்றி மகிழ்ச்சியடையக் காரணமில்லை. இப்பேர்ப்பட்ட விஷயங்களில் ஆசாரியன் தன்னுடைய பதவியை உயர்த்திக்கொண்டால் ஆசாரியனாகான் என்றும், சிஷ்யன் தன்னுடைய பதவியைக் குறைத்துக்கொண்டால் சிஷ்யனாகானென்றும் இவ்விருவரும் வித்வசம்மந்தத்தில் சமனிலையில் நிற்கப்படவேண்டு மென்று நீ ஐயமற உணரக்கடவது. இது நீங்கி குரு சிஷ்யானென்று பிரஸ்தாபிக்கும் இந்தக் காலத்து சந்நியாசிகள் வித்வான்கள் யாவத்திராளும் போலியாய் அபிநயித்து இந்தக்காலத்தில் பணத்திற்கு பாவம் பிடிக்கும் தாசிகளைப்போல் பொய் நடனம்செய்கிறார்கள். ஆதலால், நீ அதைக் கவனித்து, ஐயுற்று, உனக்கேற்படும் தர்க்கமாவது என்னோடு அந்த ஏக ஐக்கிய பாவத்தில் பேச நிகழும் உயர்ந்த தத்துவங்களையாவது வெளியிடாமல் நிறுத்திவிட்டால் அறிவு குன்றுதற்குக் காரணமே யொழிய வளருகிறதற்குக்காரணமில்லை. அது எதுபோலென்றால், ஒரு மாம்பயிர் செய்வோமானால் அதை ஓங்கி வளரவிடுவதே உத்தமம். அதற்கிடையூறு என்னவென்றால் நாலா பக்கங்களிலும் வெடிக்கும் கிளைகளே. ஆதலால் அதை வாள்கொண்டு வெட்டிவரின் அதற்குச் செல்லும் பாலானது ஊர்த்துவமுகமாய்ச் சென்று மரத்தை வானுற வளரச்செய்யும். ஆதலால் பயம், துக்கம், கௌரவம், நாகரிகம், சத்துசத்து, நல்லது தீயது என்ற பேதங்கள் ஆசாரியன் சம்மந்தப்பட்டவரை

ஆரம்பத்தில் நிவிர்த்திக்கவே சிஷ்யனது பரிபாக பக்குவமாம். ஆதலின் என் சந்நிதியில் ஆத்மபோதத்தைத்தாங்கி யிருக்கிற நீ ஆத்மாநு சந்தானக் கிரமத்தில் பரிகாசமாயோ அல்லது விநயமாயோ தடையின்றியில் பேசவும் பயம் வேண்டாம். நாயனார் திருக்குறள்:—

(1) "கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

(௨) "ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு."

இதன் முதல்கவியில் நீ ஆசாரியனிடத்துக் கேட்கவேண்டிய பாவைகளைக் கசடுநீக்கி என்பதனால், உண்மைத்தத்துவத்தை ஆசாரியனிடத்து தர்க்கித்துக் கேட்டு நீ யறிந்துகொண்ட படி நிற்கக் கடவாய் என்றது. இரண்டாவது கவியின் பொருள் என்னவென்றால் யுக்தியும், அனுபவமும் சேர்ந்ததே வேதமாதலாலும், இவ்விரண்டும் சேர்ந்தபின்னரே யதார்த்தத்தை நிச்சயித்துணரக்கூடுமாதலாலும், அப்படி நிச்சயித்துக்கொண்ட நூலில் நிர்பயமான துணிவு இருக்க வேண்டுமென்பதாம். ஆதலால் நீயும் நான் இனிச்சொல்லும் இரகசியங்களைக் கிரகித்து, பிரஸன்னவதனத்தோடுங் கூடியவனாய் இளைப்பின்றி உன் மகவான மனத்தை உன் வசப்படுத்தி, 'பிரம்மை வாகம் சத்தியமென்று' வீற்றிருப்பாய்.

## மனத்தின் தத்துவம்.

பரமானது அறிவில் சத்வ சொரூபம். பிரகிருதியில் சத்துவம் ராஜசம், தாமசம் என்ற மூன்று குணங்கள் விளைந்தன. அம்மூன்றும் சத்துவ சொரூபத்தில் கலந்தன. அக்கலப்பினால் நானாவித வர்ணங்கள் தோன்றி ஜீவனுக்கு மோகம் விளைந்தது. அம்மோகத்தால் சங்கல்பம் விளைந்தது. இச் சங்கல்பத்தால் மனம் என்னும் உருப்பெற்றது. இது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அநந்தகோடி ஜன்மங்களுக்கு முன் மனமாகிய நாமரூபத்தில் வேட்டையாடி நீண்ட அது

பழக்கியிருக்கிறது. இதைப் பூர்வஸ்திதிக்குக் கொண்டுவரு வதே இப்போது நீ எடுத்துக்கொள்ளவேண்டிய பிரயத் தனம். அதை எவ்வாறு கொண்டு வருவதென்பதை இனி உபதேசிப்போம். சாவதானமாய்க் கேட்பாயாக.

ஞா:— சுவாமி! பிரகிருதியில் பிறந்தகுணம் மூன்று என்று உத் தரவானது. பிர்மம் என்பது தான் ஆதி வஸ்து என்றீர், அது பிறப்பிறப்பற்றதென்றும், அதற்கு நாமம் பிர்மம் என வியவகார திசைக்கு வைத்துக்கொண்டதாய் அறிந்தேன். பிரகிருதி என்பது எது வென்றும், அதில் பிறந்த மூன்று குணங்களின் சுபாவங்களையும், குறிகளையும், நிறங்களையும், சொல்லக்கூடுமாயின், நான் அறிய விரும்புகிறேன். தங்கள் போக்கைத் தடுத்துக் கேட்டதற்கு மன்னித்து உத்தரவா கக் கோருகிறேன்.

கு:— ரொம்ப சந்தோஷம்! உன் கேள்விக்குச் சமாதானம் பின் னுற் சொல்லுகிறேன். இதைக்கவனிப்பாய். மனம் என் பது ஒரு ரதம். சித்தம் என்பது ரதத்திற்கு ஏற்பட்ட ஓர் பீடம். புத்தி யென்பது அந்த ரதத்தில் ஓர்பாகத்திலமைந் திருக்கும் ஊட்டாணி வைரம் போன்றது. அகங்காரமென் பது அந்த ரதத்திலேயே அமைக்கப்பட்ட ஓர் அக்னி. இவ் வளவு சேர்ந்து அடங்கியதும், ஓரே வஸ்துவாய்ம் உள்ளது மனம். இதை இழுத்துச் செல்லுதற்கு ஏற்பட்ட புரவி களே ஞானேந்திரியங்களைந்தும். இது எதற்குச் சமானமாய் ஊகிக்கலாம் என்றால், இரவில் செல்லும் மோட்டாரே ஏக தேச உவமானம். அக்னியின் சூட்டால் மோட்டார் ஓடுவ தால் அதை அகங்காரமெனச் சொல்லத்தகும். அதிலமைந் திருக்கும் ஊட்டு, வழி காட்டுவதால் அதைப் புத்தியெனச் சொல்லத்தகும். அதில் போட்டிருக்கும் பீடத்தில் ஒருவ னமைந்து மோட்டாரைப்பற்றி யிருப்பதால் அது சித்த மெனச் சொல்லத்தகும். இந்த மூன்றும் ஒன்று சேர்ந்த விடத்துக்குச் சங்கல்ப வடிவமென்று சொல்லப்படும். அச் சங்கல்பமே மனமெனப்படும். இது நிற்க, மற்றேனைய சத்

காங்களும், மேல் டாப் அடங்கிய மற்றக் கூண்டும், சரீரமும் கருமேந்திரியங்கள் எனத்தகும். இதுவரையுள்ளவைகளை உன்போலொத்த விவேகிக்கு ஏகதேச உபமானத்தால் நான் சொல்லில், புத்திக்குக் கிராஹ்யமாகும். இந்த இடத்திற்கு அப்பாலுள்ளவைகளை அதில் நின்று அதுவாகி உணர்ந்தாலன்றி நான் எந்த உபமானத்தைக்கொண்டும் உனக்குத் தெளிவு செய்யப்பொருந்தாது. இன்னும் நான் சொன்ன மனோ தத்துவத்தை நீ ஒருவருக்கு எடுத்துக்கூறில் மனதில் நின்றனுபவித்த ஒருவனுக்கே புத்திக்குப்படுமே யல்லால் மற்றேனையோர்களுக்குப் படாதென்பதை நீ நன்குணரக் கடவாய். இன்னும் நீர்க்கடுப்பு வியாதியின் குணம் மூன்று. அது என்னவெனில், கடுப்பன்னியில் நீர் மஞ்சளாய் வரில் அதுவும் நீர்க்கடுப்பின் சுபாவமே. அதை நீரால் அறியலாம். கடுப்புமாத்திரமிருக்கில் அதை ஒருவாறு கஷ்டப்பட்டு நீர் இறங்குவதால் அறியலாம். நீர்க்கடுப்போடு எரிச்சலும் தோன்றுவது சகஜம். அவ்விடத்தில் கடுத்தலுண்டான இடத்தையும், எரிச்சலுண்டான இடத்தையும் விபாகித்துக் கூறவாவது, உணரவாவது எந்த விவேகிக்கும் முடியாது. அங்கது போல, மனதிற்கப்பாலுள்ளதும், புத்திக் கெட்டாததுமான அந்தவிடத்தில் கடுப்பென்னும் பிர்மத்தையறிந்தவன் அனுபவிக்குங் காலத்தில் எரிச்சல் என்னும் பிரகிருதி ஒன்று உளதெனக்காண்பான். ஆகலால் அந்தச் சங்கையை யொழித்து நான் கூறியமாறு மனோதத்துவங்களை ஜெயித்துப் பிர்மஸுகத்தில் வீற்றிருக்கும்போது நீ உன் சிஷ்யர்களுக்கு இவ்வாறு போதிப்பாய். இது சத்தியம். ஆனால் பிர்மத்திற்கு அந்நியமான வஸ்து ஒன்றுமில்லை. எல்லாம் பிர்மமே. இன்னும் ஓர் உதாரணம் கேட்பாய். சரீரத்தினிடத்து ஒவ்வொரு அங்கங்களிலும் பல இடபேதங்கள் குறிக்கின்றோம். வயிறென்றால் அதிலேயே அடிவயிறு என்றும், தொப்புளென்றும் கூறுகிறோம். இது பிரத்தியக்ஷத்தில் பார்க்கக் கூடியவை. மனோதத்துவமோ அப்பிரத்யக்ஷத்தில் புத்தியிலும் பார்க்கக்கூடியது. பிர்மதத்துவமோ அனுபவிக்கக்

கூடியதே. அல்லாமல் பார்க்கக் கூடியது என்பது முற்றிலும் பொருந்தாது. ஆனால் அறிவினால் பார்க்கக்கூடியவை என்று நிர்மானித்த வெல்லாம் மனதிற்கப்பால் தார் வஸ்துவென்கென்று அநுமானப் பிரமாணங்களால் யூகித்து, சித்தாந்திப்பதைத் தவிர, பார்த்தலென்பது பொருந்தாது. இனி நீ கேட்ட குணத்தின் விபரத்தைச் சொல்லுவேன். சத்துவம் நிறத்தில் வெள்ளை; நடபடிக்கை உசிதம்; ஈஸ்வர விவகாரம்; ரஜஸ் நிறத்தில் சிகப்பு; நடபடிக்கை சுறுசுறுப்பு; எல்லா விவகாரத்திற்கும் சுறுசுறுப்பைத் தரக்கூடியது. தாமஸ் நிறத்தில் கருப்பு; நடையில் மந்தம்; பாவமாகிய அசுர சம்பத்தை விருத்தி செய்யும்.

கா:— சுவாமி! சத்வஸ்வரூபத்தில் திரிகுணம் சம்பந்தப்பட்டவுடன் மோகம் பிறந்ததாக உத்தரவாயிற்றே. மோகிப்பதற்கு என்ன விசேஷமென்று அறிய அடியாள் விரும்புகிறேன்.

கு:— உசிதமான கேள்வி கேட்டனை. சொல்லுகிறேன். கவனித்துக்கேள். சீமைக்கமல வைரம் பார்த்திருக்கலாம். அந்த வைரம் துய்யவெள்ளை. அதை வஸ்திரத்தில் வைத்துப்பார்க்கில் தெளிந்தோடும் ஆழமான ஆற்றங்கரையில் மணல் தெரிவதுபோல, அதனுள் வஸ்திரம் வரை நீரோட்டம் பார்க்கலாம். அதைப் பகற்காலத்தில் சூரிய வெளிச்சம் ஜாஸ்தியாயில்லாமல் அற்ப மங்கலுள்ள இடத்தில்வைத்துப்பார்த்தால் அனேகவர்ணங்கள் அதில் விளைவதை நோக்கலாம். அதன் காரணம் என்னவெனில், சூரிய கிரணமாகிய ரஜோ குணமும், அதனியற்கை வெளிச்சமாகிய சத்வகுணமும், வீட்டுக்குள்ளடங்கிய இருட்டாகிய தமோ குணமும் இம்மூன்றும்சத்வஸ்வரூபமாகிய வைரத்தினிடத்தில் சம்சர்க்கப்பட்ட காலையில் பலவித வர்ண பேதங்கள் அதனிடத்தில் உண்மையிலுண்டானது போலவே காட்டுகின்றன. அந்த வர்ணங்களை அநுபவிக்கும்பொருட்டே தற்காலத்திய புருஷர்களும், ஸ்திரீகளும் வைரத்தில் மிகுந்த மோகத்தை

அடைகிறார்கள். சத்ஸ்வரூபத்தில் கலந்த பிரகிருதியின் குணங்களைவிட்டாலன்றி, உபமானத்தில் காட்டியமோகங்கள் நிவர்த்தியாகா. ஆதலால் சங்கல்ப மென்னும் மனம் இறப்பதற்கு உபாயம் தெரிவிக்கிறேன். சொல்லப்பட்ட சத்ஸ்வரூபத்தில் மருவிய மூன்று குணத்தில் சத்வகுணம் ஏறாது. ரஜோகுணமோ இருகக்ஷிக்கும் பொது. மனதினுடையும் தத்துவத்தில் புத்தியானது சத்ஸ்ரூபத்திற்கு சமாதி. ஆதலால் சத்ஸ்வரூபத்திற்கு மூன்று பலன்கள் உண்டாகிறது. மூன்று பலன்களைக்கொண்டு தமோகுணம் தன்னை நசிக்கச்செய்யில், மோகம் போய்விடும். மோகம் போனால், சங்கல்பம் என்னும் மனமும் அகங்காரமும் இறந்துவிடும். மனமிறந்தால் நீ அதுவாய் வாழலாம். தவிரவும் இன்னும் ஒரு விஷயம் சொல்ல வேண்டியதிருக்கிறது. மனதினிடத்தில் மூன்று குணமும் பிரதிதினம் வந்துபோவதைப்பார்க்கலாம். ஈஸ்வர சம்பத்தை விளைவிக்குங்கால் சத்வகுணம் மனதில் பொருந்தியிருக்கிறதென்று காணலாம். விபரீதத்தையும், சோம்பலையும், அசட்டையையும் காணுங்கால் தமோ குணம் பொருந்தியிருக்கிறதென அறியலாம். இப்படியறிந்துகொண்டு சத்வகுணம் வந்த வேளையில் தமோ குணம் வாராமல் தடுக்கமுயன்றால் கூடிய சீக்கிரத்தில் தமோ குணம் நசித்துவிடும். இதுதான் குணத்தின்மூலமாய் மனத்தைக் கொல்லும் உபாயம். உனக்குப்பூர்வ ஜன்மத்திலேயே மனத்தைக் கொல்லும் உபாயத்திலேயே அப்யாசித்துச்சத்துவகுணத்தை விருத்திபண்ணிக்கொண்டு தமோகுணத்தை நசிக்கச் செய்திருக்கின்றாய். இல்லாவிடில் இடையறாது ஆத்ம தத்துவம் விசாரிக்கவும், அந்நிய பிரக்ஞை வாராது, இது காறும் என்னிடம் இருந்துவருகிற அநுபவத்தினால் நான் நன்குணர்கிறேன். சாமான்யமான வாசனாபலந்தான் உனக்குள்ளது. அதை நீக்குதற்குக் கருமயோகத்தால் ஞானத்தில் நிற்க அப்பியாசிப்பாயென்னில் சுலபத்திலும் சீக்கிரத்திலும் கைகூடுவது சத்தியம்.

கா:— சுவாமி! தங்கள் உபதேசக்கிரமங்களாலேயே என்மனது

என்றும் சங்கல்ப வடிவம் கரைந்து உருகுகிறது சத்தியம். ஆத்மபோதத்திற்கு அந்நியமான போதம் எனக்குச் சத்திய மாய்க் கிடையாதெனினும் முன் சொன்னபடிக்கு விவகா ரங்களில் செல்லுங்காலத்து உண்மையிலிருந்து மறதியால் அற்பம் நழுவுகிறது. அதை வாசனு தோஷமென்று உத்தர வானதே நியாயமென்று உணர்கிறேன். ஞானத்தை அப் யசிக்கும் கர்மயோகம் அடியாளுக்குக் கிருபையோடு உப தேசிக்கப் பிரார்த்திக்கின்றேன். இது நிற்க. அவ்விடத்தில் உத்தாவாகிய குணத்திரயத்தில் ரஜோ குணத்தைப் பேசா மல் விட்டதின் குற்றம் அடியாள் அறியலாமோ?

கு:— பெண்ணே! அந்தவிடத்தில் அதைப்பற்றிப் பேச அவசி யம் கிடையாது. அதனல் எக்காலத்திலும் இடையூறு கிடையாதென்பது எனது அபிப்பிராயம். இந்த அபிப் பிராயம் உலகத்தில் அமிந்திருக்கிறதாய்க் காட்டும் சாஸ் திரங்களுக்கு விரோதம்: என் தத்துவங்களும் நான்போதிக் கும் மார்க்கமும் விரோதமே. அறிவுக்கும், அனுபவத்திற் கும் ஒத்ததே நன்னூல். அப்படிப்பார்க்கின் ரஜோகுணமா னது கூறு கூறுப்பை விளைவிக்கக்கூடியது. ஞானத்தை அபேக்ஷித்துச்சத்துவகுண கர்மாக்களைச்செய்வதற்கு ரஜோ குணமே காரணமாயிருக்கிறது. இது போலவே அசுர சம் பத்தை இச்சித்து தமோ குண கர்மங்களைச் செய்யும் ஒருவ னுக்கு இந்த ரஜோ குணமே காரணமாயிருக்கிறது. ஆத லால், ரஜோகுணம் இரண்டிற்கும் பொதுவாயிருப்பதனுல் அதைப்பற்றி விவகரிக்கக் காரணமில்லை; இன்றியமையாத சாதனமாயுமிருக்கின்றது. இதுவரை உனக்குச்செய்த உப தேசங்கள் சாங்கியயோகமென்று நீ அறியக்கடவது. இது விசார பாராயுள்ள தீவிரதர பக்குவிக்கே சொல்லத்தக்கது. மற்றேனையோர்கள் அதிகாரிகள் அல்ல. இனிச்சொல் லும் கர்மயோகம் உன்னை நின்ற நிலையில் பெயராமலிருக்கச் செய்யும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி ஓம்.

ராம கீதையில் முதலாவது அத்தியாயம்

ஓ சாங்கியயோகம் முற்றிற்று. ஓ

ஓம்.

# ஸ்ரீ ராமகீதோபநிஷத்.

## இரண்டாவது அத்தியாயம்.

## கர்மயோகம்.

காயத்திரி:— என்னை ஆளுதற்கென்று அவதரித்த ஸத்குருநாதா! தாங்கள் இதுவரை போதித்த நிலையில் நின்று, என் மனம் பரவசத்தை அடைகின்றது. இன்னும், ஆத்மபோதத்தைத் தவிர அந்நியமான போதத்தில் இச்சைகள் குறைவுபட்டு வருகின்றன. ஆதலால், அவ்விடம் திருவுளம்பற்றிய கர்மயோகத்தைக் கேட்பதிலிருந்து மிக்க பரிசுத்தத்தை அடைந்து, தாங்கள் போதிக்கும் நிஷ்டையிலேயே நிற்குமென்று நினைக்கிறேன். எனினும், கர்மமென்பது எத்தகையதென்பதும், கர்மத்தின் அளவும், யோகமென்றால் இன்னதென்பதும் விவரித்துக் கூறப்பிரார்த்திக்கிறேன்.

குரு:— நடுநிலைக்குறிய நங்காய்! நீ வினவிய கேள்வி நியாயமே. சமாதானம் சொல்லுவோம். கேட்கக்கடவாய். கர்மம் என்பது தோற்றத்தில் இருவிதம்.

அவையாவன:— உருவம், அருவம். உருவத்திற்கு அதிஷ்டானம் அருவம். இன்னும் ஓர் உருவத்தால் செய்யப்படும் தொழிலும் கர்மமே. இது, பகிர்முகமான செடிய உலகத்திலிருந்து ஞானேந்திரியங்களைத் தாண்டி அந்தக்கரணம் வரை வியாபித்துள்ளது.

யோகமென்பது:— செடிய உலகத்தை அழித்து, உருவம், அருவம் என இரண்டிற்கும் அப்பாலுள்ளதும், அறிதியாயுள்ளதுமான பரப்பிரம்மத்தினிடத்தில் மனமற, சத்துவ சொருபமானது கலத்தல் யோகமெனப்படும். இந்தயோகமானது இக்காலத்தில் வேதங்களிருப்பினும், அதைத் தோண்டி யெடுக்க மாயா வன்மையானது 'வித்வத்' என்னும் செருக்கின் துவாராவாலும், உருவத்துறவு பூண்ட

செருக்கினாலும் மறைந்து கிடக்கின்றது. அதை நான் உனக்கு உபதேசிக்கிறேன். இதைக் கேட்டபின் நீ முக்தியடையக் கேட்க வேண்டிய விஷயங்கள் இரா. மோக்ஷமானது உன்னை எளிதிலடையும். ஆதலால், நான் சொல்லுகிறவண்ணம் இந்த யோகத்தை அப்பியாசிப்பாயாக! இந்தயிடத்தில் கர்மம் என்றும், அகர்மம் என்றும் இரண்டு உள. கர்மமாவது உன் சரீரம். அகர்மமாவது மனமிறந்து செய்யப்படும் தொழில். இதில் இன்னும் மூன்று கர்மாக்கள் நீ தெரிந்துகொள்ள வேண்டியவை. பிராரப்தம், சஞ்சிதம், ஆகாமியம். நீ எடுத்துக்கொண்டிருக்கிற சங்கல்பமோவெனில் அநித்தியமானவைகளில் சங்கல்பத்தை விடுத்து மோக்ஷத்தை அபேக்ஷிக்கிறாய். ஆதலால், உனக்கு எந்தக்கர்மம் செய்வதற்கு நேருமோ, அந்தக்கர்மத்தை நீ மனமறச்செய்வாயெனில், அதுதான் ஜீவன் முக்திப்பதம். அப்படிச் செய்யமுடியாவிடில், நீ அப்பியாசித்தாயினும் அந்த நிலையை அடையக்கடவாய்!

சா:--- ஸ்வாமி! நான் இப்போது தங்களுடன் பேசுவதும், கேட்பதும் கர்மம் அன்றோ? இதில் மனமறக் கேட்பதும், பேசுவதும் எவ்வாறு அப்பியசிப்பது தத்துவத்தைத் தவிர அநித்தியமான போக போக்கியங்களில் தானே மனம் சங்கல்பம் செய்யாமலிருக்கவேண்டும்? தவிரவும நேரும் கர்மா என்று மொழிந்தீர்களே. அது எவ்வாறு நேருதல் கூடும்? தாங்கள் மொழியும் இந்த யோகம் அசாத்தியமெனப்படுகின்றதே! நான் தற்காலம் இருக்கும் நிலையிலேயே இருந்துவிடில் அது மோக்ஷமல்லவோ? ஆயினும், மோக்ஷமென்பது தான் என்ன? அது எத்தன்மையுள்ளது? இந்தக் கேள்விகளுக்குக் கிருபை கூர்ந்து விடையளித்து என்னைத் தடுத்தாட்கொள்ளப் பிரார்த்திக்கிறேன்.

கு:--- பெண்ணே! நீ கேட்கத்தகுந்த கேள்விகளைத் தான் கேட்டனை. இந்த யோகம் நீ எவ்வளவு அசாத்தியமெனக் கருதினையோ, அவ்வளவு சாத்தியமானதும், உன் பூர்வ ஆசிரமத்

தின் பழக்கத்திலும் உள்ளதே. ஆதலால், நீ பயத்தை
விடுத்து, உற்சாகமாய்க்கேட்பாயாக. உன் முதற்கேள்விக்
குச் சமாதானம் கூறுவோம். நீ பேசுவதும், கேட்பதும்,
நீ சொன்ன வாறு, கர்மந்தான், ஞானமாகாது. மனமறக்
கேட்கவும், பேசவும் வந்தால்தான், ஞானமாகும். ஏனெ
னில், என்னுடன் பேசுவதும், கேட்பதும் ஞான அபே
க்ஷையாலன்றோ? அது சங்கல்பமாகாதோ? தற்காலம்,
ஞானத்தில் நிற்பது என்னும் சங்கல்பத்தை உடையவள்
அல்லளோ நீ? இதில் மோக்ஷத்திற்கும், உனக்கும் இருக்
கிற அளவைச் சொல்லுகிறேன், கேள்! உலகத்தில் ஒரு
ஜீவன் இறந்தால், அந்த ஜீவனிடத்தில் பற்றுள்ளவர்கள்-சம்
சாரம், பிள்ளைமுதல் சிநேகிதர்கள் பரியந்தம்-பிரேதத்தைப்
பற்றால் சூழ்வார்கள். பிரேதத்தை மயானத்துக்குத்தூக்கி
விட்டால், நெருங்கிய சுற்றத்தாரும் தன் குடும்பத்தாருமே
பின் செல்வார்கள். பிரேதம் ஸ்மசான கட்டம் கடந்துவிட்
டால் காஷ்டத்தருகில் அதற்குரிய கர்த்தாவும், ஆசாரிய
னுமே இருப்பார்கள். பிரேதத்தில் அக்கினி வைத்த பின்,
பறையனும் அவன் கையில் ஓர் தடியுமே மீதி நிற்கும். பிரே
தம் நன்றாய் வெந்த பின்னர், ஷடி பிரேதத்தை வேகவைக்
கச் சாதனமாயிருந்த அந்தத் தடியை பிரேதத்தோடு எரிய
விட்டுப், பறையன் தனித்து இருப்பான். இந்த ஏகதேச
உபமானத்தை வைத்து, பிரேதமாகிய மற்றேனைப் சங்கல்ப
தத்துவத்தைக் கொளுத்துதற்குச் சாதனமாயுள்ள சங்கல்
பத்தடியும், பறையனாகிய நீயும் இருக்கிறாய். நான் சொல்
லும் இந்தக் கர்மயோகத்தை அப்பியசிக்க முயலில் சங்கல்
பத்தடியும் எரிந்து சகஜமாய் பிரம்ம நிஷ்டை அடைவதில்
எவ்வளவும் சமுசயமில்லை. மனமறப்பேசுவதும், கேட்ப
தும் சகஜம். அது எல்லா அக்ஞானிகளுக்கும் சகஜம்.
பழக்கத்திலும் உள்ளதென்றால், உன்போலொத்தவளுக்கு
அதி சுலபமே. இன்னும் ஓர் விஷயம் நீ உணரவேண்டும்.
அதாவது, பற்றின்றி எக்கருமங்களும் செய்தலே மனமிறந்த
இடமாகும். அது உலகத்திலுள்ள அக்ஞானிகளிடத்திலே
பொருந்தியிருப்பதை நான் உனக்கு விவரப்படுத்துகிறேன்.

நீ வசிக்கும் ஊர் வெளியில் உனக்கு சம்பந்தமில்லாத ஓர் பெரிய மனுஷன் கிராமத்தில் அவன் புதல்வன் இறந்துபோய்விடில் துக்கம் கேட்கப்போவது சகஜம். அப்பொழுது மனத்தில் துக்கமில்லாமலே வாசாமாத்திரமாய்ப் போலியாய்த் துக் கத்தைக் காண்பித்து தன் சந்துஷ்டி குறையாது மீளும் தர்மமுடைய அந்த இடம் அகர்மா என்றும், அதுதான்மனா பிறந்த இடம் என்றும் அறிவாயாக. மோக்ஷத்தைக்கோரிய சங்கல்பமும் அழிந்தாலன்றி மோக்ஷமாகாது. இதற்கு மேற்கூறிய காரணங்களே போதுமானவை. இனி உன் நாலாவது கேள்விக்குச் சமாதானம் கூறுவோம். பிராப்த வினையால் தான் கர்மம் நேருவது சகஜம். அது பூர்வம் செய்த வினையின் பயனால்தான் நேருகிறது. அப்படி நேரு வதை அனுபவிப்பதற்கே இந்த தேகம் வந்தது. அதை அநுசரித்து நடத்தும் கர்மாக்கள் சங்கல்ப ஜன்யமும், குணத்திரய சம்பந்தமுமாகா. மோக்ஷமென்பது எத்தன்மை யுடையதென்னில் துக்கத்திற்கும், சுகத்திற்கும், கஷ்டத் திற்கும், லாபத்திற்கும், ஜயத்திற்கும், அபஜயத்திற்கும், மறப்பிற்கும், வறுமைக்கும், செல்வத்திற்கும், நினைப்பிற்கும், இப்படிச் சொல்லியவற்றின் இரண்டிற்கும் நடுவில் வகித் திருப்பதேமோக்ஷமென்றும்; பந்தமற்றதென்றும் அறிவாய்.

கா:— ஸ்வாமி! இதற்கு முன் ஓரிடத்தில் பிராரப்தம், சஞ்சிதம் ஆகாமியமென்று மூன்று கர்மாக்கள் சொன்னீர்கள். நேரும் கர்மாவைக் கேட்டதில், பூர்வ வினை யென்று இப்போது சொன்னீர்கள். அவ்விடத்தின் உபதேச மொழிகளால் மற் றச் சங்கைகள் எல்லாம் ஒழிந்தன வெனினும், தாங்கள் சொல்லிய மூன்று கர்மாக்கள் இன்னவென்பதும், அவற்றில் எந்தக் கர்மா நேரக்கூடியதென்றும், அவ்வாறு நேருதலை எப்படி அறியலாம் என்றும், வினை யென்றால் இன்னதென் றும் எனக்கு அநுக்கிரகிக்க கேட்டுக்கொள்கிறேன்.

கு:— விவேகத்திற் சிறந்த வித்வக்ஷி! நீ கேட்கும் கேள்விகளால் எனக்கு ஆனந்தமே விளைகின்றது. நான் சொல்லும் மறு

மொழிகளை நன்கு கவனிப்பாயாக. பிராரப்தம் என்பது சரீரம். சஞ்சிதமென்பது பூர்வ ஜன்மத்தில் இச்சித்த சங்கல்பப் பொருள். ஆகாமியமென்பது நூதன சங்கல்பங்கள். இவற்றில், உனக்கு வேண்டியவை:— பிராரப்தமும் சஞ்சிதமுமே. பிராரப்த சரீரத்தால் அநுபவிக்கப்படும் சுகதுக்கங்களடங்கிய கர்மாக்களே சஞ்சிதமாகும். இந்த சஞ்சிதம் மனத்தோடு உறைந்து வெகு நாளாய் வளர்ந்து காலாந்தரத்தில் வெளியில் உலாவி சரீரம் அநுபவிக்குமாறு நேருகின்றது. இப்படி நேருவதை எப்படி அறியலாமென்னில், எந்த ஜீவன் நூதன சங்கல்பத்தைத் தியஜித்து, யோகாப்பியாசத்தில் எவன் மனம் நிலைத்திருக்கின்றதோ, அந்தமனம் யோகாப்பியாசத்தில் சாந்தியடைந்து, லகுவாய் இருந்த மனம் பிரஸ்தாபத்தில் சொன்ன சஞ்சிதவினை நேருங்காலத்தில் இந்திரியங்களை ஜயித்த அந்த யோகிக்கு மனத்தில் துர்கனவை உண்டுபண்ணும். அந்த கனவை எவ்வாறு அறியலாமென்னில் ஒருஜீவனுக்கு இயற்கை சுபாவமான மனஜலப்பிரவர்த்தி எப்படி எளிதில் உரைத்திருக்கிறதோ, அவ்வாறே சஞ்சிதம் பிராரப்தத்தோடு மருவ, உருப்பெற்றுவருகிறதென அறியலாம். இப்படி அநுபவிக்கப்படும் செயலை வினையென்று சொல்வது சகஜம்.

கா:— சுவாமி! இந்த இடத்தில் மறுத்து மறுத்துக்கேட்கவேண்டியவனாயிருக்கிறேன். அப்படிக் கேட்டாலன்றி என்னறிவிற்குப் பொருள்படவில்லை. ஆதலால் மன்னித்து என் சங்கையை நீக்கியருளப் பிரார்த்திக்கிறேன். இவ்வுலகத்தில் நூலே சாதுக்கள் சாதுக்களே நூலாயிருக்கிறது. இவ்விரண்டினிடத்தும் நான் நன்கு பழகினவனல்லவென்பதை முன்னமேயே தெரியப்படுத்தியிருக்கிறேன். ஆதலால் சாஸ்திரப்போக்குக்கு சன்னிதானத்தின் தத்துவம் முரண்படுகின்றது. சாஸ்திரத்தின் போக்கை யநுசரித்து சித்தாந்திக்க என்னறிவு எவ்வளவும் சமாதானமடையவுமில்லை. இன்னும், உலகில் பிரக்ஞாவந்தர்கள் எனக்கீர்த்திபோரி, சஞ்

சரிப்பவர்களும் இந்த சாஸ்திர பாடத்தையே "போனகிரா புக்குச்" சமானமாய்ச் சொல்லுகிறார்கள். ஆதலின், பிராரப்த மென்பது சரீரமென்று ஏன் சொல்லவேண்டும்? அதற்குக் காரணமென்ன? சஞ்சித மென்பது மனத்தால் பூர்வ ஜன்மத்தில் சங்கல்பித்ததென்றும், அது இந்த ஜன்மத்தில் வளர்ந்து உருப்பெற்று, பகிர்முகப்பட்டு, இந்த சரீரத்தைப் புஜிக்கும்படி மருவுகின்றதென்றும் மொழிந்தீர்கள்: பூர்வ ஜன்மத்தில் மனத்தில் சங்கல்பித்தவைகள் தேகம் மரிக்கும் போது, அத்துடன் அழியாதிருக்குமா? அப்படியிருப்பினும் அது வளர்ந்து பகிர்முகப்பட்டு உருப்பெற்று சரீரத்தை யெப்படித் தொடரும்? அப்படித் தொடரும் பக்ஷத்தில், மனோ குணசம்பந்தமன்னியில், அந்தக்கர்மா எப்படி நடைபெறும்? இன்னும், ஆகாமியத்தைப்பற்றி நீக்குவதற்குக் காரணம் என்ன? இந்த சந்தேகங்களை இனி வாராவண்ணம் களைந்து அறியப் பிரார்த்திக்கிறேன்.

கு:— பெண்ணே! உன் கேள்விகள் மணற்கேணியில் ஜலம்ஊறுவதுபோலவும், அந்த ஜலத்தின் தெளிவு போலவும் நான் ரம்மியமாய் உட்கொள்ளுகிறேன். ஆனதினால், என் உத்தரத்தை மிக்க சாவதான மனதுடையவளாயும், ஆதரவு உடையவளாயும், கேட்கக்கடவாய்! சரீரமான பிராரப்தத்தைக்கொண்டு ஜாக்கிர, சொப்பன, சுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளை அனுபவிப்பது நீ நன்குணர்வாய். இதில் ஜாக்கிரத்தில் மனது கற்பித்தவண்ணம் சரீரம் போகம் புஜிப்பதை நீ உணர்ந்திருக்கிறாய். மனோ கற்பனையில் பாவித்தவாறல்லாது சரீரம் புஜிக்க, மனது சாந்தியடைந்ததில்லை. அவ்வாறாயினும், இந்த இடத்தில் மனோகற்பனை, பகிர்முகத்தில் விளங்கி உருப்பெற்று, சரீரம் புஜித்ததன்றோ? சுஷுப்தியில் சரீரமும் இறந்து, மனம் முதலான மற்ற ஞானேந்திரியங்கள் எவ்விடத்தில் லயமாயிருந்தன? அதன் பின், மனம் முதலிய இந்திரியங்கள் ஒருவாறாய் விகசித்தன்றோ, சரீரமாகிய பிராரப்தத்தில் பொருந்துகின்றன? இவ்வாறு

பலங்களினால் சரீரத்தைப் பிராரப்தமென்றும், சஞ்சிதத்தைப் பூர்வ ஜன்ம சங்கல்பமென்றும் சொல்லில், சுருதி, யுக்தி, யநுபவம் இம்மூன்றுக்கும் பொருந்தும். அப்படிச் செய்யும் தர்மாக்களில் மனமாவது குணத்திரயமாவதுகிடையாதென்பதற்குக் காரணங்கள் கூறுவோம். சாவதான மனத்துடன் கேட்பாயாக:— இந்திரியங்களையும், மனத்தையும், குணத்திரயங்களையும், ஜயித்துக் கடத்தல் என்றால் அவை இறந்துபோனதென்றும் தாத்பரியம் கொள்ளக் கூடாது. பின் எவ்வாறெனில், அதனதன் பிரேரேபணையின் துவாரா நாம் தொடர்ந்துவந்த பழக்கத்தைஜயித்து, நம்மை அவை பின் தொடரும் பழக்கத்தை யுண்டாக்கி அநுபவிக்கும் சக்தியே எல்லாம் ஜயித்துவிடுமென்று நீ நன்கு உணரக்கடவாய். சுருங்கச்சொல்லின், பூர்வ ஜன்ம சங்கல்பமே சஞ்சிதப்பொருளாய் மாறி, அதனிடத்தில் திரிகுணமானது சம்பந்தப்பட்டு, வெளியில் உலாவி, பிராரப்தம் புஜிக்கநேருவதால், மேற்படி திரிகுண சம்பந்தமானது சஞ்சிதப்பொருளின் சம்பந்தத்தால் ஜீவப்பிரேரேபணையின்றி பிரகிருதியின் பிரேரேபணையால் பலவந்தப்படுத்தி நடத்தும் யோக்யதையினால், அதில் ஏற்பட்ட மனதியாம் குணத்தின் அம்சம் பொருந்தி, பிராரப்தம் புஜிக்க அமைகின்றது. தவிரவும், இந்த விடத்தில், திரிகுணமானது, அருவமாயிருப்பினும் அருவத்தில் அருவமாய் நின்று பிராகிருத மனத்தின் சம்பந்தமன்னியில் பிரகிருதியின் காந்த சக்தி என்னும் யோக்கியதையால், புருஷனது பிராரப்தத்தைப் பலவந்தப் படுத்துகிறது. ஆகையால், பிராகிருத ஜன்மத்தில் ஏற்பட்ட ஆகாமிய மனோ சங்கல்பத்தையும் அதன் சம்பந்தமான குணத்திரயங்களையும் ஜயிக்கச்செய்வதே புருஷனுடைய தர்மமென்று நீ நன்கு ஆராயக்கடவாய். ஆகாமியத்தை நீக்கியதின் காரணத்தைச் சொல்லக்கேள். இந்த ஜன்மத்தில் ஞானத்தையபேக்ஷிக்குமுன் மோகத்தால் செய்திருக்கும் சங்கல்பங்களும் தற்காலம் மோகாந்த விச்சையின் சங்கல்பமுமே ஆகாமியமாகும். இச்சங்கல்பங்கள் மனதில் வேரூன்

றும் காலவரம்பு இல்லாததால், ஆகாமியங்களுக்கு அவரோதமில்லாதனவே.

கா:— இருட்டைக்கெடுத்து, என்னுள் தீபத்தையேற்றி வைத்துத் தூண்டாமணி விளக்காய் ஜ்வலிக்கச்செய்யும் ஹே, சத்குரு! தங்கள் கிருபைக்கு என்னபிரதிசெய்ய மாட்டுவேன்! என் சந்தேகங்கள் அனேகமாய் ஒழிந்தனவெனினும், சஞ்சிதத்திற்குப் பிராரப்தம் வேர் எனவும்-சஞ்சிதம் கற்பனை என்றும் அக்கற்பனையின் வன்மையே உலகத்தில் அது பகிர்முகப்பட்டு பிராரப்தம் புசிக்கநேருகின்றதென்றும் நன்குணர்ந்தேனாயினும், பூர்வ ஜன்ம சங்கல்பந்தான் என்று சித்தாந்திக்கவும் அல்லது அதை மறுக்கவும் முடியவில்லை. இத்துடன் அவ்விடத்தில் உக்ரமான வன்மை மனோ கற்பனைக்கு மாத்திரம் பிராரப்தம் புசிக்கிறதென்றும் அப்போது மனதிற்குச் சாந்தியில்லையென்றும் மொழிந்ததின் காரணமும், ஆகாமியத்திற்கு வேறொன்றும் காலவரம்பு இடையாதென்று சொன்னதின் அபிப்பிராயமும் எனக்கு விரித்துரைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

கு:— பேஷ்! பேஷ்!! உன்கேள்வி அற்புதம்!!! சொல்லுகிறேன், கேட்பாயாக. இதுவரைக் கேட்டதில், சஞ்சிதம் ஆகாமியமென்ற இவ்விரண்டில் தான் உனக்கு சங்கை இருக்கிறதெனத் தெரிகிறது. சொப்னாவஸ்தையில் ஜாக்கிரத்தில் நடந்த விஷயங்களை அனுபவிக்கிறதுண்மை யெனில், சொப்பனத்திற்கு முந்தினதல்லவோ ஜாக்கிரம்? ஜாக்கிரம் பூர்வமன்றோ? ஆகையால், சஞ்சிதம் பூர்வ ஜன்மத்தின் சங்கல்பமென்று துணிந்து நீ சங்கை யொழிவாய். இதில் உனக்கு இன்னுமோர் சங்கை நிகழலாம். மனத்தில் ஓர் விஷயத்தை சங்கல்பித்து, அச்சங்கல்பப்படி பகிர்முகப்பட்டு அதை ஜாக்கிரத்தில் புசிக்க நேராமல் சொப்பனத்தில் அனுபவிக்கின்றதே. அது என்னவெனில், அச்சங்கல்பம் ஆகாமிய சங்கல்பமாகையால் அது உருப்பெறக் காலவரம்பில்லை யென்று நீ அறிவதோடு, சங்கல்பம் முந்தியும், அனுபவம் பிந்தியுமா

யிருந்தல் பற்றி அனுபவத்திற்குப் பூர்வம் சங்கல்பமெனத் தெளியக்கடவாய். ஆகாமியம் வேறென்றும் காலதாமமா விவரமாய்ச்சொல்லுவேன், கேள். மனத்தில் வினையும் சங்கல்பங்களில் ஜாக்கிரத்தில் அனுபவிக்கப்பட்டவையெல்லாம் சஞ்சித மென்றும்; சொப்பனவஸ்தையோடு மாத்திரம் நிற்கப்பட்டவை யெல்லாம் ஆகாமியமென்றும்; அந்த ஆகாமியம் உருப்பெறவேண்டுமானால், ஜீவன் அந்திய காலத்தில் மனமிறக்காது எமன் கைப்படில் சஞ்சிதமாய்வளர்ந்து, மறுஜன்மத்தில் பிராரப்தம் புசிக்கத்தக்கதாய் வளர்கின்றதென்றும் நீ ஐயமறத் தெளிவாய். ஆதலால், மனமறச் செய்யும் கர்மயோகத்தை நீ அப்பியாசிக்க முயலில் சஞ்சிதத்தைப் பிராரப்தம் புசித்த பின்னர் மனம் லயமடைந்து பிறப்புஎன்னும் கடலைத்தாண்டுவாய். அப்பொழுது தற்காலமேற்பட்ட ஆகாமியம் ஞானாக்கினியால் வறுக்கப்படுகின்றது.

சூ:— சுவாமி! தங்கள் சமாதானத்தால் மிகுந்த களிப்படைகிறேன். எல்லாம் என் அறிவிற்குப்பொருத்தமாயும், அனுபவத்திற்கு ஒத்தும் இருக்கிறது. இந்த உலகத்தில் என் சங்கைகளுக்குத்தகுந்த விடையளித்து, என்னைக்காப்பாற்ற ஒருவருமில்லாமல் திக்கற்றிருந்த எனக்கு இப்பேர்ப்பட்ட சன்னிதானம் கிடைத்தது நான் பூர்வம் செய்த தவப்பயனென்றே சொல்லவேண்டும். ஆகாமிய சங்கல்பத்தைப்பற்றி அவ்விடத்தினின்றும் உத்தரவானது மூலமாயும் என்னுடை அனுபவ மூலமாயும் அது இரண்டு தினிசாயிருக்கிறதெனத் நிர்மானிக்கிறேன்- பிராரப்தம் புசிக்க தற்காலம் இடமில்லாமல் ஆகாமிய சங்கல்பங்கள் யாவும் சொப்பனத்தில் காணப்படுகின்றனவென்று சொல்லப்பொருந்தா. அத்தனைபோ சங்கல்பங்களில் சில மாத்திரமே சொப்பனத்தில் தோன்றுகின்றன. ஆதலின், சொப்பனத்தில் தோன்றிய சங்கல்பங்கள் வேறொன்றில்லையென எவ்வாறு சொல்லலாம்? மற்றவைய சங்கல்பங்கள் சொப்பனத்திற்கு வாராமலிருக்கும் காரணமென்ன? தவிரவும் இந்தஜன்மத்தில் [illegible]

பரியந்தம் நினைக்காததும் பார்க்காததும், கேட்காததும் சொப்பனத்தில் வருகின்றனவே: இது என்ன? இவைகளுக்குக் கிருபை கூர்ந்து விடையிறுத்து, என் சந்தேகத்தை நிவர்த்திக்கப் பிரார்த்திக்கிறேன்.

கு:— அறிவிற் சிறந்த அரசி! உன் கேள்வி புதுமை புதுமையா யிருக்கின்றது!! ஏதத்க்ஷணபரியந்தம் வழங்கி வருகிற நூல்களில் காணும் சிஷ்யை போலல்லள்!!! நிவிரதாரத்திலும் கவிரதாரமென்று சொல்லவேண்டும். இருக்கட்டும்! நீ கேட்டவாறு, ஆகாமிய சங்கல்பம் சொப்பனத்தில் காணும் சக்திக்குக் காரணம் என்னவெனில், இச்சை யிருந்து அந்த இச்சையின் வழியே மனது ஒரு வழிப்பட்டு அழுத்தமாய் ஓர் போகத்தைப்புஜிக்க அநுசந்தானஞ்செய்து அநுபவியாமல் விட்டிருக்கும் சங்கல்பங்கள் சொப்பனத்தில் முளைத்து நடனஞ்செய்யும். அவையும் வேறன்றியவையே. ஆனால், சொப்பன அளவில் தான் வேறன்றியன: சொப்பன சமாசாரமோ எந்த உலகத்திலும் யதார்த்தமல்ல. மற்ற சங்கற்பங்களோ தரிசன மாத்திரமாயுள்ளவை யென்றும், அவை தோற்றத்தோடு உட்புகாமலும் அநுசந்தானத்திற் கிடமில்லாமலும் நழுவியவையென்றும் காண்பாயாக. இது நிற்க, பிரத்தியக்ஷத்தில் அநுபவிக்கப் படாததும், மனோவாக்கிந்திரியங்களுக்கு ஏதத்க்ஷண பரியந்தம் புலப்படாததுமான விஷயங்கள் சொப்பனத்தில் காணப்படுகிற காரணம் என்னவெனில்:— எந்த போகத்தைப் பிராரப்தம் புஜிக்குங்காலம் நெருங்கின்றதோ, அது அதற்கு முன்னாகவே சொப்பனத்தில் விளைந்து, பின்னால் பகிர்முகத்துக்குத்தென்படும். இது உலகத்தில் ஒவ்வொரு ஜீவனுக்கும் அநுபவமாயுள்ளதே. இதனறியும், மற்றோர் காரணமும் மார்க்கமும் இருக்கின்றன. அதாவது மனமானது படம் பிடிக்கும் "போட்டோகிராப்" பெட்டியை ஒத்தது. எப்படி யெனில் ஒரு உருவத்தை "போட்டோ" பிடிக்கவேண்டுமென்றால் "போட்டோ" பிடிப்பவன் லக்ஷியம் ஓர் உருவத்தைப் பொறுத்தே யானாலும் அதைச் சுற்றிலுமுள்ள சில சிற்றுருவங்களையும்,

கட்டுமுட்டுச் சாமான்களையும் சேர்த்தே அது படம் பிடிக்கும் சுபாவமுள்ளது. அதுபோல், மனோலக்ஷியம் ஒன்றிலிருந்தாலும், அதனருகிலுள்ள மற்றேனைய அற்ப விஷயங்களையும் கிரகித்துப் பண்ணுவது மனத்தின் சுபாவம். இன்னுமோர் உபமானம் சொல்லக்கேள்- ஒரு புருஷன் தன் வீட்டைப் பூட்டி வெளியே சென்றிருக்கும் சமயத்தில் தற்செயலாய் லெட்டர் கொண்டுவரும் தபால்காரன் அந்த வீட்டின் சாளரத்தின் வழியே லெட்டரை உள்ளேபோட்டு விடுவது வழக்கம். உடையவன் வந்து அந்த லெட்டரின் சங்கதிக்கு ஆனந்தமோ, துக்கமோ அடைவது போல் ஒரு ஜீவனது மனத்தின் லக்ஷியம் எதில் பற்றியிருந்தாலும் கோரமலே உலகப் பிரக்ஞைகள் வந்தடையும். அவற்றின் முதிர்ச்சி காரணமாயும் சொப்பனத்தில் அவை பிரதிபலிக்க நியாயமுண்டு.

கா:— சுவாமி! பிராரப்தம் புசிக்கக்கூடிய சஞ்சித கர்மாவானது சொப்பனத்தில் பிரதி பலித்து அப்பால் ஜாக்கிரத்தில் விகசிக்கிறதென அவ்விடத்து இனிய வசனங்களால் அறிந்துகொண்டேன். அப்படியே அநேக விஷயங்களை சொப்பனத்தில் முன் அனுபவித்துப் பின் ஜாக்கிரத்தில் அனுபவிப்பது என்பது எனக்கும் பிரத்தியக்ஷத்தில் தெரிந்தவிஷயம். என்றாலும், எல்லா விஷயங்களும், அதாவது பிராரப்தம் புசிக்கவேண்டிய சஞ்சிதங்கள் ஒவ்வொன்றும் சொப்பனத்தில் பிரதிபலிக்க வேண்டாவோ? சில மாத்திரம் பிரதிபலிப்பானேன்? சில சொப்பனம் தாண்டி ஜாக்கிரத்துக்கே சேரிட வருவானேன்? தவிரவும், ஆகாமிய சங்கல்பங்கள் சொப்பனத்தில் முளைக்கும்வரை பலம்பெற்றபின்னர், அவற்றிற்கு மதிப்பில்லாமற் போவது எங்ஙனம்? இத்தியாதி சந்தேகங்களைப் பறித்தெறியுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கு:— உண்மையே! சஞ்சிதமிருப்பது அப்பிரத்தியக்ஷமாதலால் அதை சுஷுப்திக்குச் சமானமாய்ச் சொல்லலாம். ஏனெனில், அது விகசிக்குங்கால் சொப்பன லோகத்திற் படர்ந்து.

அனவிலனும் ஜாக்கிர லோகத்திற்கு வெளியாகின்றது. ஆகலால், சொப்பன லோகத்திற்கு வாராமல் அந்த சஞ்சிதமும் ஜாக்கிர லோகத்தில் பிராரப்தத்தின் முன் புசிப்பதற்கோர் பொருளாய் உருப்பெற்று விளங்காது. ஆனால், அநேகம் சொப்பனத்திற்கு வாராமலேயே ஜாக்கிரத்தில் அநுபவத்திற்கு வருவதை நானும் ஒப்புக்கொள்கிறேன். அதற்குக் காரணம் கூறுவேன். கேள். உலகத்தில் ஜீவர்களுக்குத் தோலில் மாத்திரம் பற்றிய சில வியாதிகள் உண்டு. அதின் மூல தத்துவம் தோலில் பிரகாசிக்காமலே அந்தர்முகத்தில் வளர்ந்துகொண்டிருக்கும். அது வளர்ந்து தோலுக்கும் வந்து உருப்பெருமுன் தோலைப்பற்றிய வியாதி மிகுதியும் வளர்ந்து கவர்ந்துகொண்டால், தோல் பரியந்தம் வியாபித்திருப்பினும் அது தோல் வியாதியால் மறைவுபட்டு பிரத்தியக்ஷத்தில் காணப்படாமல் விவேகத்தால் அறியப்படவேண்டும். இதிலிருந்து தெரிந்துகொள்ளவேண்டியது என்னவெனில், குஷ்டமத்தவ வியாதியாகிய சஞ்சிதம் சுஷுப்தி லோகத்திலிருந்து சொப்பன லோகத்திற்கு வருங்காலத்திற்குள் தோல் வியாதி என்னும் ஆகாமியத்திலுண்டான அநுசந்தான சங்கல்பமானது சொப்பன லோகத்தில் மிகுந்து விளையாடியதால், அந்த சஞ்சிதம் சொப்பன லோகத்திற்கு வந்தும் விளையாடுதற்கிடமில்லாமல் பகிர்முகப்பட்டு பிராரப்தம் புசிக்க நேருகின்றது என்பதை நன்குணரக்கடவாய். அந்த சஞ்சிதம் சொப்பனத்தில் விளையாடியிருக்குமெனில், ஆகாமியமாகிய தோல்வியாதியென்னும் அழுத்தமான அநுசந்தான சங்கல்பம் அக்காலத்தில் இல்லை எனவும் அறிவாய்.

பெண்ணே! ஆகாமிய சங்கற்பங்கள் எவ்வளவு அழுத்தமாயிருப்பினும், அவற்றிற்கு மதிப்பில்லை யென்பதற்கு நியாயம் கூறுவதை கவனித்துக் கேட்பாயாக. ஒரு குடியானவன் சாகுபடி செய்யும் வயலில் ஜலத்தின் மேல் ஆலக்கொடி யென்னும் ஓர் பூண்டு விளைவது சகஜம். அதன் வேருக்கு பூஸ்பரிசம் கிடையாது. பூஸ்பரிசமுள்ள மற்றைய செடிகளைப்போலவே அந்த ஆலக்கொடி ஜீவித்திருப்

பது சகஜம். அதனுல் பயிரின் வளர்ச்சி தடைப்படுவதும் இயற்கை. அதற்குக் குடியானவன் எடுத்துக்கொள்ளும் முயற்சி யென்னவென்ருல், அவன் கேவலம் குடியானவன் பக்குவத்திலிருந்தால் தன் இரு கைகளினுலும் சுலபத்தில் அவற்றைப்பிடுங்கிக்கரையேற்றிவிடுவான்; அவன் வியவசாய ஆராய்ச்சியில் தேர்ந்தவனுயிருந்தால், ஆலக்கொடியைக் கண்ட மாத்திரத்திலேயே எருக்கிலையை ஏராளமாய் மடைவாயில் பரப்பி, அதன் வழியாய் ஜலத்தைப் பாய்ச்சி அந்த ஆலக்கொடியை அழிகிப்போகும்படி செய்வான். இதன் சூக்ஷமம் என்னவெனில் ஆலக்கொடிக்கு எருக்கிலை சம்பந்தப்பட்ட ஜலம் சத்துருவாயிருக்கிறது. ஆங்கதுபோல், மோக்ஷ இச்சை யென்னும் எருக்கலையின் துவாரா ஞானம் என்னும் ஜலம் பாய்ந்தால், ஆலக்கொடியென்னும் அழுந்தமான ஆகாமிய சங்கற்பம் அடியோடழிந்து போவதில் ஐயமில்லை.

கா:— சுவாமி! இதுவரை எனக்கு முளைத்த சந்தேகங்கள் சூரியன் முன்னிலையில் பனி இறந்தவாறுதீர்ந்துவிட்டன. இந்தவிடத்தில் முக்கியமாய் இன்னுமொரு கேள்வி கேட்க என் அறிவு தூண்டுகிறது. அதாவது:— சமஸ்த ஜீவகோடிகளுக்கும் சஞ்சிதமானது சுஷுப்தி லோகத்திலுள்ளதென்றும், அதிலிருந்து பரிணமரூபம் பெற்று சொப்பனலோகத்திற்கு வந்து, பின் ஜாக்கிர லோகத்தில் நேருகிறதென்றும் மிக அழகாய் எடுத்துரைத்தீர்கள்; அதில் நிரப்பத் திருப்தியடைந்து சங்கையற்றேன்; ஆனால், ஆத்மபோதம் தாங்கிய மோக்ஷ இச்சையுள்ளவர்களுக்கு அந்த சஞ்சிதமானது எவ்வாறு ஜாக்கிர லோகத்திற்கு வந்து பரிணமிக்கிறதென்றறிய மிக்க விருப்பமுள்ளவனாயிருக்கிறேன். ஏனெனில், மனேந்திரிய நிக்கிரஹம் பண்ணுகிற ஒரு யோகிக்கு சொப்பனுவஸ்தை உண்டாகக் காரணமில்லை. ஆதலால், இந்த சஞ்சிதம் அவர்களுக்கு எந்த மார்க்கமாய் எவ்விதமாய் வருகிறதென்று தெளிவிக்கப் பிரார்த்திக்கிறேன்.

கு:— ஆத்ம சூரியனால் கவரப்பட்டு தேஜஸ் வளரா நின்ற நங்காய்! உன் கேள்வி சூக்ஷ்மத்திலும் சூக்ஷ்மமாயிருப்பதோடு எனக்கு மிகுந்த உத்ஸாகத்தையும் உண்டுபண்ணுகிறது.

"குதலை வீரர் களத்திடை வாயினும்
குதலையாயிற் குறவிகள் வாயினும்
மதன விலையில் மங்கையர் வாயினும்
ஒதிக்முறச் செவிக்கின்பம் விளையுமே."

என்று சொல்லியிருக்கிறபடி, சிஷ்யப் பெண்ணாயமைந்த உன் விவேகக்கேள்விகள் ஒவ்வொன்றும் எனக்கு இன்பமே விளைவிக்கின்றது. ஒரு யோகி சஞ்சிதத்தை உணரும் வரலாற்றைச் சொல்லுகிறேன், கேள்.

இந்திரிய நிக்கிரஹத்திலிருக்கிற ஒரு யோகி எப்பொழுதும் ஜாக்கிராவஸ்தையி லிருப்பதினாலும், பகிர்முக விஷய சங்கல்பமென்னும் கதவை அடைத்து முத்திரையிட்டிருப்பதாலும், சுஷுப்தி லோகத்திலிருந்து வரும் சங்கற்பங்கள் அவனால் எளிதில் உணரப்பட்டே பகிர்முகத்திற்கு வரும் அறிவால் உணர்வான். மற்றேனைய ஜீவர்களைப்போல் அவனுக்கு சொப்பனாவஸ்தை கிடையாதென்று நீ அறியக்கடவாய்.

கா:— சுவாமி! தாங்கள் சொல்வது உண்மையே. ஆனால் சென்ற ஆறுமாதகாலமாய் மோக்ஷ இச்சை வகித்து தங்களோடு அருகிலேயே வசித்துக்கொண்டிருக்கிற என்னுடைய சஞ்சிதங்கள் பிரத்தியக்ஷத்திற்கு வருமுன்னர் எனக்குத் தோன்றவில்லையே. அதன் காரணம் யாது? இந்திரிய நிக்கிரஹம் செய்த யோகிக்கு சஞ்சிதம் தன் மனத்தின் வழி வருவது அறியலாமென்று மொழிந்தீர்கள்: அப்படியாயின. அந்தக்கர்மத்தை ஏன் தடுத்தல் கூடாது? தவிரவும், இந்திரிய நிக்கிரஹம் பண்ணுகிற யோகி எப்பொழுதும் ஜாக்கிராவஸ்தையி லிருப்பானென்றும் சொன்னீர்கள்: இந்திரியத்தை நிக்கிரஹம் பண்ணிவிட்டபின்னர், ஜாக்கிராவஸ்தையிலிருத்தல் எங்ஙனம் கூடும்.

கு:—அவ்வருமைக் குழந்தாய்! உனக்கு இதுவரை மொழிந்த பதில்களின் மூலமாய் இந்தக் கேள்விகளுக்குச் சமாதானம் இருக்கும், அப்போதைக்கப்போது புத்தியில் விசாரணை பண்ணி மேற்சொல்லும் நோக்கத்தால் அவை புறந்து முடிந்துபோகின்றனவென நான் நினைக்கிறேன். தவிரவும், பிரத்தியேகமாய்க் கேள்விகேட்டு உத்தரம் தராமலிருந்தது ஒன்றைத்தவிர, முன்னதாகவே என் உத்தரங்களால் இவை தீர்ந்துபோயிருக்கின்றன. என்றாலும், விபரமாய்ச் சொன்னாலன்றிப் புத்தியில் தங்குவது சிரமமே! ஆதலின், நான் இனிச்சொல்வதை ஜாக்கிரதையாயும், பக்தியோடும் கேட்டுச் சிந்திக்கக்கடவாய்.

ஆறுமாதகாலமாய் நீ என்னுடன் வேதாந்த விசாரத்தில் உசாவிக்கொண்டிருக்கிறது வாஸ்தவமே. இந்த நிலையிலிருக்கிற உனக்கு சஞ்சிதவினையின் சொப்பனுவஸ்தை ஒருக்காலும் பிரதிபலிக்காது. காரணமென்னவெனில், உன் மனமானது என் சிரவணத்திலும், அப்பால் அதை நிசித்தியாசனத்திலும், அதன் பின்னர் மனனம் செய்வதிலும் உள்ள ஆகாமிய அழுத்த சங்கற்பத்தால் உன் சஞ்சிதமானது மறைவுபட்டு பகிர்முகப்படுகிறதென்று நீ அறிவாயாக.

இந்திரிய நிக்கிரஹஞ்செய்கிற யோகி சஞ்சிதகர்மத்தை யழித்தாலும், தடுத்தல் கூடாது என்பதற்கு நியாயம் கூறுவோம்கேள். சஞ்சிதத்தின்பொருட்டே பிராரப்தம் நசியாமல் மீண்டும் மீண்டும் வருகின்றது. சஞ்சித சேஷமின்றி பிராரப்தம் புசித்திருந்தால், மீண்டும் ஜன்மமெடுக்கக் காரணமில்லை. ஜன்மமுண்டாவதிலிருந்து அடையக்கூடிய துன்பம், துக்கம், அசிங்கங்கள் முதலியவற்றை நோக்கியே ஏவல் மாகித மென்றும் மோக்ஷத்தை யிச்சிக்கக் காரணம். ஆதலால், பிராரப்தம் புசிக்க வேண்டியதை யறிந்துகொண்டோர் ஞானி அப்புசிப்புக்குத் தடை செய்யாமலிருத்தல் தான் நியாயம். இதை நீ அழுத்தமாய் உணர்ந்துகொள்ள வேண்டும். இன்னமும் சொல்லுகிறேன், கேள். பிராரப்தத்தைத் தடுத்தாலும் நிற்காது, சாந்திக்குறைவு உண்டாம்.

கஷ்டம் நேரிடும். அது எவ்வாறெனில், ஜீவர்கள்பகிர்முகத்தில் இருக்கிற உணவை ஜடமாயுட்கொள்ளுவதொன்றைத் தவிர, அதன் ஜீரண சக்திக்கு முயற்சிக்கவாவது புத்தியினுலாராய்ச்சி பண்ணவாவது அன்றி வேறு எத்தகைய வியவகாரங்கள் நடத்தவாவது இயற்கையில் கிடையாது. பனினும், உட்கொண்ட ஆகாரத்தை இயற்கையிலேயே மல ஜலமாய்ப்பிரித்து விஸர்ஜிக்கத் தயார்பண்ணிக்கொண்டு புருஷன் உணர்ச்சியின் துவாரா தகவல் பெற்று அதன்படி நடந்து கொள்ளுகிறான். அத்தகவலின் பேரில் புருஷப் பிரயத்தனத்தால் நிமிஷக்கணக்கில் தடுக்கலாமே யொழிய, விஸர்ஜித்தல் என்னும் கர்மத்திற்கே இடங்கொடாது அற ஒழித்தல் முடியாத காரியம்: அப்படி ஒருவாறு ஒழிக்க முயலின் புருஷனுடைய ஆக்ஞைக்கு மீறி அநாகரிகத்தை உண்டு பண்ணிவிடும். இது எல்லா ஜீவர்களுக்குமே தெரிந்தவிஷயம். ஆங்கது போல், சென்ற ஜன்மத்தில் சங்கற்பித்த போகப்பொருள் வித்தாகிப் பயிராகி அறுவடையாகி ஜீவர்கள் புஜிக்குமாறு தயாராகி முன்னிற்பதை அறிவாலறிந்த ஞானி எவ்விதத்தடையும் செய்யாமலே அதை அனுபவிப்பது தான் நியாயம். இக்கருத்தையே ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவும் கீழ்க்கண்டவாறு வற்புறுத்தியிருக்கிறார்.

"யத்ய ஹங்காரமாஸ்ரித்ய நயோத்ஸ்ய இதிமந்யஸே!
மித்யைஷவ்யவஸாயஸ்தே ப்ரக்ருதிஸ்த்வாம் நியோக்ஷ்யதி!!'
ஸ்ரீ பகவத் கீதை 18 அத். (59).

ஆகையால், உன் பிரேரபணையன்னியில் மல ஜலம் விஸர்ஜித்தல் எப்படியோ, அப்படியே பிரகிருதியின் பிரேரபணையில் சஞ்சிதப்பொருள்கள் போகங்களாய் மருவுகின்றனவென்று நீ ஐயமறத் தெளியக்கடவாய்.

யோகிக்கு சதா ஜாக்கிராவஸ்தை தான் என்று சொன்னதின் நியாயத்தையும் கூறுகின்றேன், கேள். உலகத்திலுள்ள ஜீவர்களில் யோகியின் ஜாக்கிராவஸ்தைவேறு, சாதாரண ஜீவர்களின் ஜாக்கிராவஸ்தை வேறு. ஜீவர்களின் ஜாக்கிராவஸ்தையானது ஞானேந்திரியங்களைத்தையும் உலகவியா

பாரத்தில் விடுத்து, தத்தம் கொள்கைப்படி மறதியின்றி வேட்டையாடுதலேயாகும். யோகியின்ஜாக்கிராவஸ்தையோ ஞானேந்திரியங்களைந்தையும் ஞான விசாரமென்றும் முள் வெளியிட்டு, மனத்தோடு பொருத்தி, சதா ஆத்மாவினிடத்துக் கலத்தலும், அல்லது தரிசித்திருத்தலுமாகும் என்று நீ அறியவேண்டியது.

கா:— சுவாமி! இந்த வேதாந்த விசாரம் ஆகாமிய சங்கல்பத்தின் அழுத்தமென்றும், அதனால் சஞ்சிதம் வருதல் மறைவு பட்டிருக்கிறதென்றும் மொழிந்தீர்கள். அதுமிகவும் சரியே. ஆனால், இந்த ஆகாமிய சங்கல்பத்தின் சொப்பனம் விளைய வேண்டாமோ? அவ்வாறில்லாதிருக்கின் சஞ்சிதம் மறைவு பட்டிருக்கக் காரணமென்ன? சொப்பனமில்லாதவிடத்து அறிவிற்றுப் புலப்படவேண்டாமோ? தவிரவும், சொப்பனம் இல்லாததின் காரணம் மோக்ஷ இச்சை யென்னும் சங்கற்பம் அழுத்தமன்றென்னலாமோ? இன்னும், பிராரப்தம் நசிப்பதில்லை யென்று மொழிந்தீர்கள்: சரீரத்தை கொளுத்திவிடு கிறதைப் பிரத்தியக்ஷத்தில் பார்த்தபின், நசிப்பதில்லையென்பது எங்ஙனம் பொருந்தும்? இன்னமும், யோகிக்கு சஞ்சிதத்தைத் தடுத்தல் கூடாதென்று அழகாய் மொழிந்தீர்கள். என்னறிவின் தவாரா திருப்திகரமாய்உட்கொண்டேனாயினும், தற்காலத்தில் அனேக ஜீவர்கள் யாதொரு கர்மமும் செய்யாது ஏகாந்தத்தில் தன் சரீரத்தை நிறுத்தி சமாதியில் இருக்கிறார்களே. அவர்கள் சஞ்சித வினையைத் தடுத்தவர்களல்லவா? இது நிற்க, இந்திரிய நிக்கிரகமும் பண்ணுகிற யோகிக்கு உலக சஞ்சாரமுண்டா, இல்லையா? அவன் எவ்வாறு நடப்பான்? எவ்வாறு பேசுவான்? அவனுடைய ஆசாரக் கிரமமென்ன? இச்சங்கைகளைக் களைந்து என்னை ஈடேற்றும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கு:— பலே! பலே!! நன்கு கேட்டனை!!! சமீபத்தில் வந்துவிட்டாய். நிரம்ப திருப்தி: என்பதினை நிதானித்துக் கேட்கக் கடவாய். உன் மோக்ஷ சங்கல்பம் நாமரூபமில்லாதிருந்து

லாலும், நாமரூபத்தைப்பற்றிய சங்கற்பமே சொப்பனத்தில் பிரதிபலிப்பது இயற்கையாதலாலும், மோக்ஷ விச்சையென்னும் உன் ஆகாமிய சங்கற்பத்தைப் பொறுத்து நீ எவ்வித சொப்பனமும் காணக்காரணமில்லை. சொப்பனமில்லாதவிடத்தும் நாமரூபத்தால் நடனமில்லையே யொழிய நாமரூபமற்ற மோக்ஷ சங்கற்பம் என்னும் கவசம் சஞ்சிதத்தைக் காட்டாமல் மறைத்துவிட்டதென்றும், ஆதலின் உன் சங்கற்பம் அழுத்தமானதுதான் என்றும், யோகியைப்போல் அறிதல் கூடாதென்றும் நீ அறியக்கடவாய்.

சரீரத்தைக் கொளுத்துவதினின்றும் பிராரப்தம் நசியாது. அது எவ்வாறெனில்:— பிராரப்தத்திற்குத் தாயாகிய பிரகிருதியின் சம்பந்தமிருத்தலாலும், அந்தப் பிரகிருதியின் சம்பந்தம் தந்திக்கம்பியின் காந்த சக்திபோல மனோவாக்குக் கதீதமாயிருப்பதாலும், அதில் தோற்ற மாத்திரமாய்த் தென்பட்ட சரீரத்தைக் கொளுத்தினாலும் அதற்காதார பூதமான மூலம் கொளுத்தப்படுவதில்லை. சஞ்சிதத்தின் அளவு, பிராரப்தத்தின் சூக்ஷமம் மறைந்து புனரபி சஞ்சிதத்தோடு ஜன்மம் வருகின்றது. இது நிற்க, இன்னுமோர் தத்துவமுளது. பஞ்ச பூதத்தால் உண்டாயது, சரீரம்: பஞ்சபூதமோ, பிரகிருதியில் உண்டாயது; இதிவ்வாறிருக்க பஞ்ச பூதத்தில் ஒரு பூதமாகிய அக்கினி இதற்குப் பகையாகாது; இதைக்கொளுத்தவுமாட்டாது; இதைக்கொளுத்தினது மாகாது. அறிவதும், கொளுத்தப்படலான பூதம் போற்றோன்றிய சரீரமும் மாயை; யதார்த்தமல்ல. இந்தவிடத்தில் நீ சங்கை கொள்ளாவண்ணம், ஸ்ரீ ராமனுடைய தத்துவத்தைக் கேட்பாயாக. ஸ்ரீ ராமன் தன் பத்தினியைக் கவர்ந்துகொண்ட ராவணனோடு யுத்தம் செய்யுங்காலத்தில் ராவணனதியர்கள் ராமனோடு போர் புரிவதில் சளைத்து மாயையால் ராமனுக்கு முன் ஓர் நாடகம் நடித்தார்கள். அதாவது, சீதையின் நிமித்தமே ராமன் யுத்தம் பண்ணுவதால் சீதை இறந்துவிட்டாளெனக் காண்பிக்கின், ராமன் இறந்தோ அல்லது ஓடியோ போய்விடுவான் என்று எண்ணத்

கொண்டு ராக்ஷஸ மாயையினால் சீதையாக ஒரு உருவுண் டாக்கி அந்தப் பொய்ச் சீதையை யுத்தாங்கத்தில் ஹநுமான் முன்பு காட்டி வாளால் வீசினர்கள். அக்கோத்தில் ராமன் யதார்த்தத்தை உணர்ந்தவனாயினும், தான் செய்யும் கபட நாடகத்தின் நிமித்தம் மூர்ச்சையடைந்தான். அதின் பின்னர் சரீர உருவில் ராவணனுக்குச் சகோதரனாயும், மனோ தத்துவத்தில் ராமனுக்குச் சகோதரனாயுமுள்ள விபீஷண ஆழ்வார் ராக்ஷஸமாயை என்றுணர்த்தி ராமனைத்தேற்றினர். அந்தக்காலத்தில் குறிப்பித்தவிஷயம் ஒன்றே. அஃது என்னை யெனில், சீதையிருப்பது அசோகவனமென்று ஏற்கனவே ஆஞ்சநேயரால் தரிசிக்கப்பட்டுத் தெரிவித்திருப்பதை ஞாபகத்திற்குச் சுட்டிக்காட்டிய சொல்லென்ன வெனில், "ஹே, ரகுபதே! என் மாதாவிருப்பது அசோகவனம்: என் தமையன் இறப்பது சோகவனம்." இதன் பொருள் என்ன வென்றால், சோக வனத்திற்குரியவன் இறப்பவனே யென்றும், அசோக வனமொன்றிருப்பதாக யூகிக்கக்கூடிய சக்தி யற்றவனென்றும், அசோக வனம் மனோவாக்குக் கதிதமான தென்றும், அதிலுள்ள சக்தியை யாவராலும் ஸ்பரிசிக்கவும், கொல்லவும் முடியாதென்றும் விளக்கியதாகும். ஆதலால் சூக்ஷ்ம தத்துவமாகிய பஞ்சபூதச் சேர்க்கையால் உருப் பெற்றுத் தோற்றமாத்திர மாயிருக்கும் இந்த சரீரத்தை அதே பஞ்சபூதத்திலொன்றான அக்கினி எரித்ததென்றால், அவிவேகிகளைத் தவிர விவேகிகள் ஒருங்காலத்திலும் எரித்த தெனச் சொல்லார்கள். தவிரவும், இன்னுமோர் திருஷ்டாந் தம் சொல்லக்கேள். அரையனுக்கொடுத்து வேடிக்கை பார்க்கும் செப்படி வித்தையில், ஒருவன் தன் புதல்வனை வயிற்றில் கத்தியினால் குத்தி கத்தியோடு அவனை ஒவ்வொரு வர் பாலும் கூட்டிச்சென்று காசை வசூலித்த பின்னர் கத் தியை எடுத்துவிடுகிறான். அவன் வயிற்றில் குத்தப்பட்ட காயமும் இல்லை. இதைப் பிரத்தியக்ஷமாய் நாம் பார்த்து அனுபவித்திருக்கையில், அக்கினியாகிய ஒரு பூதம் மற்ற நான்கு பூதங்களாகிய பிருதிவி, அப்பு, வாயு, ஆகாசம் ஆய்

லும் நான்கையும் எரித்துவிட்டதெனச் சொல்லும் கதை, மேலே சொன்ன ஜாலவித்தையே.

அடுத்த கேள்விக்குச் சமாதானம் கூறுவேன், கேள். இதுவரை நிகழ்ந்த வியவகாரத்தில் இதற்குச் சமாதானம் புதைந்து கிடக்கிறது. அதைத் தோண்டியெடுக்கும் சிரமத்தை நிவர்த்திக்கக் கேட்கிறாய் போலும்! அதாவது, உனக்கு இப்பொழுது போதிக்கும் யோக மார்க்கமானது உன் பக்குவம் ஆரம்பத்திலேயே ஞானத்தொட்டு அதன் முடிவுவரை வியாபிக்கும் யோகமென்றும், இதற்குக் கீழ்ப்பட்ட யோகமார்க்கம்வேறு ஒன்று உளதாகவும் ஏற்கனவே பிரஸ்தாபித்திருப்பது ஞாபகத்திலிருக்கலாம். அந்தயோகமோ அதின் அறித எல்லைபரியந்தம் மனத்தின்தொழிலேயாகும். அந்தத் தொழிலு பூதப்பிறகிருதி சம்பந்தமான ஜன்மாந்தர சத்கர்மாவை அநுசரித்து நவக்கிரஹங்களின் ஆளுகைக்குட்பட்டதாகும். ஆனதுபற்றி ஜன்மாந்தர சங்கற்பத்தில் மற்றேனைய சங்கற்பங்கள் இல்லாமல், யோகசங்கற்பமானது நடைபெறுவதால் மற்ற சஞ்சிதங்களிருந்து யோகவழியால் நிவிர்த்தித்தவன் என்று சொல்லப்பொருந்தாது. அந்த யோகத்திலும் இச்சையற மனம் யோகத்தில் நிலைத்திருப்பதும் அபூர்வம். ஏனெனில் நாமரூபத்தில் தென்படும் வஸ்துக்களில் பிராரப்தமிருந்தாலும், இல்லாவிட்டாலும் மனம் மோகத்திற்குட்பட்டு அலையும் சுபாவத்தை நவக்கிரஹ உதவியாலும், பூர்வ சங்கற்ப மின்மையாலும் தவிர்த்திருக்கப் பொருந்துமே யல்லால், மனோவியாபாரமடங்கி யோகத்தில் அடங்கியிருக்குமென்பதை நிச்சயமாய் நாம் நிர்மாணிக்கவும், மறுதளிக்கவும் முடியாது. ஆகையால், உனக்குச் சொல்லும் யோகத்தின் அவஸ்தையும், எல்லையும் வேறு; அந்த யோகத்தின் அவஸ்தையும், எல்லையும் வேறு. அந்த விஷயத்தைப்பற்றி அதற்குரிய பக்குவிக்கு இனிச்சொல்லப்போகும் இரண்டாவது கண்டத்தின் மூலம் தெளியுறக்காணலாம். இந்தவிடத்தில் விரித்துக்கூறச் சம்பந்தமில்லை. ஸ்ரீகிருஷ்ண பகவான்

கர்மண்ய கர்மய: பச்யேத கர்மணிச கர்மய:!
ஸபுத்திமான் மனுஷ்யேஷு ஸ யுக்தக்கிருத்ஸ்நகர்மகிருத்!!
ஸ்ரீ பகவத் கீதை அத்யா. 4. (18)

என்று வற்புறுத்தியிருக்கும் வண்ணம் இந்த யோகம் வேறு எனவும், ஞானிகள் கர்மஞ் செய்தவிடத்தும் கர்மங்கடந்தவர்களென்றும் வியக்தமாய் வெளியாகும். இன்னும், சிவவாக்கியர் கூற்றையும் ஓர்ந்திடுவாய்.

“மனத்தகத்தழுக்கறாத மௌனயோக ஞானிகள்
வனத்தகத்திருக்கினும் மனத்தகத்தழுக்கறார்,
மனத்தகத்தழுக்கறுத்த மௌன யோக ஞானிகள்
முலைத்தடத்திருக்கினும் பிறப்பறுத்திருப்பரே,”

திருவள்ளுவநாயனாரும் இதே கருத்தைக்கொண்டு தம் குறளில் “மனத்துக்கண் மாசில னாதலனைத்தான்;
ஆகுல நீர் பிற,”
என்று கூறியிருப்பதையும் காண்க.

பெண்ணே! இனி, உன் கடைசி கேள்விக்குத்தாம் சொல்லுவேன், கேள். இந்திரிய நிக்கிரஹம் பண்ணுகிற யோகிக்கு உலக சஞ்சாரம் உளதேயானால், மனத்தாலன்று மற்று, கர்மத்தால் மாத்திரமென அறியக்கடவாய்.

கா:— சுவாமி! குழந்தை தன் தாயினுடைய சரீர சிரமந்தெரியாமல் அமிருதத்தைப் பருக முலை கடிப்பதுபோல், என் கேள்விகளும் விளைந்துகொண்டிருக்கின்றன. ஆனால் உபரி மேலும் மேலும் சஞ்சரித்து வருகிற கேள்வியாயிருத்தல் பற்றி, நான் கிஞ்சித்துத் துணிவடைகிறேன். என் கேள்விக்கிடமில்லாதிருக்கும் வரை நான் சஞ்சரித்தாலன்றி நான் தனித்திருக்கப் பொருந்தாது. ஆதலின் கேள்வி இறக்குமிடத்தையே நான் கோருகிற வரையிலும் ஜனித்த இந்தக் கேள்விகளுக்கு மன்னித்துக் கிருபை பாலிக்க வேண்டுகிறேன். என் சங்கற்பத்திற்குக் காரணம் நாமரூபமில்லையேயாயினும் அதை விவரிக்கும் வஸ்துவாகிய ஆசாரிய சொரூபம் எனக்கு முன் விளங்கிக்கொண்டு, நாமரூபமில்லாத வஸ்துவைப்பற்றி போதித்துக்கொண்டிருக்கையில், இப்

வாறுள்ள விஷயங்கள் சொப்பனத்தில் சேரவோ? சேரா திருக்கக் காரணம் என்ன? பிராரப்த சரீரத்தை மாயை யென்றும், அதை வரித்ததாய்க் காணுதலும் மாயையே யென்றும் மொழிகிறீர்கள்; ஆதலால், மாயை என்பது என்ன? அது உண்டாவதும், அழிவதும் எங்ஙனம்? அதன் வியாபகம் எத்தகையது?

ஞ:— இதற்குச் சமாதானம் முன்னமேயே சொன்னது தான். ஆயினும், ஆசாரிய சம்பந்த காமரூபத்தை யுத்தேசித்துக் கேட்கிறாய் போலும்! நல்லது! கேட்க வேண்டியதே!!! இந்த விடத்தில் தான் நீ கர்மயோகி யென்று தெரிந்து கொள்ளவேண்டும். கவனித்துக்கேள். காமரூபத்தோடு தென்படுகிற ஆசாரியனை காமரூப சம்பந்தத்தை நீக்கி அவ்வாறே நீயும் காமரூபத்தை இழந்து பரஸ்பரம் அறிவில் யோகமாக நிற்றலின், அந்த யோகம் உணர்ச்சிக்கு சம்பந்தப்பட்டதாகிறது; ஆதலின், உருவ சொப்பனம் ஒன்றும் காணாது. ஆனால், இன்னுமொன்று சொல்லவேண்டியதவசியம். ஒரு குளத்தின் ஜலத்தில் ஒரு கல்லைப்போட்டால், கல் ஜலத்திற்கு அன்னியமாதலாலும், ஜலத்தோடு லயமாக முடியாததாலும், கல்லைப் பிரத்தியேகமாகக் காணலாம். மேற்படி ஜலத்தில் ஒரு குடம் பாலை விட்டால், நிறத்தில் பால் அன்னியமாகக் காணப்பட்டாலும், பாலும் நீரும் ஸஜாதியாதலால் ஜலத்தில் பால் லயமாய்விடும். அங்ஙனம் போல், பகிர்முக சிரவணத்திலிருந்து வழிய ரசத்தை மனதில்கொள்வதினாலும், மோக்ஷ சங்கற்பம் அருவமாயிருந்தலாலும்; இவை அருவத்தில் அருவமாய் லயமாகின்றன வென்று இந்த ஏகதேச உவமானத்தால் நீ தெரிந்துகொள்வதோடும், என்னைக் குருவாயடைந்து நீ கேட்கும் சிரவணமே கர்ம யோகமென்றும் நீ நன்கு மதிக்கக் கடவாய்.

மாயை என்பது:— இந்திரிய சமூகத்திற்கு எது தோன்றித் திரிந்து, அழிகிறதோ அதுவே மாயை யெனப்படும். மாயை யென்றால் உண்மையல்லாதது என அறிக. அதன்

வியாபகம் பெறுவதாயென்றால் ஜாக்கிர சொப்பனமென்று சொல்லியவாறு வியாபித்துள்ளது. இதற்கு மாறுதலும், மறைதலுமே சுபாவமென அறிவாய். இதுவே பிராரப்த, சஞ்சித ஆகாமியத்திற்கு மூலகாரணம். சுருங்கச் சொல்லில், உருவமாய்த்தோன்றும் எந்த பதார்த்தமும் மாயையே யென்று நீ சத்தியமாய் அறியவேண்டியது. இதற்கு உண்டாகுமிடமும், ஒடுங்குமிடமும் மனமேதான்.

கா:— சுவாமி! தங்கள் சிரவணாமிருதம் என்னும் வெள்ளத்தில் என் சந்தேகங்கள் என்னும் உப்பு அனேகமாய்க் கரைந்து லயமாய்விட்டன. ஆயினும் இன்னுமொரு கேள்வி இந்த விடத்தில் ஜனிக்கிறது. மாயையின் உற்பத்திக்கும், லயத்திற்கும் காரணம் மனமென்றும், அது மாறுதலும், மறைதலும் அடைதல் சுபாவமென்றும் சொன்னீர்கள்: அவ்வளவில் நான் தெளியப்போகாது. ஆதலால் விரித்துக் கூறும்படி வேண்டிக்கொள்கிறேன்.

கு:— பெண்ணே! முக்கியமான சந்தேகங்கள்தான். நிறைய திருப்தி! சொல்லுவதைக்கேள். முன்னமேயே ஆசைதான் சங்கற்பத்திற்குக் காரணமென்றும், சங்கற்பமே மனமென்றும் சொன்னோம். இப்பொழுது மாயை இன்னதென்று சொன்னோம். ஆதலால், மாயையின் தோற்றத்தில் ஆசை விளைந்து, ஆசையால் சங்கற்பமென்னும் மனம் உருப்பெற்று விளங்குகிறது. இந்த மாயையை ரமிப்பது சரீரமல்ல. சரீரம் ஸ்பரிசிப்பதைத்தவிர, அதற்கு வேறு ரமிப்புக்கிடையாது. ரமிப்பதெல்லாம் மனமே தான். ஜாக்கிரத்திலும் சொப்பனத்திலும் ரமிக்கின்றது. சுஷுப்தியில் மனமிறந்து கிடத்தலால், தோற்றப்பட்ட எல்லா மாயைகளும் மனத்திலொடுங்குகின்றன வென்றும், ஜாக்கிரத்திற்கு வருங்கால் மனம் விகசிப்பதோடு உலகமான மாயைகளும் விகசிக்கின்றனவெனவும் காண்பாய். மறைதல் என்பதே ஒடுங்குதல் எனக்கொள்க. மாறுதல் எவ்விதமெனில், பால்யம், யௌவனம், கௌமாரம், ஜரையென்ற நான்கு அவஸ்தைகளிலும்

இந்தச்சரீரமே மாறுதலடைந்து வருவதனால் மாறும் சுபாவமுடையதென்றதை நன்குணர்க. ஆதலின், மாயை என்ற நாமம் நன்கு பொருந்தும். இனியும் கேட்கவேண்டிய விஷயங்கள் ஏதாவதிருப்பின், ஐயமின்றிக் கேட்கக்கடவாய். நான் சமாதானம் சொல்ல ஆனந்தமாயிருக்கிறேன்:

கா:— சந்நிதானத்தில் திருவுளம்பற்றிய யாவும் ஒன்றுவிடாமல் ஞாபகம் பண்ணிக்கொண்டேன். பிரகிருதியிற்றோன்றிய திரிகுணமானது சத்துவ சொரூபத்தில் மருவி நானாவித பேதவர்ணங்கள் உண்டாகி அதில் மோகித்து சங்கற்பம் உண்டாகி, அந்த சங்கற்ப தோஷத்தால் நீண்ட உலகந் தோன்றி, ஜாக்கிற-சொப்பன-சுஷுப்தி யென்னும் மூன்று அவஸ்தைகளின் அனுபவத்தால் தோன்றுவது மிறப்பதுமாயிருப்பதுபோல, ஜன்மம் மறைவதும், மீளுவதுமாயிருக்கின்றது எனத் தெரிந்துகொண்டதோடும்; மனமே மூல காரணமென்றும், இந்த மனத்தை நசிக்கச்செய்யில் ஜன்ம ரகிதமாகலாமென்றும் அறிந்தேன். எனினும், இதுவரை கேட்டதில் நித்தியம், அநித்தியம் என்று விவரித்துச் சுட்டிக் காட்டும் பொருள் இருப்பதாக எனக்குத்தோன்றவில்லையே அதன் நியாய மெவ்விதமெனக் கேட்க விரும்புகிறேன்.

கு:— பெண்ணே! உன் சந்தேகம் அதி சூக்ஷ்ம அறிவில் தென்பட்டது. அது பொய்த்துப்போக நியாயமில்லை. நன்குணர்ந்தனை. விவரமாய்ச்சொல்லுகிறேன், கேள். சாகுபடிக்காக கட்டிவைத்திருக்கும் நெல் வித்தென்று சொல்லப்படும். அதை ஒரு பெரும் பாத்திரத்தில் போட்டு ஜலம் விட்டு இரண்டு நாள் நிர்ந்த பின்னர், முளையென்று சொல்லப்படும். அதை மூன்றாம் நாள் ஒரே நிலத்தில் ஓர் ஓரத்தில் விதைக்கில், அதற்கு நாற்றங்கால் என்று சொல்லுவார்கள். அது ஒரு மாதக்கிரமித்து வளர்ந்திருக்கில் அதை நாற்றென்று நாமமிட்டு அதைப்பறித்து பாக்கி நிலத்தில் ஊன்றுவார்கள்: பின்னர் அது பயிர் என்று சொல்லப்படும். அதன்பின் அது நெல்லைச்சிரசில் வைத்திருக்குங்கால், பூர்வ

ந்திரியாகிய நெல் என்று சொல்லப்படும். இதில் நீ தெரிந்து கொள்ளவேண்டிய விஷயம் ஆரம்ப நெல் முதல் அந்திய நெல் பரியந்தம் இடையில் நிகழ்ந்த தொழிலுக்கும் மாறி மாறி வரும் உருவத்திற்கும் கர்மமென்ற நாமமும், பலவிதமாய்த் தோன்றி மாறியழியும் தன்மைக்கு மாயையென்றும் மேலோர் கூறியுள்ளார். அதன் முடிவு:— ஆரம்ப அவஸ்தையும் நெல்லே, அந்திய அவஸ்தையும் நெல்லே; மத்தியில் உண்டாவது கர்மமும், மாயையுமென்றறிவாய். இவ்வும் உன் சந்தேகத்தைத் தீர்க்கிறேன் கேள். இவ்விடத்தில் பஞ்ச பூதங்களோ கர்மமும், மாயையுமாகும். பஞ்ச பூதமின்றி ஒன்றும் தோன்றாது. ஒரு பூதம் ஒரு பூதத்தில் லயமாகின்றது. பிரகிருதியோ, பிரம்மத்தில் லயமாகின்றது பிரம்மத்தில் லயமாகுங்காலமே சுஷுப்தி. அந்தசுஷுப்தியும் இயற்கையே. அதிலிருந்து மீண்டு உலகம் வரை மீளுவதும் இயற்கையே. ஆதி அவஸ்தையை உத்தேசித்தும் தோன்றியது மறையும் முறைத்தாலும் அநித்தியமென ஜீவர்களின் பக்குவத்தை யுத்தேசித்துக் கூறியுள்ளார். ஆனால் நித்தியமான வஸ்துவிலிருந்து தோன்றி மீண்டும் நித்தியமானவஸ்துவில் லயமாவதாலும், இந்த இயற்கை தத்துவமானது ஒரு வழிப்பட்டு எக்காலமும் நடந்தேறி வருவதால் அநித்திய மென்றுவது, மாயை யென்றுவது தத்துவ தரிசிகள் கூறப்பொருந்தாது. இதற்குபமானம், ஒரு புருஷனுக்கு அழகு வாய்ந்த ஓர் புத்திரியிருந்தால், அந்தப் புத்திரியின் சுபாவம் பிதாவினிடத்தில் பேசும்போதும், விளையாடும்போதும், போஜனம் செய்யும்போதும் பெண்ணுக்குரிய சுபாவமே பொருந்துமல்லால் புருஷனுக்குரிய சுபாவம் எதிர்பார்க்கக் கூடியதில்லை' ஆதலால், தன் புத்திரி மாயையின் சுபாவம் பொருந்தியிருப்பது பெண்ணின் சுபாவமென்று புத்திரியைப்போலவே இயற்கை சுபாவத்தை மறந்து பாவிப்பாள். அப்படிக்கல்லால் அவனுடைய எந்தக் குறியையுங் கொண்டும் பெண்பால் சன்மார்க்கத்திற்குமனமிழுந்[illegible] மாட்டாது. ஆங்கதுபோல் பிரம்மத்தின் சுபாவத்[illegible]

உத்தம விவேகிகள் மாயையென்றும், கர்மமென்றும், சத்தென்றும், அசத்தென்றும் பாராமல் அந்த நித்திய வஸ்து வன்றியவையவத்தின் லீலையென்று இச்சிக்காமலும், துவேஷிக்காமலும் உலகத்தில் பொருந்திவாழ்வார்கள். நீயும் அவ்வாறு ஆதலால், கர்மயோகத்தைச்செய்ய நீ முயலுவாயாக!

கா:— சுவாமி! தங்களிருபாதங்களுக்கும் சாஷ்டாங்க நமஸ்காரம். நாவிரசித்த விடத்திற்கு எனி கொடுத்தேற்றியது போல இருக்கிறது. மறைத்தான சந்தோஷமடைகின்றேன். நான் பருகும் சாந்தியமுதமானது என்றும் வழிந்தோடக்கண்டுருகின்றேன். இனி யெனக்கு யாதொரு சந்தேகமும் இல்லை. என்னைக் கர்மயோகஞ் செய்ய உத்திரவாகின்றது. மனமறச்செய்ய வேண்டுமென்று மொழிந்தீர்கள். அந்த யோகத்திற்கு எந்தக் கர்மாவை நான் எடுத்துக்கொள்ள வேண்டும்? கர்மயோகஞ்செய்வதென்றால் எனக்கு எப்படிக் கூடும்? சஞ்சிதத்தாலேயே பிராரப்தம் போகங்களைப் புஜிக்கிறதென்று நான் சங்கையறத் தீர்மானித்த பின்னர், நான் செய்யும கர்மயோகங்கள் யாவை? அவ்வாறு கர்மயோகஞ் செய்யில், யோகஞ் செய்தது யார்? நான் யார்? இந்த சங்கைகள் முளைக்கின்றனவே. இவற்றையறுத்துப் பரிபூரணமாக்கி வைக்கப்பிரார்த்திக்கின்றேன்.

குரு:— 'பெண்ணே! உன் கேள்வி முத்து முத்தாயிருக்கின்றது. உன்ன [illegible] மிஷத்துக்கு நிதிஷம் வளர்ந்து, பதார்த்தத்தி [illegible], ஆடை ஆபரணங்களை யவிழ்த்து நிர்வாண [illegible] ர்ப்படுத்திக்கொள்வதை நான் நன்கு உணர் [illegible] ன்மம் சாபல்யம். அந்த சாபல்யமே [illegible] ாபல்யம். குறளில்.

[illegible] லகின் புறக்கண்டு
[illegible] ந்தார்."

[illegible] ர் கூறியிருப்பதை நீ கேட்டிருக்க [illegible] அதோ போகங்கள் புஜிப்ப [illegible] தமோ போகங்களைத் தயார்

பயன்களியைத் துக்கொண்டு பிராரப்தத்தின் முன்னே தோற்றி வைப்பது. இதில் இச்சை சம்பந்தப்பட்ட சுகதுக்கமின்றி அநுபவித்தல் யோகமென்று சொல்லப்படும். மேற்சொல்லியவண்ணம் அநுபவித்தல் மனமிறந்த இடமாகும். அதை சகஜமாக அநுபவிக்க முடியாவிடில் கர்மயோக அப்பியாசம் செய்யவேண்டும். பிரத்தியேகமான கர்மங்களை வருவித்து அப்பியாசிக்க வேண்டுவதில்லை. பூர்வ ஜன்ம விசேஷத்தால் எந்தக்கர்மம் நம்முன்னிற்குமோ அந்தக் கர்மத்தைச் செய்வது கடமை யென்றெண்ணி, சங்கற்ப விகற்பமறச்செய்யக்கடவாய். அதெவ்வண்ணமென்றால், பாயசம் செய்வதற்குக் கருவியாய் நின்ற பாத்திரமும், அகப்பையும் அதன் ருசியை எவ்வாறு அறியாதோ, அதே மாதிரி சரீர மாத்திரமாய் போகங்களை புஜித்துவரும் மார்க்கமே கர்மயோகம் என்று நீ நண்ணியக்கடவாய். இப்படிச் செய்யும் கர்மமானது வினையால் செய்யப்படும் வினையேயாகும்: அதற்குக்கர்த்தா நீயல்ல. நீ செய்தவளாகவும் காணப்படமாட்டாய். இதுவே ஞானயோகமென்றும் கூறத்தகும். இந்த விடத்தில், நீ சாக்ஷிமாத்திரமாயிருப்பவள்.

கா:— தாங்கள் சொன்ன யோகம் மிகுந்த சிரேயசுக்கிடமானதே. இதுவே ஞானயோகமெனச் சொல்லலாமென்று சொன்னீர்கள், . ஏது எவ்வாறிருப்பினும் எதற்காகப்பிரத்தியேகமாய் ஒரு யோகத்தை அப்பியசிக்கவேண்டும்? அந்தக் கர்மத்திலும் எனக்கென்ன லாபம்? அதை யப்பியசிப்பதென்ற சங்கற்பத்தைத் தான் நான் ஏன் எடுத்துக்கொள்ள வேண்டும்? இதுவரை நான் தங்களிடம் செய்ததும், செய்யப்போகிறதுமான சிரவணத்தைக் காட்டிலும் வேறுயோகஞ் செய்வதின் மூலம் எனக்கொரு சிரேயசு உண்டாகாதென நான் நினைக்கிறேன். என்னறிவும் இனி அந்தச் சங்கற்பத்தையு மெடுத்துக்கொள்ள சமாதானமடையவில்லை. உள்ளதை உள்ளதாகவே அநுபவிப்பதில் நான் பிரத்தியேகமாய் நின்று, சாக்ஷியாயிருந்து கவிக்கத்தயாராயிருக்கிறேன். ஆகிலும் அனேக விஷயங்கள் தெரிந்துகொள்ளவும் இச்

டப்படுகிறேன். அப்படித் தெரிந்துகொள்ளவேண்டிய சங்கற்பம் தங்கள் சிரவணவாயிலாய் அறிந்தபின்னர் முத்திக்கு வேண்டியசாதனம் தேவைப்படாதிராதெனச் சத்தியமாய் நினைக்கிறேன். ஆதலால் தங்கள் வாசாயிலிருந்து வருகிற ஞான போதத்தையும் கேட்க ஆவலுள்ளவனாயிருக்கிறேன். அப்பால் தங்கள் திருவுள்ளத்துக்கு ஒப்பவும் நடக்கத்தயாராயிருக்கிறேன். இவ்வளவு தூரமெடுத்துச் சொன்ன என் பிரயுத்தரத்தில் குற்றமிருந்தால் க்ஷமித்து என்னைத் தடுத்தாட்கொள்ள வேண்டுகிறேன்.

கு:— பெருந்தகைமை பொருந்திய பெண்பாவாய்! உன் அறிவு, கடன்றுண்டு வந்தவாறும், களங்கமற்றதாயுமிருக்கின்றது. நீ நன்று மொழிந்தனை. எந்தக் கர்மத்திலும் தனக்கொரு லாபமில்லையென்றும், அப்படிச் செய்யப்படும் கர்மாக்கள் பிரகிருதியின் வலுவால் நடைபெறுகின்றனவென்றும், ஆத்மாவாகிய தனக்கு யாதொரு சம்பந்தமுமில்லை யென்றும், எந்தக்காலத்திலும் அசஞ்சலமாய் உணர்ந்து எல்லாக்கர்மங்களையுஞ் செய்து தான் ஒன்றுஞ் செய்யவில்லையென்று சத்திய புத்தியில் திடம்பெற்று எவன் நின்றானோ, அவனுக்கு எந்த நிஷ்டையும் வேண்டுவதில்லை. ஆதலால் உனக்குபதேசஞ் செய்த ஆசாரியனாகிய எனக்கு உன் வாக்கிலிருந்து [illegible] இப்பேற்பட்ட வசனங்களைக் கேட்கிற பரியந்தம் சாதிக்கும் முறைகளைச் சொல்லுங்கடமையைப் பற்றி நான் உபதேசிக்க வேண்டாமோ? தவிரவும், உன் அறிவு என்னும் கனி, கொம்பில் நின்று பழுத்திருப்பினும் அது கொம்பைவிட்டு இன்னும் உதிராத தன்மையிலிருப்பதை உன் வாசா மூலம் நன்றாய் உணர்கிறேன். இன்னும், என் சிரவணமூலமே இவ்வளவு தூரம் பழுத்திருப்பதனால், இனியும் கேட்கப்போகிற சிரவணமூலம் [illegible] என்பதில் எனக்கு யாதொரு சம்சயமுமில்லை. யோகாப்பியாசமென்னும் சங்கற்பமே இனி உனக்கு வேண்டியதில்லை. என் சிரவணத்தில் மனம் லயமாகும் போதமே போதுமென உன் அபிப்பிராயத்தை நானும் ஆமோதிக்கிறேன். ஆயி

னும், நான் சங்கற்பத்தைக் கொடுத்து நீ மறுதளிக்கும் உன் ஸ்திர புத்திக்கு, ஆசாரியனுகிய ஒருவன் மேலும் மேலும் உன் மேல் பிரீதியடைந்து ஆசிர்வதிப்பானேயொழிய, அதிகப்பிரசங்கியென்று சொல்லி உல்லங்கனம் செய்ய இந்தவிடத்தில் நியாயமில்லை. இதற்கேக தேச உவமானமொன்று கூறுவேன், கேள். ஒரு பையன் தன் படிப்பில் மிகுந்த ஆவலோடுங் கூடிப் படித்து வந்தான். அவன் பெற்றோர்கள் அவனுடைய படிப்பு எவ்வளவு காலம் நீடிக்குமென்று தெரிந்துகொள்ள வெண்ணி, போஜன காலத்தில் நெய்க்குப் பதிலாக இலுப்பெண்ணெயை அவனுக்குப்பரிமாறி வருவது வழக்கம். பையனே வெனில், படிப்பின் மேலுள்ள காதலைக்கொண்டு இந்தக் கர்மத்தைக் கர்மமாகவே புஜித்துவந்ததனால் பெற்றோர் செய்த மர்மம் வெளியாகக் காரணமில்லாமலிருந்தது. பையன் உயர்ந்த பரீக்ஷை தேறிய பின்னர், தாய் பரிமாறினதை இலுப்பெண்ணெ யென்றுணர்ந்து தாயைக் கடுகடுத்தான். அதிலிருந்து படிப்பின் காதல் நிவர்த்தியான கட்டத்தை யுணர்ந்து, இனிப்படித்தல் கூடாதெனத் தீர்மானித்தார்கள். இதினின்றும் இரண்டு விஷயங்களை நீ ஊகித்தறிய வேண்டும். நான் சங்கல்பத்தைப் பிரயோகிக்குங்காரணம் நீயதை மறுத்து என்னிடத்தில் பயமறக்கண்டித்து நிற்குங் காலத்தை எதிர்பார்த்ததென்றும், அது இந்தவிடத்தில் ஆசாரியன் சம்பந்தப்பட்ட வரையே யென்றும் அறிவாயாக. மற்றொன்று, உன் சம்பந்தம்; அஃதெங்ஙனமெனில், உயர்ந்த பரீக்ஷை தேறுகிற பரியந்தம் மனமென்னும் ஆறு இந்திரியங்கள் படிப்பில் லயமாகி யிருந்ததால் போஜன கர்மமானது கர்மமாகவே செய்யப்பட்டது. உயர்ந்த பரீக்ஷை தேறிய பின்னர் படிப்பிலிருந்த புத்தி நழுவி உலக வியாபாரத்தில் பொருந்தியபடியால் போஜனத்தின் மர்மம் இந்திரியங்களின் வழி நுகர நேர்ந்தது. ஆதலால் பையனைப் போலிராமல் ஆத்மாவில் பிரவேசித்த மனுதி யிந்திரியங்கள் மீண்டும் ஜனிக்காவண்ணம் லயமான விஷயத்தை நீ நன்குணர்ந்து சொல்லுவது உன் கடமையாகும்.

கா:— பவசாகரத்தில் வீழ்ந்து சத்துருக்களென்னும் மச்சங்களாலும், அலைகளாலும் அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்த என்னைக் கரையருகில் இடுப்பளவு தண்ணீரில் நிற்கவைத்து, இளைப்புற்றிருக்கிற எனக்குக் கை நீட்டி, கரைக்கிழுக்க உதவி செய்யும் கிருபாமூர்த்தி! சொல்லிறந்த விடமான அகண்ட சாம் ராஜ்யப் பட்டாபிஷேகஞ் செய்ய எனக்காக வீற்றிருக்கும் தங்களுக்குச் சொல்லால்முழக்கும் நன்றி பயனற்றதாயிருக்கிறது. எந்த யோக நிஷ்டையாலுளும் ஆத்மாவாகிய வெனக்குச் சம்பந்தமில்லையாதலாலும், பிரகிருதிக்கே அது சம்பந்தமுள்ளதாயிருத்தலாலும், அந்தப் பிரகிருதி என்னிடத்தில் லயமாகக் கூடியதொரு காலம் இருப்பினும் அதுவரை அந்தப் பிரகிருதி நான் சம்பந்திக்காமலே தொழில் செய்யும் சுபாவமானதினாலும், அந்தப்பிரகிருதி என்னை யாசிரயித்து இருப்பதைத்தவிர நான் அதை ஆசிரயித் திருப்பதல்லவென்று திடப்பிரக்ஞையால் நான் உணர்ந்து அநேகமாய் அனுபவித்து வருவதால்; எந்தக் கர்மத்தையும் செய்யப் பிரத்தியேகமாய் நான் இச்சை கொண்டவனுமல்ல. அது செய்யும் சுபாவத்தைத் தடுப்பவனுமல்ல. இந்த விரண்டிற்கு மிடையில் சாக்ஷி பூதனாயிருப்பது நானே யென்று சத்தியமாயுணர்ந்து அனுபவித்துவருகிறேன். ஆயினும் தங்கள் வாசாவில் வந்த உபமானத்தை நன்கு உணர்ந்தேன்; தாங்கள் சங்கற்பம் கொடுத்தால்தான் என் நிச்சய புத்தி வெளியாகும். அதுவும் நியாய மென உணர்ந்தேன். ஆனால், பையனது படிப்பை என் ஸ்தானத்திற்குபமானமாகச் சொன்ன இடம் என்னறிவிற்குப்பொருந்தவில்லை. ஏனெனில், ஞான வாசிஷ்டத்தில், பிரஹ்லாதன் சமாதி ஸ்ரீ கிருஷ்ண பகவானது சங்கத்வனியால் உலைந்து மீண்டும் உலகத்தில் பிரவேசித்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன் காரணம் விசாரிக்கப்புகின்; இந்திரிய நிக்கிரஹஞ்செய்து, ஞானத்தை யடைந்து, ஞானத்தால் அவன் ஆத்மாவை விசாரிக்க முயன்றவன். அந்த நிக்கிரஹ சமாதியும் பிரகிருதியின் வலுவே. அப்படிப்போலல்ல என் பக்குவமும், தாங்கள் உபதேசித்த சாங்கியயோகமும், கர்ம

போகும். ஆதலால், புனாபி ஸ்ராவிடத்தில் தாங்கள்
என்னை அமிழ்த்தியிருக்கிறபோது நான் எவ்வாறு மீளுவேன்?
பிரபு! மீளுகிறதற்கு முயற்சித்தாலும் முடியாதென்பதை
அறிகிறேன். அந்தப்படியெனில், உப்பு நிறைந்த ஒரு
சமுத்திரத்தில் நான் ஒருபடி உப்பைக் கலந்து என் உப்பை
மாத்திரம் பிரத்தியேகமாய் எடுப்பது எங்ஙனம்? அப்படி
யெடுப்பினும் அளவில் ஒருபடி காணலாமே யொழிய, ஜாதி
வேற்றுமை எவ்விதம் வரும்? ஆதலால், நான் எப்பொழு
தும் பிரம்மத்திற்கு அந்நியமாகக் காணவில்லை யென்பதை
மாறுதலில்லாமல் சத்தியம் பண்ணுவேன். இதில் சந்நிதா
னத்திற்கு யாதொரு சங்கையும் வேண்டுவதில்லை.

கு:— திடசித்தத்தோடு நீ மொழிந்த பிரம்மக்ஞான நிச்சயமே
எனக்கெல்லா நன்றியும் பாராட்டினதாகத் திருப்தியடைகின்
றேன். தவிரவும்; பிரஹ்லாதன்பக்குவத்தின் தாழ்மையும், உன்
பக்குவத்தின் விசேஷத்தையும் நீயே உணர்ந்து கூறியதற்கு
நான் ரொம்பவும் திருப்தியடைகிறேன். ஆனால் கிருஷ்ண
பகவான் சங்கத்வனியால் பேதித்த காரணத்தை உனக்குச்
சொல்லுவேன், கேள். அதை நன்கு தாரணை செய்து
கொள்ளவேண்டும்: அவன் செய்த யோகத்தில் இரண்டு
மார்க்கமுள்ளது. பக்தியோகமென்றும் வேறொன்று இருக்கிறது.
அது அவன் செய்த யோகத்திற்கு மேலானது, அதின்
விவரம்:— உலகத்தில் அரசுபுரிவதோடும் பக்தி யோகத்
தை சாதிக்கலாம். பிரஹ்லாதன் இதற்குரிய பக்குவியென்று
தீர்மானித்த ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி, தன் சங்கத்வனியால்
அவன் யோகம் கலைந்தது. தவிரவும், சங்கத்வனிக்குக் கலை
வுறும் இந்திரிய நிக்கிரஹமானது அந்த யோகத்திற்கு அவன்
அருகனல்லனென்றும் காட்டியது. இதில், ஆசாரியனாயுள்ள
ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி பிரஹ்லாதனைத் தடுத்தாட்கொண்டார்
என அறிந்துகொள்ளவும். ஆதலால், இனி விஸ்தாரமாய்
நீ அப்பியசிக்கும்பொருட்டு சொல்லவேண்டிய யோக நிஷ்
டைகள் இல்லாவிடினும், நித்திரையிலிருக்கிற ஒருவனது
கையிலுள்ள சாமான் எப்படி அதுவாய் நழுவுகிறதோ

அதைப்போல், இடுப்பளவு தண்ணீரிலிருக்கிற உன்னைக் கரையேற்றுவதற்கு நான் நீட்டும் கை சாதனமான சிரவணமென்னும் யோகமே. நீயும் சொல்லினாலும் அங்கீகரித்தமையால் இனிமேல் உனக்கு ஞான யோகத்தைச் சொல்லுகிறேன், கேட்பாயாக. அந்த ஞானயோக சிரவணத்தால் கரை சேர்ந்து அசைவற நிற்கலாமென நினைக்கிறேன். வேறு விசேஷமிருந்தால், தெரிவிக்க கடவை.

கா:— சுவாமி! தங்களுக்கு விசேஷ சிரமத்தை உண்டு பண்ணுகிறேன். அதுதான் எனக்கு லஜ்ஜை. தவிரவும் கர்மயோகமே ஞானயோக மாகுமென்றதைக் கேட்க அடியாள் விரும்புகிறேன். இந்த சிரவணத்தில் என்னிந்திரியங்கள் நிக்கிரஹமானதுபோல எந்த யோக நிஷ்டையும் எனக்குரிய சாதனமாகாது. அன்றியும், தாங்கள் இதுவரை மொழிந்த கர்மயோகத்தைச்சாதிக்காமல் மேலும் கேட்பதாக என்விசாரணையில் படவில்லை. எனெனில் கர்ம யோகத்தில் கூறும் ஒவ்வொரு விஷயத்திலும் என் மனது புகுந்து வேலை செய்து திரும்பியிருப்பதை நான் சாக்ஷியாய் நின்று கவனித்தேன். அது எது போலென்றால், ஒரு வித்துவான் பாடுகையில் கேட்கக் கூடிய ஒருவன் சங்கீத விற்பத்தி ஞானத்தோடிருப்பானாயின் அவன் பாடுகிற இடங்கள்தோறும் கேட்கிறவன் மனம் புகுந்து வேலை செய்தே மீளும். பாடினவன் செய்த வேலை ஸ்தூலமாயும், கேட்டவன் செய்தவேலை சூக்ஷ்மமாகவும் இருப்பதுபோல் கர்மயோகத்தைக்கேட்குங்காலத்திலேயே மனதால் செய்துமுடித்தவளாகவே காணப்படுகிறேன். ஆதலால், ஞான யோகத்தைக் கேட்கவும் அப்பியசிக்கவும் சித்தமாயிருக்கிறேன்.

ஓம் சாந்தி-சாந்தி-சாந்தி-ஓம்.

## ஸ்ரீராம கீதோப நிஷத்தில்

## இரண்டாவது அத்தியாயமாகிய கர்மயோகம்

## முற்றிற்று.

உ

ஓம்;

# ஸ்ரீராம கீதோப நிஷத்.

## மூன்ருவது அத்தியாயம்.

## ஞானயோகம்.

குரு:— பேரறிவு வாய்ந்த பெண்மணியே; கேளாய். இந்த ஞானயோகம், கர்மயோகம் இரண்டும் பரமோத் கிருஷ்டமானதும், மேலான உன் போன்ற சத்துக்களின் மனம் ரமிக்கக்கூடியதும், ராஜகுஹ்யமானதும், பவித்ரமானதுமென்று நீ அறியக்கடவாய். இன்னும் எதை அறிந்தபின் எல்லாம்தன்னிடத்தேவிளங்குமோ, எந்த லாபத்தில் எல்லா லாபங்களும் அடங்கியிருக்குமோ, அப்பேற்பட்டபரம குஹ்யமான இந்த யோகத்தை நீகேட்கில், இனி கேட்கத்தக்கவை என்னிடம் ஒன்றும் இராவென்பது எனதபிப்ராயம். ஆதலால், மிக்க சாவதான மனத்துடனும் மிக்ககூர்மையும் விசாலமும்பொருந்திய விவேகத்தாலும் நிரம்ப ஆதரவுடன் கேட்பாயாக!

காயத்திரி:— சுவாமி! இதுவரை திருவுளம்பற்றிய ஒவ்வொரு விஷயத்திலும் மகா பக்தி வினயத்துடனும், உற்சாகத்துடனும் கேட்டு மேலான லாபத்தை அடைந்திருக்கிறேன். ஆதலின் அப்பேற்பட்ட யோகத்தைத் திருவுளம் பற்றுமாறு தங்கள் இருபாதங்களையும் அடியாள் சிரத்தில் சூட்டுகின்றேன். ஆனால் ஒரு கேள்வி உதிக்கின்றது அது யாதெனில், கர்மயோகம், ஞானயோகம், என்பதில் கர்மத்தை முன் வைத்து ஞானத்தை மறைத்துக் கூறியதும், மற்றொன்றில் ஞானத்தையே சிரேயசாய்க் கூறி, கர்மம் மறைவுபட்டிருப்பதற்கும் காரணம் யாது?

கு:— சபாஷ்! சபாஷ்!! பலே!!! உன்னறிவு கொழுந்துவிட்டெரிகிறதாய் நோக்கி அதையே நான் அமிருத பானம்

செய்கிறேன். எந்த இடத்தில் இதன் மர்மம் விளங்கிருக்குமோ அந்த இடத்தையே சுட்டிக்கிறக்கும் திறவுகோலை கேட்கின்றது போலும் உன் கேள்வி சந்தோஷம்! நான் உனக்கு உபதேசித்ததும், இப்போது உபதேசிக்கிறதும், இனி உபதேசிக்கப் போவதுமான யோகமார்க்கங்கள் இந்த யுகத்தில் அக்ஞானமென்னும் மண்மாரி பெய்து மறைந்து போய்விட்டது. ஆனால் பகவான் கிருஷ்ணமூர்த்தி இந்த யுக ஆரம்பத்தில் அதற்குமுன் மறைந்துபோன இந்த யோகத்தைத் தனக்குப்பிரியமான அர்ஜுனன் துவாரா ஜகத்தோர் உய்யுமாறு பூர்ண கிருபையோடு தோண்டி எடுத்து உலகத்தில் பரப்பினார். அது முதலிது பரியந்தம் சாஸ்திரமென்னும் புஸ்தகம் (அதாவது கீதை) வீடுகள் தோறும் நிரம்பியதைத் தவிர, அதன் குறிப்பத்தை உணர்ந்து நிற்க முயலாது விட்டுவிட்டபடியால், இப்பொழுது அது பாதாளத்தில் பழபபடியும் மறைந்துபோய்விட்டது. அதைப்புனருத்தாரணம் பண்ண நான் வெகு காலம் கருதி, உன் மூலம் இப்போது அது மீண்டும் பிரகாசிக்கக் காரணமாயிருக்கிறதென்று நீ முதலில் அறிந்துகொள்ள வேண்டிய விஷயம். உன் கேள்விக்குச் சமாதானம்:— விசாரபரனுபுள்ள சாங்கிய யோகி, அவன் நின்ற இடமான கர்மம்தொட்டு விசாரம் செய்து, ஆத்மாவை உணர்ந்து, அதை அனுபவிக்க முயலுங்கால் கருமத்திலிருந்தே ஞானம் எது என்று, கர்மத்தைச்செய்து, அதில் ஞானத்தைமாத்திரம் தனித்து நோக்கி மற்றதை ஜடமென்றுநீக்கி, ஞான அபேக்ஷையிலேயே கண்ணுற்றுப் போகும் விருத்தியால், அதைக் கர்மயோகமென்று கூறியுள்ளார். ஆதலின் ஞானத்தை மறைத்து, கர்மத்தைப் பிரதானமாய் வைத்திருக்கின்றது. ஞான யோகத்தின் காரணம், உன் போன்ற பக்குவி ஆத்மாவே தானென்றுணர்ந்து, பிரகிருதியால் நடைபெறும கர்மாவென்றும் தெரிந்து, பிரகிருதியின் தத்துவத்தை மாயை யென்றே உணரும் சக்தியோடும், உதாசினமாய்க் கருமாக்கள்செய்து, ஆத்மாவின் ஜாக்கிராவஸ்தை ஒழியாது, சதா ஆத்மா விசாரத்திலேயே இருந்து, கர்மத்தைச் செய்வதால் கர்மம்

மறைந்து, ஞானத்திற்கு கௌரவம் கொடுத்து ஞானயோக மென்று அழைக்கப்பட்டதென அறிவாயாக!

கா:— சுவாமி! தாங்கள் ரொம்ப வியக்தமாய்த்தான் சொல்லி யிருக்கிறதாக அறிகிறேன். அழகாடும் கிரஹியம் பண்ணிக்கொண்டேன்; என்றாலும், அவ்வளவு தாவள்யமாய் விவரப்படவில்லை. ஏனெனில் கர்மயோகமோ ஞானத்தைப் பிரதானமாகக்கொண்டது. ஞானயோகமும் ஞானத்தையே பிரதானமாகக்கொண்டது என்றும் அறிகிறேன். இன்னும் இவ்விரண்டிலும் கர்மச்செய்கை ஒழிந்ததாகவும் காணோம். இந்தக்காரணங்களை யூகிக்கில், இரண்டு யோகமாயும் வெவ்வேறு நாமங்களைச் சூட்டினதற்குக் காரணம் இன்னும் விவரப்படுத்தக்கோருகிறேன்.

கு:— நிரம்ப சரி! உண்மைதான். சொல்லுவேன், கேள். விஸ்தாரமான பூமி மண்ணாயிருப்பினும், ஐந்துடலோகங்கள் சம்பந்திக்காமல் இரா. ஆனால் அதை மண்ணென்றே கூறுவது வழக்கம். ஆங்கதுபோல, ஞான சம்பந்தமின்றி எந்தக்கர்மமும் தோற்றப்படாது எனினும் அதைக் கர்மமென்றே கூறுவது வழக்கம் என்று நீ அறியக்கடவது. இதில் கர்மத்தில் சேஷித்திருக்கும் அற்ப ஞானத்தை அவலம்பிக்கும் மார்க்கம், கர்மயோகமென ஆன்றோர் கூறுவர். ஞானயோகமென்னிலோ பூர்ண ஞானத்தில் நின்று, பின்னப்பட்ட, ஞானந்தங்கிய, கருமத்தில் அந்த ஞானத்தில்கலந்துகொண்டு கர்மத்தைக் கர்மமாய்ச் செய்யுமிடத்து அதை ஞானயோகமென்று கூறியுள்ளார். இனி யோகமென்பது என்ன என்பதை விவரிக்கில்தெளிவாய்ப்புலப்படுமென்று நினைக்கிறேன். அது எவ்வாறெனில் யோகமென்பது சேர்க்கை. இந்த இடத்தில், எது எதனுடன் சேருகிறது என்று விசாரிக்கப் புகின், ஞான யோகத்தில் ஞானத்தில் நின்று விஸ்தாரமான கர்மத்தில் புதைந்து கிடக்கும் ஞானத்தைத் தோண்டி; அதன் மூலம் ஞானமிரண்டும் லயப்படுவதால் ஞானயோகமென்றும், கர்ம யோகத்தில் பரிபூர்ண ஆத்மாவை நிச்

சரித்துவிஸ்தாரமான கர்மத்தில்நின்றுகொண்டு அதிலுள்ள அர்த்த ஞானத்தை ஆத்மாவில் லயப்படுத்தும் அபேக்ஷையினால் அதைக் கர்ம யோகமென்றும், கூறியுள்ளார். இதை ஓர் உபமானத்தால் நீ தெளிவாகக் காண்பாயாக. ஒருவன் சாக்கடையிலிருக்கிற மணல்களை வாரி அரித்து அரித்து அற்பத்தங்கம் எடுப்பதற்கு முயலுவதைப்பார்த்திருக்கலாம் அதில் இரண்டு வண்டி மணல் வெளியில் வாரிப்போட்டால் அரைக் குன்றுமணி எடைத்தங்கம் அவன் எடுப்பது வழக்கம். இதில் குவிந்திருக்கும் மணலாகிய கருமமோ விசாலம். எடுத்திருக்கும் பிரயாசையோ அதிகம். இந்த சிரமந்தான் முதல் விழுங்கிக்கொண்டது அந்த அரைக்குன்றுமணிஎடைத் தங்கமாகிய ஞானம். இதுவே கர்ம யோகமெனத் தெளிவுறக்காண்பாய். மற்றோர் உபமானம் கூறக்கேள். நீயோ பாதம் அப்பியசித்தவள். உன்னை ஆட்டி வைத்தோன் பாடிய பாட்டின் தாத்பரியத்தைப் பதினாயிரம் 'நிஷிசில்' பாவம் பிடித்திருக்கலாம். இங்ஙனம் பாட்டு அகண்ட ஞானமாயும், பாவம் பொருத்த கர்மமாயும், அதன் ரசம் மறைந்து கிடக்கும். ஞானமாயும், நீயும் ரமித்து, மற்றனைவோரையும், ரமிக்கச் செய்யும் தன்மையினால் இது ஞான யோகத்திற்கு ஏற்ற உபமானமாகும். தவிரவும் மற்றோர் உதாரணமும் கூறுவேன். மிருதங்கக்கருவி உருவத்தில் பெரியது. அதை மீட்டு சாப்புக்கொடுத்துக் கவனிக்கிற வஸ்து எது? கவனிக்கப்பட்ட வஸ்து எது? இது இரண்டும் லயமாவதுபோல ஞான யோகம். இவ்வாறு சந்தேக மறத் தெளிந்து பதில் கூறுவாயாக.

கா:— சுவாமி! இப்போது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தங்கள் உபமானங்களாலும், மற்ற விபரங்களாலும் நன்குணர்ந்து கொண்டேன். ஆனால் கர்ம யோகமும், ஞான யோகமும் ஒன்றென்று கூறினீர்கள். அது எவ்வாறு ஒன்றாகும்? இடபேதமல்லவோ? இவ்விரண்டின் பலனும் ஒன்றோ?

கு:— நியாயமான கேள்வி கேட்டனை! நல்லது! சொல்லுவேன் கேள். கர்ம யோகமும், ஞான யோகமும் இடத்தாலும் பேதமில்லை. ஏனெனில் கர்மத்தில் நின்று கர்மத்திலுள்ள ஞானத்தை நோக்குவதாலும், ஞான யோகமானது ஞானத்தில் நின்று கர்மத்தைச் செய்து கர்மத்திலுள்ள ஞானத்தை நோக்குவதாலும் இடத்தாலும் ஞானத்தாலும் பேதமில்லை. பேதம் போற்றோன்றிய காரணமென்னவெனில், கர்மயோகிக்கு ஞானத்திற்கு ஆரம்பம், கர்மம் காரணமாயிருக்கிறது. ஞான யோகிக்கோ ஞானம் காரணமாயும், கர்மம் காரியமாயு மிருக்கிறது. ஆதலின் இவ்விரண்டின் வித்தியாசம் கர்மத்தில் ஞானமும், ஞானத்தில் கர்மமுமாய்முடிவதைத்தவிர ஞானத்திலாவது கர்மத்திலாவது பேதங்களைக்காணோம். ஆதலால் கர்மயோகம் வேறு, ஞானயோகம் வேறு எனக்கூறுதல் பூரணத் தத்துவம் உணராதவர்கள் சொல்லும் வழக்கு. இரண்டின் பலனும் ஒன்றே. யாதொரு பேதமும் கிடையாது. பேதமிருக்கின் அடியிற்கண்ட உபமானத்தின் அளவேயாகும் அதாவது ஐவேஜுள்ள ஒரு புருஷன் ஓர் சாமானைத் தன்னிடத்தில் நிறைந்திருக்கிற ஐவேஜைக் கொண்டே வாங்குகிறான். தன்னிடத்தில் ஐவேஜு இல்லாதவன் அதே சாமானை இரண்டிடத்தில் யாசகம் பண்ணி வாங்குகிறான். இந்த உபமானத்தை ஒத்துக் கர்ம யோகமும், ஞான யோகமும் இருக்கிறதாக நீ அறியக்கடவது.

கா:— சுவாமி! இரண்டு யோகங்களும் ஒன்றுதான் என, விவரித்துத்தாங்கள் கூறியவற்றிலிருந்து தெளிந்துகொண்டேன் என்றாலும் கர்மயோகமோ, ஞானயோகமோ, இவ்விரண்டிற்கும் முன்னர் எந்தப்பதவி அடைந்தால் இவை சித்திக்கும்? இந்த இரண்டையும் அனுஷ்டித்து வருவதனால் எவ்வாறு முக்திகிட்டும்? முக்தி கிட்டுதற்குள்ள நியாயம் இவ்விரண்டில் என்ன இருக்கிறது? கர்ம யோகத்திலுள்ள ஞானம் அல்பமாய் இருப்பதாக நான் அறிவதனால் முக்தி நிலையைச் சேரும் போக்கை விரித்துக்கூறப்பிரார்த்திக்கிறேன்.

கு:— நன்கு கேட்கின்றனை. கவனிப்பாய். இந்திரியங்களனைத்தையும் மனதில் லயப்படுத்தி ஸ்த்வகுண விசேஷம் நிறைந்து,

அப்பால் குணத்திரயங்களை, ஸத்வ ஸ்வரூபத்திலிடத்தில் லயப்படுத்தி நின்ற புருஷனுக்கு இந்த இரண்டு நிஷ்டைகளும் உள்ளன. மற்றேனையோர்களுக்குப் பொருந்தா. முக்தி கிட்டும் கிரமத்தைச் சொல்லுகிறேன்; கேட்பாயாக. கர்மயோக நிஷ்டன் ஆத்ம தத்துவத்தை இன்னதுதானென்றுணர்ந்து, அந்த ஞானத்தின் எல்லையைக்குறிக் கொண்டு கர்மத்தில் நின்று யாவத் கர்மாக்களையும் செய்து, செய்த கர்மத்தின் பலனைக் கருதாது. அந்தக் கர்மத்திலுள்ள ஸத்தா மாத்திரமாயுள்ள ஞானத்திலேயேசாந்தி பெற்று நின்றதினுலும், அந்த ஞானம் பிரம்ம ஞானமாகிய பூர்ண ஞானத்தைத் தழுவுகிறது. அந்தப்பூரண ஞானம் தேகவியோக காலத்தில் ஆத்மாவில் லயப்படுகிறது. அந்த ஆத்மா பிரகிருதிக்கும் அப்பாலுள்ள எந்த அகண்டாகார பிரம்மமோ, அதில் லயமாகிறது. இது நிற்க, இதன் பிராரப்த, சஞ்சிதங்களானவை, பஞ்ச பூதத்தில் லயமாகிப், பஞ்சபூதங்கள் பிரகிருதியில் லயமாய் விடுகின்றன. இந்த இடத்தில் தேகமும் பிரகிருதியில் லயமாகி முக்தியடைகின்றது. இந்த தேகத்திற்குக்காரணமான புருஷனும் பிரும்மத்தில் லயமடைகிறான் ஆகலால் இரண்டிற்கும் முக்தியென அறிவாய். தவிர ஞான யோகத்தின் முக்தி நிலையைப்பற்றி பிரத்தியேகமாய்ச் சொல்லவேண்டியதில்லை. மேலுமுள்ள சந்தேகங்களைக் கேட்கக்கடவாய்.

கா:— சுவாமி! நிரம்ப அழகாயுணர்ந்தேன் ஒரு கேள்வியுளது. அதாவது பலாபேக்ஷையின்றிச் செய்த கர்மத்தின் ஞானம் பிரும்மக் ஞானத்தை யடைந்து, பிரும்மக் ஞானம் ஜீவன் இறக்குங்காலத்தில் ஆத்மாவில்லயமாகின்றது என்றுமொழிந்தீர்கள். இதிலிருந்து ஆத்மா வேறு, பிரும்மக் ஞானம் வேறாயல்லவோ காணப்படுகின்றது? அப்படியாயின்; பிரும்மக் ஞானம் என்பது எது? ஆத்மா எது? இவ்விரண்டின் பேதமென்ன? இறந்த பின்னரல்லவோ முக்தியெனச் சொல்லத் தகும்! ஜீவன் உள்ளபோதே முக்தனெனப் பொருந்தாதே!

இத்தியாதி சங்கைகள் எனக்கு முளைத்திருக்கின்றன. இவை களைக்களைந்தெறியப் பிரார்த்திக்கிறேன்.

கு:— உன் கேள்விகள் மிக நேர்த்தியானவையே. இதுவரை தெரிந்துகொள்ளாமல்தானா இருக்கின்றாய்? நல்லது, இருக்கட்டும். சொல்லுவதை விசேஷ பக்தியுடன் கேட்க. நீ பந்த ஸாங்கியயோகத்தில் நான் என்னும்வஸ்து வேறொன்று உணர்ந்தாயோ, அது வேறு என்று எது காட்டியதோ, அதுவே பிரும்மக் ஞானம். சேஷமாய் நின்றதுவே ஆத்மா வென்று நீ அறியக்கடவது. ஆனால் ஆத்மா வேறு பிரும் மக் ஞானம் வேறு அல்ல. மலையைப்பிளந்து வீட்டில் உப யோகிக்குங்கல் பிரம்மக் ஞானமாயும், மலை ஆத்மாவாயு மிருக்கின்றது. அளவின் பேதத்தைத் தவிர வஸ்துபேத மில்லை. பந்தத்திற்குக்காரணம் மனமென்று அறிந்துகொண் டனை. மனமோ ஸத்துவஸ்வரூபமாகி மனமென்னும் நாம மழிந்துவிடுகிறது. ஸத்துவஸ்வரூபமோ ஞானத்தில் லய மாகிவிடுகிறது. கர்மம ஸஞ்சித வினையால் ஞானத்தையும் ஆத்மாவையும் பிணைத்திருப்பதைத் தவிர வேறல்ல. ஞான மோ ஆத்மாவின் ஸஜாதியென்றும், பிணைத்திருக்கும் ஸஞ் சித வினையை விஜாதி யென்றும் நன்றாய் உணர்ந்து ஸஞ்சித வினையில் தன் ஸஜாதியாகிய ஞானத்தை பந்தப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஸஞ்சித வினை தீர்ந்தவுடன் இரண்டும் ஒன்று சேர்ந்து மேற்கூறியவாறு கலக்கின்றன. தவிரவும் பந்தத்தை ஒரு முறை நிவிர்த்தி பண்ணிய பின்னர், மறு முறை பந்தப்படுத்தும் சக்தி சஞ்சிதத்திற்கு இல்லாமையால் பந்தம்விட்ட இடமும் அந்தக்ஷணமே மோக்ஷமென்று உப நிஷத்துக்களும் ஆன்றோர்களும் கூறியுள்ளார்.

கா:— சுவாமி! இந்த விஷயம் நான் மொந்தாகாரமாய் அறிந் திருந்தேன். இவ்வளவு வியக்தமாய் விசாரித்து உணர்ந்த வன் அல்லன். இப்பொழுது ரொம்ப திருப்தி யடைந்தேன். ஆயினும்சஞ்சிதவினையால்ஆத்மாவையும்,பூர்ணக்ஞானத்தை யும் பிணைத்து பிராரப்தத்தால் சூழ்ந்துகொண்டிருக்கிறதெ

னத் தங்கள் வசனத்தால் அறிந்துகொண்டேன். அவ்வா றாயின் ஞானம் ஆத்மாவின் ஸ்வரூபமாயிருத்தலால், இரண்டறக்கலக்க விடாமல் இடையில் நிற்கும் விரோதம் என்ன? ஒருவாறு கலந்த பின்னர், அகண்டமாகிய பிரம்மத்தில் எவ்வாறு கலக்கும்? இந்த சங்கைகளுக்கு விடையளிக்குமாறு வேண்டுகின்றேன்.

கு:— பெண்ணே! உன் கேள்விகள் உசிதமானவையே. ஆனால் நாளிதுவரை இப்பேர்ப்பட்ட அனுபவமுள்ள கேள்விகளுக்குச் சாஸ்திரவாயிலாய்க்காணும் ஆசார்யர்களால் தக்கபிரதியுத்தரம் சொல்லாமல் மறைக்கப்பட்டே வந்திருக்கின்றன. எனினும், நான் அவ்விதம் மறைத்துக்கூற இஷ்டமில்லாமல் எல்லா குஹ்யங்களையும் என் கருணைக்குப் பாத்திரமான உனக்கு நான் விரித்துக்கூறிவருகின்றேன். ஆதலின் இப்பேர்ப்பட்ட உந்த ரஹஸியங்கள் எவ்வாறு உன்னுடைய சரீரமென்னும் சம்புடத்திலடங்கியிருக்கின்றனவோ அவ்வாறே நீ அதை அபக்குவிகளுக்குச் சொல்லாதொழிக. தவிரவும் உன் கேள்விக்குச் சமாதானம் கூறுவோம். அதாவது பூமி ஒன்றிருப்பதனாலும், சூரியன் ஒன்று பிரத்தியக்ஷத்தில் தோன்றுவதாலும், இந்தப்பூமியைப்போல் சூரியமண்டலம் ஒன்று உளது என்று நாம் நிர்த்தாரணம் செய்யவேண்டும். அவ்வாறாயின் சூரிய மண்டலத்திற்கும் பூமிக்குமிடையில் மேகங்கள் ஜலமாய் வருஷிக்காமல் அந்தர்க்கதமாய்ப் பூமியில் விழாமல் நிற்கக் காரணமென்ன? ஆங்கதுபோல் மூலப்பிரகிருதியின் சக்தியால் கலத்தற்கிடமின்றி, தடை பட்டு நிற்கும் சுபாவம் அதன் இயற்கை. ஆதலின் தேகவியோக காலத்தில் பிரம்மக்ஞானமும், மூலப்பிரகிருதியும் ஆத்மாவினிடத்தில் லயமாகின்றன. இரண்டாவது கேள்விக்கு உத்தரம்:— உன்னுடைய சரீரமாகிய லோகத்திற்கு எவ்வாறு கலத்தலின் தத்துவம் உணர்ந்தாயோ, அவ்வாறே இந்த ஆத்மா பரபிரம்மத்தினிடத்தில் லயப்படுகின்றது. இன்னமும் ஒரு உபமானம் சொல்லுவேன் கேள். ஓர் பிரபுவின் வீட்டில் எருமை மாடுகளும், பசு மாடுகளும், குதிரைகளும் விசேஷித்திருப்பது வழக்கம். அவைகள் பகலில் மேய்ச்சலுக்குப்போவதும் வழக்கம். மேய்ச்சலுக்குப்போன இவை

கள் ஆளில்லாவிடினும் குதிரைகள் குதிரை லாயத்திற்கும், மற்ற மாடுகள் அதனதன் கட்டுத்தரையிலும் மீண்டும் வந்து நிற்கும். அதுபோல் இந்த பிரம்ம சிருஷ்டியின் இயற்கை தத்துவமான து பலவிதமாய்த்தோற்றப்பெற்றும் அதனதன் ஜாதியமார்க்கப்படி மேற்சொன்ன கிரமமாய் லயமடைவது இயற்கை. இன்னும் மேற்கேள்வி என்ன இருக்கிறது, சொல்லலாம்.

கா:— சுவாமி! எனக்குக் கேட்க வேண்டிய கேள்விகள், என் வரை அவசியமில்லாவிடினும், பிரும்ம சிருஷ்டியின் தத்துவத்தைக் கேட்கக் கேட்க எனக்குப் பிரம்மானந்தத்தை விளைவிக்கின்றது. ஆதலின் அநாதியில் தான் இந்த அநாதை கேட்டுத் திருப்தி அடைய வேண்டியதாயிருக்கின்றது. ஆதலால் மன்னிக்கக்கோருகிறேன். பிரபு! சரீரமாகிய உலகத்திற்கு அடுத்த இடம் நீண்ட உலகத்தைத்தவிர வேறு இல்லையென நினைக்கின்றேன். ஆதலின் இந்த சரீர உலகத்தில் லயமான ஜீவாத்மா, நீண்ட உலகமாகிய உலகாத்மாவினிடத்தில் லயமாகவேண்டுமேயொழிய, பரமாத்மாவினிடத்தில் லயமாருங்காரணம் பொருந்துமோ? ஆதலின் முக்தி எங்ஙனம் கூடும்? மீண்டும் பிறவான் என்பதற்கு நியாயம் என்ன? இந்த சந்தேகங்கள் சொல்லக்கூடுமாயின் அடிமைக்குக் கிருபை புரியவேண்டும். ஆனால் ஒன்று விண்ணப்பிக்கிறேன். அதாவது பரம்பரையாய் வந்த ஸநாதன தர்மத்தில், ஜீவன் சரீர சம்பந்தத்தைத் தத்துவம் பார்த்துக் களைந்து ஆத்மாவினிடத்தில் லயப்படுத்தலே முக்தியென்று மகான்களால் சித்தாந்தித்து, முறையே தொன்று தொட்டு வருகிறதை நான உணர்ந்தவள். ஆயினும், அதில் பரிபூரண நம்பிக்கையும், விசுவாசமும் சத்தியமாய் வைத்தவளாயினும் இந்த கேள்விகளுக்கு இடமிருந்தலால், அப்பாலுமுள்ள முடிவைத் தெரியக்கூடுமாயின் விரும்புகிறேன்.

கு:— பெண்ணே! உன் கேள்விகளால் நான் அடையும் உற்சாகம் சொல்லால் முழக்கமுடியாது உனக்கு காயத்திரி

என்னும் நாமம் சூட்டியது நன்கு பொருந்தும். இந்தக் கேள்வி மாவிட ஐக்கியத்தின் வரம்பன்று. இந்த இடத்தில் ஜீவனோடு வந்த நாளும் உன்னைப்போன்ற நிலைமைதான் என்றிருப்பினும், இந்தக்கேள்வியின் பிரதி உத்தரத்தைச் சொல்லுவதற்கு நியாயம் இன்னும் கேட்பாய். அதாவது உலகத்தில் சூரியன் பிரகாசிப்பதைத் தடுப்பதற்கு மேகங்களும் அளாவிய மாட கூட கோபுரங்களும், வனச்சோலைகளும், மலைகளும் நிறைந்திருப்பினும், அவன் பிரகாசத்தை மறைந்துவிடத்தும், உஷ்ணத்தை மாத்திரம் காட்டாமல் நிறுத்தியதே ஒழிய, வெளிச்சத்தின் சின்னத்தை இருள் நீக்கி அனுபவிக்கின்றோம். அவன் பிரகாசம் படரும் வியாபகத்தை அளவிடமுடியாது. ஆனால் அவன் இருந்த இடத்திலேயே தான் இருக்கிறான். அங்கது போல், பந்தம் தாண்டிய நாம் ஜீவனோடு கலந்திருந்தாலும், ஞானமாகிய சூரியன், எல்லாவிடமும் ஏன் வியாபிக்காது என்ற நியாயத்தால்நான் உனக்குச் சொல்லவும், நீ அதைக் கேட்கவும் தகுதி என்பதைக் காட்டியது. "விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத் துண்ணின் றுடற்றும் பசி" என்ற குறளுக்கு இணங்க அக்ஞானம் என்னும் மேகத்தால் மறைக்கப்பட்ட ஞான சூரியனை விவேகத்தால் ஊடுருவிச் சென்று ஞானத்தினிடத்தில் போக்கு வரத்து இல்லாத பக்ஷத்தில் மாயா விகாரம் என்னும் பசியால் ஒரு ஜீவன் வருந்துவானென்று கருத்து. ஆதலால் மாயா விகாரத்தைத் தாண்டி, ஞான பூமியிலே சஞ்சரிக்கும் உனக்கு இத்தகைய கேள்விகள் ஜனிப்பது சகஜம். சொல்லுகிறதைக் கவனமாய்க் கேள். சந்திரன் வேறு, சூரியன் வேறு, என்னும் துவைத பாவம் அமாவாசையன்று அற்றிருப்பது சகஜம். மறுநாள் பிரகிருதியாகிய சந்திரன் சூரியனிடத்திலிருந்து ஒரு கலை பெற்றுப் பதினாறு பருவமாய் வளர்ந்து பதினைந்தில் பூரணமாகி வளர்ந்தவாறே, கிரமமாய் ஒவ்வொரு நாளும் கிஞ்சித்துக் கிஞ்சித்தாய்ச் சூரியனிடத்தில் லயமாகிறதே ஒழிய, மற்றேனைய நக்ஷத்திரங்களிடத்திலாவது, ஆகாயத்திலாவது, பிரகிருதியிலாவது லயமாவதில்லை என்று நன்கு விளங்கும். இன்ன

மும் பூரண சந்திரன் லயமாகுங்காலத்தில் பிரதமைக்குத் தேய்ந்துவிட்டால் அந்தப் பிரதமைக்கலை மற்றப்படிக்கலைகளோடு சேர்ந்து, சூரியனிடத்தில் லயமாகிமீண்டும் விகசிப்பதைத் தவிர, மத்திம காலத்தில் வக்கரித்துத் திரும்புதல் கிடையாது. இதில் ஆதி அவஸ்தை சூரியனும், அந்திய அவஸ்தை சந்திரனும் என அறிதல்வேண்டும். தவிரவும் ஆதியும் அந்தமும் பூரணமென்றே அறிதல் வேண்டும். இடையில் நின்றது பதினாறு தத்துவங்களே. இந்தப்பதினாறும் நாம ரூபத்தில் ஜடமானவை. இதைப்போலவே, பிரம்மத்தினிடத்தில் தோன்றிய பிரகிருதியின் மூலம் 14 லோகங்கள் தோன்றி மீண்டும் பிரம்மத்தினிடத்தில் லயமாக, உலகத்தை அழித்துப் புறப்பட்டு விட்டால், அது புனரபி ஜன்மத்திற்கு இடமில்லாமல் உலகப்பிரம்மத்தில் லயமாகி, உலகமழியுங்காலத்தில், உன் யூகத்தில் தென்படும். எந்த ஆதி பிரம்மமோ, அந்தப் பிரம்மத்தில் லயமாகும். ஜோதியைத் தவிர மீண்டும் ஜன்மத்திற்கு ஹேதுகாமில்லையென்பதை அறிவாய். தவிரவும் இயற்கை சிருஷ்டியில் மூன்று மார்க்கங்கள் உள்ளன. அதாவது இயற்கையில் சிருஷ்டிக்கும் மார்க்கம் ஒன்று. அதன் வலப்பக்கம் இடப்பக்கமென இரண்டு மார்க்கங்கள் உள்ளன. அந்த இரண்டு வாயில்களுக்கு ஆரம்பம் உலகம். அதன் வலது மார்க்கத்திற்கு மோக்ஷமார்க்மென்று பெயர். இந்த மார்க்கத்தில் புகுவோர்கள் பிரம்மத்தையே அடைகிறார்களென்பது சத்தியம். எதிர்த்து வரும் விஷயங்களும் கிடையா. இடது மார்க்கத்தில் புகுவோர்களுக்கு மத்தியில் ஒரு ஜங்ஷன் இருக்கிறது. அந்த ஜங்ஷனிலிருந்து நேர் மேலே, கொஞ்ச தூரம் சென்றால் தேவதைகள் சம்பந்தமான லோகங்கள் அநேகம் அடுக்கடுக்காய் அமைந்திருக்கின்றன. அந்த ஜங்ஷனிலிருந்து கீழ் மேலாய் ஒரு மார்க்கமிருக்கிறது. அதில் யமலோகம் அமைக்கப்பட்டிருக்கின்றது. "ஏவம் பிரவர்த்திதம் சக்ரம்" என்றதோ வாக்கியப்படி இந்த விதமான ஆக்ஞா சக்ரப்பிரகாரம் அநாதியான பரபிரம்ம அவஸ்தை யிருப்பதால் அந்த அவ

ஸ்தையின்விலாஸானுபூதியைப்பற்றி நீயாவது, நானாவது சிந்தித் தற்கரியதென்றால், ஒருவர் கேட்கவும், ஒருவர் சொல்லவும் சாத்தியப்படாது. இன்னும் லௌகிக திருஷ்டாந்தம் ஒன்று உனக்கு காட்டுவேன். அதாவது 'ரயில்வே' யில் 'போட் மெயி' லென்றும், 'எக்ஸ் பிரஸ்' என்றும், 'ஷட்டில் என்றும், பிரயாணிகளுக்கு மூன்று மார்க்கங்கள் உள்ளன. 'போட் மெயிலின்' கௌரவம் என்னவென்றால், பிரயாணிகள் எந்த இடத்தில் ஏறுகிறார்களோ அவர்கள் குறிப்பிட்ட இடத்திற்கே போயிறங்கவேண்டுமே யொழிய மத்தியில் மாறுதல் கிடையாது. இன்னமும் பிரயாணிகள் சம்பந்தத்தை நீக்கிலோ, அது சக்கிர வர்த்தி தபால் 'மெயில்' என்று தாத்பர்யம். ஒருவாறு 'போட் மெயில்' டிரெயினுக்கு பின்னம் வந்தால், தபால் தாமதிக்காமல் குறிப்பிட்ட இடம் போய்ச்சேருவது நாளதுவரை சகஜமாய் சத்திய புத்தியோடு நடைபெற்று வருவதைப்பார்க்கலாம். 'எக்ஸ் பிரஸ்' என்பது குறிப்பிட்ட இடத்திலிருந்து குறிப்பிட்ட இடத்திற்கு நீண்டுபோவது. அதற்கு மாறுதல் கிடையாது. 'ஷட்டில்' என்பதும் குறுகிய அளவு பிரயாணம் செய்தல். அதற்கும் மாறுதல் கிடையாது. இந்த மூன்றில் 'போட்' மெயிலின் தபால் மார்க்கமே மோக்ஷமார்க்கம். 'எக்ஸ் பிரஸ்' மார்க்கமே புண்யலோக மார்க்கம். 'ஷட்டில். மார்க்கமே எமனது பேட்டிக்கு ஆளாக்கும் நரகமார்க்கம் இந்த ஏகதேச உபமானத்தால் நீ நன்குணர்ந்து நிலைத்த புத்தியை வைப்பதோடும் வரம்பு தாண்டிய அநாதியினிடத்து மேலும் மேலும் கேள்விகள் வினவாமல் சாந்தியடைவதே பெருத்த போதனை. ஏனெனில் இதுவரை சொன்ன உபமானங்களால் ஜீவனுள்ள போதே முக்தியென்ற நிச்சயம் உணர்ந்து அனுபவிப்பவனாதலால் பந்தமற்றவிடத்தில் சாந்தியடைவதை விட்டு, வரம்பு தாண்டிய இடத்தில் சென்று உசாவும் பிராந்தியை நீ அறவே யொழிக்கக்கடவது. வரம்புக்குட்பட்ட இடத்தில் பந்தமறச் சல்லாபமாய்க்கேள்விகேட்கவும், நான் சொல்லவும் திருப்தி அடைகிறேன். நீ சாந்தியடைந்த வசனத்தை இனிமேல் எதிர் பார்த்தவனாயிருக்

கிறேன். இப்போது உன் பக்குவம் எவ்வாறு இருக்கிறது? என்ன நிகழ்கிறது? எனக்குச்சொல்லுவாயாக.

கா:— சுவாமி! அடிமை கேட்ட கேள்விகளுக்கு க்ஷமிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன். தவிரவும் மனோவாக்குக்கு அதீதமான அந்த பரபிரம்மலீலையின் விசேஷத்தை, நான் சாந்நி பெருமாறு சந்நிதானத்தில் உதாகரித்துச் சொன்னதைக் காட்டிலும் விசேஷித்துச் சொல்லுவதற்கு இடமில்லை. எனினும், நானும் அந்த நிலையிலிருந்து அனுபவிப்பதால் நன்றாய் விளங்குகிறது. இதற்கு முன் யாவராலும் சொல்லி அறியப்படாத அதி அற்புத ரஹஸியங்களைத் தங்களிடமிருந்து கேட்டு தன்யளானேன். ஆனால் சொன்னவிடத்தில் வலப் பக்கம் இடப்பக்கம் என்று வந்ததில் மத்தியில் நின்ற ஓர் தத்துவத்தின் விபரம் அறிய விரும்புகிறேன். ஆனால் உபமானம் ஏகதேசமென அறியினும், இந்தக் கேள்விக்குச்சமாதானம் அடையலாமெனல் எனது தோற்றம். ஆதலால் தங்கள் வாசாவை எதிர் பார்த்தவளாயிருக்கிறேன்.

கு:— பெண்ணே ரிரம்ப உசிதம். சொல்வதைக்கேள். உலகத்தில் கிழ்த்திசையில் உதிக்கும் சூரியன் எந்த இடத்தில் நின்றாலும், அவனை மாத்திரம் விட்டு கரிய மேகங்கள் சூழ்ந்து அவன் சந்நிதியிருந்தும், மழை வருஷிப்பது உண்டு. இந்த இடத்தில் மழை வருஷிப்பதற்குச் சூரியன் சம்பந்தம் இல்லை. ஜோதி மாத்திரமே யொழிய வேறு கர்மசம்பந்தம் கிடையாது. இங்ஙனம் சூரியனுக்கு வலப்பக்கம் இடப்பக்கமென்றுதான் சொல்லக்கூடும். ஆங்கது போல, புராதனமாயும், ஆதியாயுமுள்ள எந்தப்பரபிரம்மமோ அதன் தேஜஸ்ஸுக்கு வலப்புறம், இடப்புறம் என்று சொன்னதெனக் காண்பாய். இனிமேல் கேள்விகள் கேட்பது கூடாதென்பதற்கு மஹான் தாயுமானவர் கூறியதை நோக்கவும்.

"தானான தன்மயமே யல்லா லொன்றைத் தலையெடுக்க வொட்டாது தலைப்பாட்டாங்கே, போனாலும் கற்பூர தீபம் போல் போ யொழிப்பதல்லாற்புலன் வேறின்றாம், ஞான

காரத்தினெடு ஞேயமற்ற ஞாதுருவும் கழுவாமல் கழுவிநிற்கும், ஆனாலும் இதன் பெருமை யார்க்கார் சொல்வார் அறிவானால் அறிவாவர் அதுவே சொல்லும்." இதன் கருத்தைச் சுருக்கிச்சொல்வதைக் கேட்டு சாந்தியடையக் கடவாய். பிரம்மக் ஞானியிடத்தில் அவனைத்தவிர அந்நிய மான ஓர் வஸ்து இருப்பதாகவரின், ஜோதியிலகப்பட்ட கற்பூரத்தின் தன்மை யாகுமென்றும் உலகமிருப்பதாயும், இல்லாததாயும் ருசுப்படுத்துமென்றும், இப்படிப்பட்டசச்சி தானந்த சொரூபத்தின் வைபவத்தை ஒருவருக்கொருவர் சொல்லி அநுபவிக்கக் கூடியதல்லவென்றும், அந்தப் பாப் பிரம்ம மயமாய் ஆகி, அப்படி யப்படி அனுபவிப்பதுதான் நியாயமென்றும் கூறியுள்ளார். இதுவே சத்தியமான அநுபவம். ஆதலால், எல்லாம் செய்து முடிந்த இடத்தில் பாப் பிரம்ம மயமாய் நின்று உன்னால் சிருஷ்டிக்கப்பட்ட உலகம் என்று நினைத்து, லீலையாயும் லோகோபகாரார்த்தமாயும் ஜீவனுள்ள வரை கர்மங்களைச் செய்யக்கடவாய்.

கா:— சுவாமி! மேற்சொன்ன கவியின்படி பிரம்ம சந்நிதியான தங்கள் முன்னிலையில் வேறு பதார்த்தமாய்த் தோன்றிய என் கேள்விகள், அக்ஞானங்கள் எல்லாவற்றையும் சூடனை விழுங்கிய தன்மைபோல் நான் அந்தப் பாப்பிரம்ம வஸ்துவாகவே விளங்கிக்கொண்டிருக்கிறேன் என்பதில் யாதொரு ஐயமும் சந்நிதானத்திற்கு வரவேண்டியதில்லை. சாந்தியென்னும் பெரிய சமுத்திரத்தில் மூழ்கி பரவசமடைந்திருக்கிறேன். எனினும், சுருதியும் யுக்தியும் தான் என்னிடத்திலிருக்கலாமே யொழிய, எல்லாவிடத்தும் அநுபவமிருக்கக் காரணமில்லையாதலால் என்னால் நிர்மானிக்கக்கூடிய கேள்விகளாகவே யிருப்பினும் அநுபவத்தோடொத்த சந்நிதானத்தின் வாயிலாய்க் கேட்பது உசிதமென நினைக்கிறேன். ஆதலால் வரம்புக்குட்பட்டதும், நான் அநுபவியாதபடி கலையும் லீலையாகவே கேட்க திருப்தி யடைகின்றேன். கேட்பதனால் நான் இனி அடையவேண்டிய விஷயம் ஒன்றுமில்லை. கேட்காமல் விடுவதனால் என் பதவிக்குஹானி

வருவதுமில்லை. இவ்விரண்டிற்குமிடையில் நின்று வாக்கின் பிராரப்தம் புரிப்பதான கேள்விகள் என்றே நினைக்கிறேன். ஆதலால், என் கேள்விகள் சந்நிதானத்திற்குச் சந்தேகம் விளையுமாறு இருக்கவேண்டியதில்லையென மிகுந்த பக்தி விநயத்தோடு சமர்ப்பிக்கிறேன். சந்நிதானத்தில் இயற்கையில் மூன்றுமார்க்கம் கூறினீர்கள். ஒன்று பிரம்ம தேஜஸ்வின் ஒளி யென்று அறிந்துகொண்டேன். அதற்கும் ஜீவர்களுக்கும் சம்பந்தமில்லை. அது எங்கும் வியாபகமாயிருக்கிறது. மற்ற இரண்டு மார்க்கங்கள் ஜீவர்களுக்கு உளவென்றும், அவையும் இயற்கையென்றும் மொழிந்தீர்கள். இதில், பிரம்மம் எங்கும் வியாபகமாயிருக்கின்றதைப் பற்றி ஜீவர்களை பிரம்மஞானிகள் என்று தானே சொல்லவேண்டும். அப்படியிருக்க, அக்ஞானிகளாவதற்குக் காரணமென்ன? மேற்கூறியவாறு ஞானத்தையடையாதவர்கள் கதியின்முடிவு என்ன? புண்ணியமார்க்கத்தின் முடிவு என்ன? பிரம்மம் எங்கும் வியாபித்திருக்க, ஜீவர்கள் உணராதிருக்கும் காரணம் என்ன? உணர்ந்திருப்பினும், வியாபகமாயுள்ள பாப்பிரம்மம் குடலை விழுங்கும் ஜோதி போல் விழுங்காதிருக்க யாதுதடை? இத்தியாதி சங்கைகள் எனக்கு மூளைத்திருக்கின்றன. அவற்றைக் களைந்தெறியப் பிரார்த்திக்கிறேன்.

கு:— பெண்ணே! உன் வாசாவை அமிருதமாக உட்கொண்டு மிக்க திருப்தியடைந்தேன். சாந்தியமுதம் இடையறாது புஜித்துக் கொண்டிருக்கிற உனக்கு வாக்கு, பந்தத்தால் வந்த கேள்விகள் என்பதையும், அனுபவித்த ஒருவரிடம் கேட்பது நியாயந்தான் என்பதையும் நான் பூர்ணமாய் அங்கீகரித்தேன். நீ ஆராயின், தெரியக்கூடியதுதான். எனினும், குரு, அனுபவம் இரண்டும் சேர்ந்தால் மிகச்சிரேயசுக்கிடமாகும் என்று சொல்லுகிறேன். கேட்பாயாக, ஸாக்ஷாத் பிரம்மம் உள்ளும் புறமும் நிறைந்திருப்பதனால், ஜீவர்கள் அக்ஞானிகளென்று சொல்லத்தகாது; ஆதலால், ஞானிகள்தான். எனினும் அஞ்ஞானிகளாயிருந்தற்கும், [illegible]

வஸ்துவினால் ஞானிகளாக்க முடியாமைக்கும் காரணம் கூறுவதைக் கேள். நெல்லிலிருந்து உற்பத்தியான பயிர் மீண்டும் நெல்லின் சுபாவத்திற்கு வருகிற பரியந்தம் வித்தாகிய நெல்லின் சத்து எங்கும் வியாபித்திருப்பினும் மத்திம காலத்தில், நெல்லாயாக்கும் தன்மை அந்த வித்தாகிய நெல்லுக்குக் கிடையாது. இதனால், இயற்கையாகிய பிரம்ம சிருஷ்டியில் அண்டங்களும் ஜீவகோடிகளும் சிருஷ்டிக்கப் பட்டாலும், அதன் கால அளவு வருகிற பரியந்தம், பிரம்மம் வியாபித்திருப்பினும் ஜீவர்களைத்தன்மயமாய்இழுத்துக் கொள்ளமுடியாது. ஆனால் இந்த உபமானத்தில், ஜீவர்கள் பிரம்மத்தையடையும் மார்க்கம் நோக்கக்கூடாது. பிரம்மத்தின் இயற்கைத் தத்துவத்தின் முடிவிற்கு மத்தியில் தான் பிறந்த இடமாகிய பரப்பிரம்மத்தில் லயமடைய வலதுமார்க்கமும், புண்ணியத்தில் லயமடைய இடது மார்க்கமும் ஏற்பட்டிருக்கின்றனவென்று சொன்னோம். ஜீவர்கள் பிரம்மக் ஞானிகளாயிருந்தும், அக்ஞானிகளாயிருத்தற்குக் காரணமென்ன வெனில்:- பிரம்மத்தில் தோன்றிய பிரகிருதியின் சுபாவம் ஜீவர்களுக்கு அக்ஞானத்தை விளைவித்துவிட்டது. அக்ஞானத்தை விளைவிக்கக்கூடிய சக்தி பிரகிருதிக்கு உளது; அந்தப்பிரகிருதி பிரம்மத்தினிடத்தில் உண்டாயது; இந்தப் பிரகிருதியின் லீலானுபவத்தால், சர்வ வியாபகமாயிருக்கும் பிரம்மத்தின் சந்நிதியிலேயே கண்ணொளி மழுங்கி, காமபாரவ சர்ாய்க் கட்டுண்டு தவிப்பதனால் அக்ஞானிகளாகின்றனர். ஞானிகள்தான் என்று சொல்லுவதற்கு நியாயம்:- இந்த உலகம் பிரம்மத்தினிடத்தில் லயமாகும் காலபரியந்தந்தான் ஜீவர்களுக்குப் பிறப்பிறப்புண்டே யொழிய, காலாந்தரத்தில் அதாவது அதன் இயற்கை முடிவில் தோற்றப்பட்ட அண்ட சராசரங்களையும் தான் விழுங்கிக்கொள்வதால்ஞானிகள் என்றே தான் சொல்லல்வேண்டும். உனது மூன்றாவது கேள்விக்கு, ஞானத்தை யடையாதவர்களின் கதியாவது:- இந்த உலகத்தில் ஓர் பொருளைத் திருடினவனைசிறைச் சாலைக்கு அனுப்பி அவ்விடத்தில் மண் சுமக்கும்படியாய் கஷ்டப்படுத்தித் திருடினது அபாதமென்று உணரவைத்து

மீண்டும் அவனை வெளியில் விடுவதுபோல, ஒரு ஜன்மம் படுத்து முடிந்த பின்னர் யமதர்மற் 'கோட்டில்' 'ஆஜராகி' இவன் பாபத்திற்குத்தக்க தண்டனைகள் அவனால் விதிக்கப் பட்டு மீண்டும் ஜன்மமெடுத்து உலகத்திற்கு வருகிறான்.

புண்ணிய மார்க்கத்தின் கதி யென்னவென்றால், திருடின ஒருவனைத் தண்டித்த நியாயாதிபதியின் உத்தியோகத் திற்காசை கொண்டு அதற்குரிய கர்மாக்களைச் செய்து, யம பட்டம், இந்திரபட்டம், பிரம்ம பட்டம் என்று சொல்லப் பட்ட புண்ணிய லோகங்களுக்குச் சென்று அந்தந்த உத்தி யோகங்களை வகித்துப் புண்யம் க்ஷீணித்தவுடன் மீண்டும் ஜன்மமெடுத்து உலகிற்கே வருகின்றார்கள். இன்னும் விரித் துக் கூறில், பிரம்மத்தின் இயற்கை சிருஷ்டியவஸ்தையின் முடிவு உலகம். உலகத்திலிருந்து ஜீவசிருஷ்டியின் அவஸ்தை முடிவு மானிட ஜன்மம். இந்த மானிட ஜன்மத்தின் ஜீவிய காலமோ அற்பம். உலகத்தின் ஜீவகாலமோ நீண்ட ஆயுளை யுடையது, ஒருவன் ஆத்ம ஞானமே யில்லாமல் அனந்த கோடி ஜன்மம் எடுக்கப் போதுமான ஆயுளைத் தாங்கினதா யிருக்கின்றது உலக முடிவு.

கா:— சுவாமி! அகோ ஆச்சரியம்! பிரம்மத்தின் லீலை அதிசய மாயிருக்கின்றது. நிரபாதியாயிருக்கிற சுத்தப்பிரம்மத் தில் தோன்றிய பிரகிருதியினிடத்திலிருந்து விசேஷ மாயா சக்தி உண்டாகக் காரணமென்ன? லயத்திற்கு ஆதி கார ணம் எது? லயமுடிவில் பிரம்மம் எவ்வாறு விளங்குகின்றது?

கு:— பெண்ணே! இது கேட்கத் தகாததும், கேட்கக்கூடா ததுமான கேள்வி. ஆயினும், சொல்லுகிறேன். கேட் பாயாக. முன்சொன்ன வித்தாகிய நெல்லினிடத்தில் பச்சை நிறம் போன்ற தழைகள் உண்டாகக் காரணமென்ன? வித் தைச் சோதித்து பார்க்குமிடத்து அந்த அம்சங்கள் இருக் கின்றனவோ? உமி நீங்கின் அரிசி வெள்ளையல்லவோ? இந்த இடத்தில், அதின் இயற்கை தர்மமென்று தானே சொல்ல வேண்டும்.; அதுபோல், அந்தப்பிரம்மத்தில் தோன்றிய

பிரகிருதியின் இயற்கை சுபாவம் என்றுணரவேண்டும். லயத்திற்காதி காரணம் ஜீவகோடிகளே. ஜீவகோடிகளில், இயற்கை தத்துவத்தை இவ்வாறுணர்ந்து லயமானது போக, உலகப் பிரளய காலத்தில் எல்லாம் சேர்ந்து லயமாகும். லய முடிவில் விளங்குகின்றதை நீ அறிந்து அனுபவித்தும் மறந்து கேட்கின்றனை. சுஷுப்தியவஸ்தையில் எல்லாம் லயமாகி எவ்வாறு விளங்கிற்றோ, அவ்வாறு தனித்து விளங்குமென அறியக்கடவது.

கா:— சுவாமி ரொம்ப ஆச்சரியமும், ஆனந்தமாயுமிருக்கிறது. மானிட ஜன்மங்களுக்குத் தான் லயமாவதும் பிறப்பிறப்புண்டாவதும் மொழிந்தீர்கள். இவற்றைத்தவிர, மற்ற எத்தனையோ ஜீவகோடிகள் இருக்கின்றனவே. அவைகளின் கதி என்ன? அவை எவ்வாறு லயமடையமார்க்கமிருக்கிறது? அவற்றை விரித்துக்கூறப் பிரார்த்திக்கிறேன்.

கு:— பெண்ணே! உன் கேள்விக்குப் பிரதியுத்தரம் சிறிது விஸ்தாரமாகவே சொல்லிவிட்டால், இனி இந்த இடத்தில் கேள்வி ஜனிக்காதென்பது என்னுடைய நம்பிக்கை. ஆதலால், கவனித்துக்கேள். சிருஷ்டியின் தத்துவமென்னவெனில் சுஷுப்தி யவஸ்தையிலிருந்த சுத்தப்பிரம்மத்தினிடத்தில் ஓர் பிரகிருதி தோன்றியது. அதன் பெயர் மூலப்பிரகிருதி அதிலிருந்து ஓர் பிரகிருதி தோன்றியது. அதன் பெயர் பின்னபிரகிருதி. அதனிடத்திலிருந்து பஞ்ச பூதம் தோன்றியது. பஞ்ச பூதத்தால் உலகமும், மலை, வனம், நதி, சமுத்திரம் முதலியவைகளும் தோன்றி மானிட ஜன்மத்தோடு இயற்கை சிருஷ்டி முடிவடைகின்றது. இங்ஙனம் மானிட ஜன்மம் தோன்றிய மார்க்கம் எவ்விதமெனில்:-பூச்சி முதலாகிய அற்ப ஜந்துக்களிலிருந்து அது இறந்து, அதே ஜன்மம் பறவையாகி, அப்படியே ஒன்றுக்கொன்று மேலாய் ஜன்மமெடுத்து, அதிலிருந்து மிருக ஜன்மத்திற்கு வந்து, மிருக ஜன்மத்திலிருந்து மானிட ஜன்மமாகி இயற்கை சிருஷ்டி முடிவடைகிறது. இதில் மானிட ஜன்மம் தவிர மற்

றேனைய ஜன்மங்கள் இயற்கையிலுள்ள தர்ம நியதிப்படி மானிட ஜன்மமடைகிறது. அந்த ஜன்மங்களுக்கு இது தான் முக்தி. இந்தவிடத்தில பிரம்மம் வித்தாயும், ஜன்மாங் தமாகிய மானிட ஜன்மம் நெல்லாயுமிருக்கிறது. ஆதலால் தான் "தெய்வம் மனுஷ்ய ரூபேனும்" என்று வேதங்கள் முறையிடுகின்றன. மானிட ஜன்மத்திற்கும், பிரம்மத்திற் கும் வித்தியாசமென்னவெனில்:- பிரகிருதியின் சம்பந்தத் தால் பஞ்ச பூதங்கள் பின்ன பிரம்மத்தைக் கலந்துகொண் டிருப்பதும், ஆதிப்பிரம்மம் அபின்னமாயிருப்பதுந்தான். ஆதலின், எல்லா ஜன்மங்களும் மானிட ஜன்மத்திற்கே வந்து, கடைசியாய் மேற்சொன்னபடி லயமாவது சத்தியம்.

கா:— சுவாமி! இப்பொழுது சிருஷ்டிக்கிரமத்தைப் பூரண மாய்த் தெரிவித்ததிலிருந்து கிஞ்சித்தும் சங்கையில்லாது தெளிந்துகொண்டேன். இந்தவிடத்தில் ஒரு சந்தே கமும் இனி இல்லை. ஆனால் இந்த யுகாரம்பத்தில், அக் காலத்தில் புதைந்து கிடந்த இந்த மார்க்கத்தை, பகவான் ஸ்ரீகிருஷ்ணமூர்த்திதோண்டியெடுத்து அர்ஜுனன்றுவாரா அளித்தாரென்றும்; மீண்டும் மறைந்து போய்விட்டதென் றும், இதை புனருத்தாரணஞ் செய்வதற்கு என்னித்தாங் கள் என் மூலம் வெளியாக்கினதையும் மொழிந்தீர்கள். எல் லாம் சத்தியமே. சின்மாத்திர சொரூபமாய் விளங்கும் தங்களுக்கு இந்த சங்கற்பங்கள் இருப்பானேன்? அவற்றால் பந்தமில்லையா? நெடிய உலகத்தில் மஹான்கள் இன்றுமிருக் கலாமே! இந்த அபிப்பிராயத்திலுள்ள ஒருவரையாவது தரிசிக்கவாவது, கேட்கவாவது இல்லையே! இது நிற்க, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா தங்களைப்போன்ற மானிட சிருஷ்டியில் ஒருவர்தானே! அவரை எற்றமாய்ச் சொல்லுங் காரண மென்ன? அப்பேர்ப்பட்ட பகவான் சந்நிதியில் தெரிந்து கொண்ட அர்ஜுனன் முக்தி பெற்றதாகக் காணோமே! தங்களுக்கும் ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கும் என்னபேதம்? இவற்றை விரித்துரைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கு:— பெண்ணே! நல்ல கேள்வி கேட்டனை. நியாயந்தான்.

சொல்வதைக் கேள். இதுவரை நீ நீண்ட விசாரணை செய்து கொண்டு, நானும் நீண்டபடியே அளித்துக்கொண்டு வந்திருக்க என்து சிஷ்யையாகிய உனக்கு இவற்றுல் பந்தமில்லையென்றும், எல்லாரமானவர்க்கு சஞ்சித கர்மாவென்றும் உணர்ந்து பரிபாலித்தல் எந்த நியாயமோ, அந்த நியாயமே எனக்குமாதலால், யாதொரு பந்தமும் கிடையாது. தவிரவும், தனக்கெனச்செய்யும் கர்மாக்களெல்லாஞ் செய்து எல்லாம் முடித்தோய்ந்தபின்னர், பிராரப்த புஜிப்பின் முடிவிற்கு எதிர்பார்த்திருக்கும் ஓர் ஞானி பந்தத்தை நிவர்த்திக்கும் மற்றையோர்களுக்குத் தன்னுடைய கருவி காரணங்களால் லோகோபகாரமாய்ச் செய்யும் காருண்யமென்று அறியவும் இன்னும் எந்த உலக பிரம்மத்தில் ஜீவன் முக்தர்கள் லயமடைவார்களென்று நீ முன்னமுணர்ந்தனையோ, அந்தப் பிரம்மத்திற்குப் பெயர் 'ஈசுவரன்' என அறிக. அந்த ஈசுவரன் தொழில்:— சத்தையவலம்பிக்கும் எந்த மானுட ஜீவனே அவனுக்கு வரும் அசத்துக்களை பிராரப்தத்தை யனுசரித்துக்கண்டித்து வருவதேயாகும். ஆதலால், ஜீவன் முக்தனும் ஒரு ஈசுவரனே. இவன் ஜீவேசுவரன், அவன் மஹேசுவரன். ஆதலின், தான் மஹேசுவரனுய் விட்டபடியால், லாப லோபமில்லாமல் லோகோபகார கர்மங்களை நடத்துதல் தான் நியாயம். அந்த சுபாவமும் நடத்தும்படி செய்யும்.

அடுத்த கேள்விக்கு:— ஜீவன் முக்தி தசையில் அநேக மஹான்கள் இருக்கலாம்; ஆனால் அதில்பேதம் அநேகமுளது. அதாவது முக்திப்பதம் ஒன்றேயாயினும், கர்மத்தின் பேதம் விசேஷமாயிருக்கிறது. அது எவ்வாறெனில், ஒருஜீவன் பூர்வ ஜன்மத்தில் கொலை, களவுகளிலிச்சித்து அந்திய காலத்தில் ஈசுவர பக்திக்குப் பாத்திரனுகி மனதைப்பரிசுத்தப்படுத்திக் கொள்ளும் அவஸ்தையல் நிர்யாணமடைந்து மறு ஜன்மம் எடுக்குங்கால் அவன் மனோநிலையில் விட்ட எல்லையிலிருந்து முக்திப்பதத்தை அடையலாம். அவன் கர்ம சஞ்சிதமானது கொலை களவுகளில்தான் பிரவர்த்திக்கும். இந்த ஞானி

எங்ஙனம் லோகோபகாரம் செய்யக்கூடும்? இன்னும் பிராம் மணஜாதியிற் பிறந்து அக்கினி ஹோத்ர ஔபாசனாதிகளைச் செய்வதில் திருப்தியடைந்து, இப்படிப்பட்ட அனேக சத் கர்மாக்களைச்செய்வதற்கு தனமில்லையே யெனக் கவலையுற்று அந்திய காலத்தில் பிரம்ம ஞானப்பற்றுண்டாகி, அவன் மீண்டும் ஜன்மமெடுத்து பூர்வஞ்செய்த சத்கர்மத்தினால் சில பத்தில் இந்திரிய நிக்கிரகஞ்செய்து தன்னையும் விசாரித்து முக்தியடைவானாயின், அவன் பிராரப்த வசத்தாய சத்கர் மாக்களால் பீடிக்கப்படுவானே யொழிய லோகோபகார மான இந்தக்கர்மம் செய்யமுடியாது. இன்னுமொருவன் தன்னைமாத்திரம் உணர்ந்துகொண்டு, பூர்வஜன்மாரம்பமுதல் நிகழும் ஜன்மாவரை கேள்வியாலேயே சாந்தியடைந்து, முக் திப் பதத்திலிருப்பவர்களுமுண்டு. அவர்களுக்கு இந்த ஹிதோபதேச விவகாரங்கள் கிடையா. இப்படி அனேக நியாயங்களால் மஹான்களிருப்பினும்லோகோபகாரத்திற்கு அதிகாரிகளாகார். எற்கனவே சாதன சதுஷ்டயங்களடைந் து விசாரமுதிக்குங் காலத்தில் நிர்யாண தசையடைந்து, மீண்டும் ஜன்மமெடுத்து சாங்கியயோக நிஷ்டையிலிருந்து வளர்ந்துவரும் இந்த ஞான யோகிக்கே லோகோபகாரமான கர்மம் செய்தல் கூடுமென்று அறியவும்.

இனி மூன்றுவது கேள்விக்குத்தரம் கேட்பாயாக. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா மானிட ஜன்மமாய்த் தோன்றிய வியவ காரம் வேறு. நானும் நீயும் மானிட ஜன்மமாய் வந்தமார்க் கம் வேறு. அது எவ்வாறெனில், சிருஷ்டி, ஸ்திதி,ஸம்ஹார மென்னும் முத்தொழில் ஒருதொழிலுக்குரியமூர்த்தி ஸ்ரீகிரு ஷ்ணன்: விஷ்ணுவின் அம்சம், அந்த விஷ்ணுவானவர் தன் பிரகிருதியின் சக்தியால் "இச்சாமாத்ராத் பிரபோ சிருஷ்டி." என்ற சுருதிப்படி பூமிபாரம் தீர்ப்பதுமூலம் அசத்தைக்கண் டிக்கவும், இயற்கைக் காலசக்கிரம் நடைபெறுமாறு சத்து அபிவிருத்தியடையவும், தான் மானிட உருவமாய்ப் பிறந்து தர்மத்தை ஸ்தாபனம் பண்ணினதினால், நமக்கும் அவருக் கும் வஸ்துபேதமில்லாவிடினும்; மேற்சொல்லிய மார்க்க

பேதமும், இயற்கை தொழிற்பேதமும் உண்டென்று அறிவாய். இந்தக்காரணங்களால் எற்கனவே அவர் லோகரக்ஷகரயிருந்து பிறந்தலாலும், நாம் மாறுட உருவமெடுத்து அக்ஞானத்தைப்பொருந்தி அதை விட்டு நீங்கி ஈசுவரதுல்லியத்தை இப்போதுதான் அடைந்திருப்பதாலும், அதை எற்றமாய்ச்சொல்வது உலகத்தியல்பு. தவிரவும், நாம் ஜீவர்களுக்கு ஈசுவரன் மூர்த்திகள் உலகத்திற்குஈசுவரன். மூர்த்திகளுக்கு ஈஸ்வரன் பரப்பிரம்மமென்று நன்குணரக்கடவாய். தவிரவும், ஜீவேசுவரர்கள் லோகேசுவரர்களிடத்தில் லயமாகி, லோகேசுவரர்கள் பரப்பிரம்மத்தினிடத்தில் லயமாவதால், இந்த இரண்டிற்குள் வஸ்துபேதமும் மூர்த்திபேதமும், இல்லையென்றும் அறிவாய்.

இனி உன் நான்காவது கேள்விக்கு விடை காண்பாயாக. நீ சொல்லுகிற முக்தியை அர்ஜ்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணபகவானிடத்தினின்றும் அடையாவிடினும், உலகத்தைவிட்டு கர்மயோக அப்பியாசியாகி - முக்திக்குரிய கர்மாவைச்செய்ததுமன்றி, சத்தியத்தைத் தழுவிக்கொண்டான் என்னும் முக்தி அந்த க்ஷணத்திலேயே அடைந்திருக்கிறான். அஃதெங்ஙனமெனில், அர்ஜ்ஜுனன் கௌரவர்களோடு யுத்தஞ்செய்து நாட்டை மீட்டுகிறதென்ற சங்கற்பநியானத்தில் 13 வருஷம் நின்று, அதன் பின்னர் அத்தபசிற்கிணங்க நாட்டைக் கேட்டும் கொடாத துரியோதனாதிகளோடு யுத்தத்திற்காரம்பித்து, யுத்தகளத்தில் அர்ஜ்ஜுனன் தபலைக்கெடுக்கப் புறப்பட்ட அக்ஞானமென்னும் விருக்ஷத்தை ஸாக்ஷாத் கிருஷ்ணபகவானுலுபதேசிக்கப்பட்ட கர்மயோக அப்பியாசத்தைக்கொண்டு வெட்டி வீழ்த்தி, தான் நின்ற சத்தியநெறிக்கும், க்ஷத்திரிய தர்மத்திற்கும், பங்கம் வாராமல் நடந்துகொண்டு நாட்டையடைந்ததனால், அரசுரிமை யென்னும் பிரம்மத்தில் லயமானவரைமுக்தியென நீ தீர்மானிக்கவேண்டும். தவிரவும், பகவானிடம் கேட்ட கீதாவசனங்களைமனதில் நிரப்பிவைத்திருப்பதால்,அவன் அடுத்தஜன்மத்தில்முக்திப்பதம் சேர நீபாயமுண்டென்றும் காண்பாய். தவிரவும்,

ஞானத்தைப் பெரிதாயெண்ணி உலகத்தை மித்தையெனத் தள்ளத் தீர்மானித்து, அதற்கான சாதனங்களை அநுஷ்டித் துவரும் ஒருவன் அடுத்த ஜன்மத்திலோ, அல்லது மறு ஜன் மத்திலோ காலக்கிரமப்படி முக்தியென்னும்பதமடைவானே யொழிய பிறப்பென்னும் மார்க்கத்தில் புகான் என்பதை நீ தெளிவுறக்காண்பாய்.

கா:— சுவாமி! தங்களினிய வசனங்களால் எடுத்துரைக்கப் படும் பிரம்மத்தின் லீலைகள் அதியற்புதமாயும் ஆச்சரியமாயு மிருக்கின்றன, சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்னுந்தொழில் களால் மேலேகூறிய மூர்த்திகளுக்குப்பந்தம் ஏற்படாதா? அவர்களுக்கு நம் போல் மனமுண்டா, இல்லையா? இன்னும் அவர்கள் உற்பத்தி எதனால்? நமது சஞ்சிதம் அவர்களது வாம்பில் தானே இருக்கவேண்டும்? இவற்றின் விபரங்களை அறிய விரும்புகிறேன்.

கு:— பெண்ணே! பிரம்மத்தின் வைபவத்திற்கும் அளவில்லை, உன் கேள்விகளுக்கும் அளவில்லை என்பதைநோக்கி நான் மிகுந்த ஆச்சரியத்தை அடைகின்றேன். என்றாலும், சொல் வதைக்கேள். ஈசுவராதிகளுக்கு அவர்கள் செய்யும் தொழி லால் பந்தமென்பது கிடையாது. இரவு பகலற்றவிடத்தில் விளைந்து வளருகிறவர்கள். மற்று ஞானிகளுக்கும் ஈசுவரா திகளுக்கும் மனமில்லை. ஞானிகளுக்கோ மனமிருந்து இறந் தவிடம்; ஈசுவராதிகளுக்கோ, மனமில்லாமலே சத்துவ சொரூபமாய் நின்றவிடம். ஞானிகள் குடியிருப்பு பஞ்ச பூத பௌதிகம் ஈசுவராதிகள் குடியிருப்பு சின்மாத்திரமாகிய பிரகிருதி; அந்தப்பிரகிருதியிலேயே உண்டானவர்கள். மானிட ஜன்மங்கள் இச்சையால் மனமென்னும் உருப்பெற் று, அவ்விச்சை நிறைவேறாமல் மனம் சாசுவதப்படுகிறது. தவிரவும், இச்சிக்கும் சக்தியைத்தவிர நிறைவேற்றும் சக்தி மானிடர்க்கில்லை. ஈசுவராதிகளுக்கு இயற்கைத்தொழில் களில் மனமே கிடையாது. ஆனால், உலக க்ஷேமத்தின் பொருட்டு அவதரிக்க நேருமாயின், இச்சை நிகழ்ந்து அவ

தாசம் எடுத்து வாருங்கால், நீயும் நானும் மனத்தை வென்றவாறு ஒரிச்சையால் ஜனித்த அந்த மனத்தைக் கெடுத்து நாமிப்பொழுது செய்யும் கர்மாக்களைப்போல், அந்த ஈசுவராதிகளும் பந்தமறச்செய்ய வேண்டியவற்றைச் செய்து பூர்த்தியான பின்னர் தம் ஸ்வஸ்தானத்தில் லயமாகிறார்கள். ஞானிகளுக்கும் மனம் உண்டாவதுமிறப்பதுமாயிருக்கிறது அஃதெவ்வாறெனில், பொருந்திய பதார்த்தங்களை இச்சையோடு புசித்தாலும் மனமுண்டாகி அவை ஈசுவரமெனும் அறிவினால் கண்டிக்குங்கால் அந்த மனம் இறந்தும் போகிறது இன்னும உன் அடுத்த கேள்விக்கு விடை:— மானிட ஜன்மங்களின் சஞ்சித வினையானது ஈசுவரன் ஆஞ்ஞையில் தான் இருக்கிறது. அதன் வரவு செலவு முழுதும் ஈசுவரனால் நவக்கிரஹங்களென்று சொல்லப்பட்ட சூரியன் முதல் ஒன்பது பேர் மூலமாய் மானிட ஜன்மாவிற்குப் போகம் புசிக்குமாறு கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்த ஒன்பது பேர்களுக்கும் அதிஷ்டான மூர்த்தி ஈசுவராதிகளே ஈசுவரனென்றால், மூன்று பேர் மாத்திரமல்ல. சக்தி தேவதைகளுமிருக்கின்றன. புண்ய லோக தேவதைகள் இந்த ஈசுவர ஆஞ்ஞைக்குட்பட்டவர்கள்: அவர்களுக்கும் பூலோகத்திற் பிறந்து முக்தியடைந்தாலன்றி வேறு க்ஷேமம்கிடையாது. ஆதலால், இனி உனக்கு நான் உபதேசிக்கப்போகும் கர்மசன்னியாசத்தைக் கேட்பாயாகில், இத்தியாதி விசாரணையில் பற்றியிருக்கிற உன் புத்தி சாந்தியடையுமென நான் நினைக்கிறேன். உன் மனோநிலையைத் தெரிவிப்பாயாக.

கா:— சுவாமி! இதுவரையில் தங்கள சந்நிதியில் கேட்ட நான் இன்னும் சாந்தி பெறவில்லையேயாயின், என் ஜன்மம் வியர்த்தம். என் மனோநிலையைத் தாங்கள் கேட்பதால் ஆக்ஞைப்படி சொல்லுகிறேன். பிரம்மஞான நிச்சயத்திலாவது அதன் நடையிலாவது தாங்கள் உத்திரவிட்டதற்கு மாறாய் எனக்கென ஒன்றிருப்பதாகக் காணமுடியாதவனாயிருக்கிறேன். தவிரவும் எந்த ஈசுவரன் செங்கோல்கொண்டு இந்த

ஜீவர்களைப் பிடித்திழுத்துச் சரீரத்தை விழுத்திவிட்டுச் செல்லுகின்றனோ அந்த யமனுக்கு ஒரு கௌரவமுமிருப்பதாகக்காணேன். இது அக்ஞானிகளுக்கும் சுலபமாய் அறியக்கூடிய விஷயம். எனெனில், அவன் கொன்றிருந்தால் அவனுக்கு கௌரவமுண்டு. ஆனால், சரீரத்திலுள்ள ஆத்மாவைத் தொட முடியாதவனாய், அதைப் பற்றிக்கொண்டிருக்கிற சங்கற்ப சரீரத்தோடு இழுத்துப்போய் அனேகர் தண்டனைகளை விதித்தாலும் திரும்ப நூதன சரீரந்தந்து மீண்டும் இவ்வுலகத்திற்கே அனுப்பிவிடுவதால், இந்த யமனுக்கு பீதியடைய அக்ஞானிகளுக்குங் கூடக் காரணமில்லையென நான் அறிகிறேன். ஆதலின், எந்த யமனாகிலும் எந்தப்புண்ணிய லோக சம்பந்தமாகிலும் என்னை நோக்குதற்கு முடியாவண்ணம் கற்பாறையில் கோட்டை கட்டி, பிரம்ம சந்நிதியின் வாயிலைத்திறந்து அதன் வழிஉலாத்திக்கொண்டு தங்கள் கிருபையால் சத்து அசத்து என்ற பேதமற்ற சாம்ராஜ்யத்தை இந்த தேகம் உள்ளபோதும் அனுபவித்து, நீங்கிய பின்னும் அனுபவிப்பேன் என்பதில் ஐயமில்லையெனச் சத்தியமாய்ச் சொல்லுவேன்.. காலப்போக்கை யுத்தேசித்தும் - சந்நிதானத்தில் வைத்திருக்கும் பக்தியின் விசேஷத்தாலும் சந்நிதான வாயிலாய் விசாரிக்கத் திருப்தியடைகிறேனே யொழிய, ஞானயோகியாகவே இருக்கிறேன் என்பதில் சந்நிதானம் க்ஷமபவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். இன்னும் கேட்கக் கேட்கத் திடம்பெறக்கூடுமே யொழிய குறைவு பெறக் காரணமில்லையென்ற உத்தேசத்தைக் கொண்டு, சந்நிதானத்தின் வாசகத்தை எதிர்பார்த்தவனாயிருக்கிறேன்.

கு: — பெண்ணே! உன் தீர்மான வார்த்தைக்கு நான் ஒவ்வா மகிழ்ச்சியடைகின்றேன். உலகத்தில் உன்போலொத்த பக்குவிகள் இன்னுமொருவர் ஏற்படில் இந்த லோகத்தை வெகுவாய் உத்தாரணஞ் செய்யலாம். உலகவியற்கையும், பிராரப்த வினையும் அவ்வாறில்லாதிருத்தலால் நாம் துக்கிக்க நியாயமில்லை. தவிரவும், உலகம் க்ஷேமமடைந்தாலென்ன?

அடையாவிட்டாலென்ன? அதனால்வரும் லாபலோப மிரண்டுமில்லை. நாம் நமது அங்கதேசத்திலிருந்து உத்தரித்து, ஆத்மாவிடத்தில் லயமாவதைக் காட்டிலும் வேறு லாபம் விசேஷமில்லை. ஆதலால், கர்ம சன்னியாச யோகத்தைக் கேட்பாயாக.

கா:— சுவாமி! கிடைத்தற்கரியதும், ஈசுவர சொருபமாய் வந்ததுமாகிய தங்களது கிருபை என்றும் அமிருதத்தால நான் சுவர சேர்ந்தவளே யொழிய வேறல்ல. ஆனால் இந்த நெடிய உலகில் எண்ணுதற்கரிய மானிட ஜீவகோடிகளில் என் போன்ற பக்குவியில்லாதிருக்குமா? அப்படியிருக்கக் காரணமென்ன? இதற்கு விடையளிக்குமாறு பிரார்த்திக்கின்றேன்.

கு:— பெண்ணே! அவசியம் கேட்கவேண்டியதும், நான்சொல்ல வேண்டியதும் தான். சொல்லுகிறேன், கேள். மானிட உருவந்தாங்கி வந்த எல்லா ஜீவகோடிகளும் ஞானேந்திரியங்களின் துவாரா உலகவைபவங்களை ரமித்து மாயையென்றுணராது அதில் மூழ்கியிருப்பவர் மூன்றிலொரு பாகம். மற்றிரண்டு பாகத்தில் மாயைதானென்று சாஸ்திரங்களாலும் பெரியோர்களாலுமறிந்தும், இதன் மோகத்தைத் தள்ள முடியாமல் சிறத்தையின்றிக் காலங்கழிப்பவர் ஒரு பாகம். மற்ற மூன்றாவது பாகத்தில் மூன்றிலொரு பாகம் தற்காலம் ஏற்பட்ட சன்னியாசிகளால் பக்குவ பரிசோதனை சரியாய் செய்யப்படாது, உசிதமல்லாத கர்மாக்களைப்பெற்று தக்க பலப்பிராப்தியடையாது வீண் காலங்கழித்து வருகின்றனர். அதில் இரண்டாவது பாகத்திலுள்ளவர்கள் அபூர்வமாயுள்ள யோகிகளுக்குப் பணிவிடை செய்து சரியை கிரியைகளில் பிரவர்த்தித்து வருகிறார்கள். மற்ற மூன்றாவது பாகத்திலுள்ளவர்கள் ஆத்ம விசாரணையாரம்பித்துத் தன்னை இன்னுனென அறிந்துகொண்ட அளவிலேயே பிரசங்கிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். அதில் தவறிவிசாரணையிலூன்றி நின்ற சொற்ப பேர்களுக்கும் சற்குரு தரி

சனம் கிடையாமலே போகின்றது. அநிலெஞ்சிய ஒன்றிரண்டு தான் சத்குரு சந்நிதிக்குப் பாத்திரமாகி பூர்ணதையடையப் பிராரப்தமாகின்றது. தவிரவும், புஷ்பராகம்-ஸ்படிகம் - கரைசியம் - மட்டச்சிகப்பு - இவற்றை வாங்கியணிவோர்கள் தாம் உலகத்தில் 12 ல் 11 பங்கு. மற்ற ஒரு பங்கிலும் புஷ்பராகம் வாங்குவோர்கள் விசேஷம் எஞ்சிய சொற்ப ஜீவர்கள்தான் உயர்ந்த பச்சை, கெம்பு, வைரம் முதலியவைகளை வாங்கியணிய பிரீதியும் சக்தியும் உள்ளவர்களென்பது உலகமறிந்த விஷயம். ஆதலால் எனக்கு உன் போன்ற பக்குவிகள் கிடைப்பது துர்லபமே. இது பாரம்பரியமாய் இப்படியே நடந்துவரும் தர்மம். இனி, கர்ம சன்னியாசத்தைக் கேட்டு சாந்தியடையக்கடவாய்.

ஓம் — சாந்தி — சாந்தி — சாந்தி — ஓம்.

ஸ்ரீ ராம கீதோபநிஷத்தில்

மூன்றுவது அத்தியாயமாகிய

# ஞானயோகம்

முற்றிற்று.

ஓம்

# ஸ்ரீ ராம கீதோபநிஷத்

## நான்காவது அத்தியாயம்

## கர்ம சந்நியாச யோகம்.

காயத்ரி:— ஸ்வாமி! தாங்கள் இதுவரை எனக்குப் போதித்த கர்மயோகம், ஞானயோகம் இவ்விரண்டினையும் பிரத்தியேகமாய் அப்பியசிக்காவிடினும் சிரவணமாத்திரத்தினாலேயே சந்நிதான விசேஷத்தால் எல்லாம் தீர்ந்து முடிந்த இடத்திலிருந்து அனுபவித்து வருகிற நிலையில் நின்றாலும், இன்னும் உறுதி பெறும் பொருட்டுத் தங்கள் வாசாவிலிருந்து வரும் அனுக்கிரஹ ரூபத்தோடுங் கூடிய கர்ம சந்நியாச யோகத்தை எனக்குச் சாற்றியருளுமாறு தங்களுக்கு முன்னும் பின்னும் நமஸ்கரிக்கிறேன். கருணைக் கடலே! என்னைத் தடுத்தாட்கொண்ட சற்குரு ஸ்வாமி! கர்ம சந்நியாச மென்றால் என்னவென்பதையும், அது எத்தகையதென்பதையும் எனக்கு அருளுமாறு பிரார்த்திக்கிறேன்.

குரு:— பெண்ணே! உனது புத்திக்கூர்மையுள்ள இனிய வசனத்தினும், அன்பு நிறைந்தொழுகும் உனது பக்தியினும், நான் மிக்க பரவசமடைந்து, உலகத்தில் ஞான மார்க்கத்தின் வழி எத்தனையோ இருப்பினும் அவைகளை யெல்லாம் நீக்கி, பத்து உபநிஷத்துக்களினும், உபநிஷத்து ரூபமான கிரந்தங்களினும், உள்ள சாரத்தைப் பிழிந்து உனது செவி என்றும் வாயில் ஊட்டி, உன் மனத்தைப் பருகும் படியாய்ச் செய்து, அஞ்ஞான மென்னும் விஷத்தை இறக்கி சொக் ஞான சொரூபமாய் நீ இருப்பதாகக் காணும்படியும் இந்தக் கர்ம சந்நியாச யோக மென்னும் அதி அற்புத ஔஷதத்தை உண்டால் நிச்சயமாய் முக்திபதத்திற்கு வேறு இடையூறு இல்லை என்று நிர்மாணிக்கும் ஸ்தானத்தில் உன்னை வைத்து இதை உனக்கு அருளுகிறேன். நாம்

இதுவரை உனக்குச்சொன்ன யோக மாகிய ஔஷதங்களுக் குப்பத்தியம் அபத்தியம் என்ற விவகாரம் கிடையாதென்று நீ உணரக்கடவது. நீ கேட்ட கேள்விகளுக்கு விடையளிப் போம். கர்ம சந்நியாச மென்பது கர்மத்தை விடல் என்று தாத்பர்யம் கர்மத்தை விட்டவர்களே சந்நியாசி என்று கூறப்பொருந்தும். ஆதலால், கர்மத்தை விட்டுப்பிரம்மத் தில் நீ யோகியாய் இருக்கக்கடவாய்.

கா:— சுவாமி! என்னறிவிற்குப்பொருத்தமில்லாததாயும், இது வரை உத்தரவான யோகங்களுக்கு மாறுதலாயும் இருக் கிறதே? முன்னம் மொழிந்த கர்ம யோகத்தில் கர்மத் தைச் செய்யுங்கால் ஞானத்தின் கப்பி இருக்கவேண்டு மென்றும், ஞான யோகத்தில் ஞானத்தில் நின்று கர்மத் தைச் செய்யவேண்டுமென்றும், அவ்விரண்டு கர்மாக் களும் சரீரத்திற்குச் சொந்தமான பூர்வ வினையென்றும், அப்படிச் செய்யும் கர்மாக்களுக்குச் சாக்ஷியாய் நிற்பதே எனது தர்மம் என்றும், இப்பொழுது கர்மத்தை விடல் சந்நியாசமென்றும் மொழிந்தீர்கள். ஆனால் அடியாள் சந் நிதானத்தின் அறிவால் மறைத்திருக்கும் அதி அற்புத குஹ் யங்களைச் சந்நிதானம் சம்பந்தப்பட்டவரையில் அறியப்பாத் திரமில்லாதவளாய் இருக்கிறேன். இதை வியக்தப்படுத்த வேண்டுமாய்க்கோருகிறேன்.

கு:— பெண்ணே! உன் அறிவின் சூஷ்மத்தை, கர்ம சந்நியாசம் என்ற வார்த்தைக்குக் கிரமமாய் அர்த்தம் சொல்லி உன் பக்குவத்தைப் பரிசோதித்தேன். அஞ்சற்க! முன்சொன்ன இரண்டு யோகத்தைத் தழுவியதே இந்த யோகமும் உன் நிலைத்த புத்தி, நீ மறுத்ததினால் எனக்கு நிச்சயப்பட்டது நீ உள்ளபடி ப்ரம்மானுபவத்திலிருக்கிறாயென்று சந்துஷ்டி அடைகிறேன். இந்த யோகத்திற்கு மேல் இனி உனக்கு சொல்லப்போகிறதில்லை. ஆதலால் இதைக் கேட்டு, உன் னைத் திரவிசாரித்து சந்நியசிக்கக்கடவது. அதாவது, கர்ம சந்நியாச மென்றால் கர்மத்தை விடுவது என்றே தான்

தாத்பர்யம். எப்படி விடுதல் என்னும் கேள்வி உனக்கு நிகழ்ந்திருக்கவேண்டும். அதற்கு நாம் பிரதி சொல்லுவோம், கேள். கர்மத்தைச்செய்து பலனை விடுதலே சந்நியாசமாகும். ஆதலால் மேற்சொன்ன இரண்டு யோகங்களையும் ஆதாரமாய் வைத்துக்கொண்டு பலாபேக்ஷையின்றி கருமத்தைச் செய்வையேல் நீ யோகியாகலாம்.

கா:— சுவாமி! முன் சொன்ன யோகங்களுக்கும் இந்தயோகத்திற்கும் வித்தியாசம் ஒன்றுமில்லையே. இதை நூதனமாய்க் கர்ம சந்நியாசமென்று சொல்லக்காரணமென்ன?

கு:— பெண்ணே! கர்மயோகமானது ஞானத்தின் பொருட்டு கர்மத்தைச் செய்யதல்; ஞான யோகமானது ஞானத்தில் நின்று, "இது சஞ்சித கர்மா; பிராரப்தம் புசிப்பவை; பிரகிருதியால் செய்யப்படுகிறது, நாம் இதற்கு சாக்ஷி மாத்திரம்" என்று கர்மம் நடத்தல். இந்த யோகமோ, அவ்விரண்டும் அசாத்தியமாகத் தோன்றில் எல்லாக்கர்மாக்களிலும் பலத்தைக் கருதாது செய்தல். இவ்விதம் செய்வது கர்ம சந்நியாசம் என்று ஆன்றோர் கூறியுள்ளார்.

கா:— சுவாமி! ஆச்சரியமாயும், அழகாயுமிருக்கின்றது. ஏனெனில், குழந்தைகளிடத்தில் கிருபையுள்ளதாயார் குழந்தைகளுக்கு மருந்து கொடுக்கும் காலத்தில், ஒரே மருந்தைப் பாத்திர பேதங்களைக்காட்டி அதை உண்ணுமாறு செய்யும் தன்மை போல் வேத மாதாவும் அதை அநுபவித்த குருவாகிய அன்னையும், வார்த்தை பேதங்களினாலும், இடை பேதங்களினாலும் சிஷ்யனுடைய மனது வாங்கி உண்ணுமாறு செய்யும் கருணையாய இந்த யோகம் நன்கு ருசிபிக்கின்றது. மெத்த வியப்படைகிறேன். இதற்குக் கைம்மாறு எந்த உலகத்திலுமில்லை.

கு:— பெண்ணே! நீ சொல்லியவை யாவுங்கேட்டு உன்னறிவின் தீக்ஷண்ணியத்திற்கு மெச்சுகிறேன்; என்றாலும் மனமானது ஓர் சிறு குழந்தை அது அநேக ஜன்மங்களில் நாம்

சொரிந்த பழக்கத்தையே அனுசரித்து வந்திருக்கின்றது. இந்த ஸ்திதியில் ஆத்மஞானவிசாரத்தால் பாடுபடுகிற ஒருவன் நிலைமை மனத்தின்துவக்கை அறுப்பது அசாத்தியம். ஆதலின், ஒரு சிறுகுழந்தையைப்போலவே பாவித்து லாலன பாலனமாய் இந்த ஆத்மாசத்தைப்போட்டி அதை உத்ஜீவிக்கச்செய்வது ஜீவனாகடமை. இன்னும், கர்மத்தைச்சந்நியசித்தல் என்றால், கர்மத்தை அவலம்பித்தது மனமேயிருத்தலால் மனமடங்கவிடுதல் என்பதும் தாத்பர்யம். ஆகலால் இப்பொழுது கர்மயோகத்திலும், ஞானயோகத்திலும் சொன்ன விஷயத்தை அனுசரித்துச்சொல்லிய விதங்ளே நீ அங்கீகரிப்பாய் என நினைக்கிறேன்.

கா:— ஹே ப்ரபோ! மிக்க உண்மை!! மிகச்சிறந்த நியாயம்!!! என்னறிவு இந்த இடத்தில் ஆனந்திக்கின்றது. மிக்க சமாதானம் அடைந்தேன். எனெனில் பிரகிருதியின் சம்பந்தத்தால் நடைபெறும் கர்மாக்களில், தான் முயன்று நடத்துவதாக நினைக்கும் சங்கல்பமாகிய அஞ்ஞானம் என்னும் மனத்தைச்சந்நியசித்தல் என்னும் யோகம் மிக்க அவசியமாயும் முக்கியமாயுமுள்ளது. இந்தக்கட்டத்தில் போதிக்கவேண்டிய யோகமிதுதான். எனெனில் ஞானயோகத்தின் ஆவாராவோ, கர்மயோகத்தின் ஆவாராவோ கர்மங்களைச் செய்துவரும் ஒரு யோகி மனோசந்நியாசத்துடன் செய்யப்படுகிறதென்பது அவசியமுள்ள யோகமாகும். மேற்சொன்ன இரண்டுயோகமும் கர்மசந்நியாசயோகத்தால் நடைபெறவேண்டுமென்பதுமிய வேறன்றிதமல்லவென்பதும் சித்தாந்தித்துக்கொண்டேன். ஆனால் இந்தக்கர்மசந்நியாசமென்பது பலவிதமாய் உலகத்தில் வழங்கிவருகிறது. ஆதலால் எனக்கு மிகுந்த சந்தேகத்தை உண்டுபண்ணுகிறது. அந்தச்சந்தேகத்தை நிவர்த்திக்கும் பொருட்டுத்திருவுளம் பற்றுமாறு வேண்டுகிறேன். மெய்தானும், ஸ்ரீகிருஷ்ணபகவான் போதித்தவிடத்தில் உலகத்தில் யாவத்தோரும் விபரீதமாய் அறியாமைக்கு பக்குவிகளுக்கும் உணர்த்தமறான்களுக்குமே அர்த்தமாகும்படி கூறிவிட்டபடியால், உலகம் உண்மை

தெரியாமல் கெட்டலைகின்றது. ஆகையால் வியக்தமாய்ச் சொல்லிக் கேட்க விரும்புகிறேன்.

குரு:— பெண்ணே! நீ நோக்கிக்கேட்கின்ற குறிப்பை நன்றாய் உணர்ந்தேன். ஆனால் இதில் இன்னும் சில விஷயங்கள் சொல்ல வேண்டியதிருக்கின்றன. அதாவது மூன்று விஷயங்களை இந்த யோகம் அடக்கிக்கொண்டிருக்கின்றது. இதை உயர்ந்தபண்டிதர்களே உணர்வார்கள். இதுவரையிலும் வியக்தமாய்ச் சொன்ன நூல்களும் ஆசாரியர்களும் கிடையா. இந்த இடத்தை ஸ்ரீ கிருஷ்ணபகவான் வேறு இடத்தில் பிரஸ்தாபித்திருக்கிறார். அதை எவ்வாறுணருகிறதென்பதற்கும், மனத்தை நடத்த வேண்டிய முறையையும் பற்றி வாசிட்டத்தில் கூறிய கவிகளை நோக்குவாயாக.

வாசிட்டம்:—

"ஓதுகின்ற பொருண்முழுதும் முன்பின் கூட்டி
யுணர்பவர்க்கல்லது பசுவையொப்போர்க்கெல்லாம்
நீதகன்ற குரு உண்மை செப்பான்றே
நிகழ் சாந்தி விசாரமொடு செறிசந்தோடஞ்
சாது சங்கமென வீட்டின் வாயில் காக்குஞ்
சதுஷ்டயருமுறவாகிற்றடை வேறுண்டோ
மேதினிகாவலர் மனையிற் கடைகாப்பாளர்
விடுவது போல் விட்டிலவர் விடுவரன்றே"

இந்தக்கவியால்என்ன அறியப்படுகிறதென்றால்:—ஆசாரியன் சொல்லும் வாக்கியங்களையோ நூல்கள் முறையிடும் விஷயங்களையோ ஓர் சிஷ்யன் முன்னும், பின்னும் கூட்டி மத்திய அவஸ்தையின் வாக்குப் பிரயோகங்களைப் பிரத்யேகமாய் வைத்துக் கவனியாமல், எல்லாவற்றையும் சேர்த்து அதி நுட்பத்தை ஆராயக்கூடிய ஓர் சிஷ்யனுக்கே குரு, இப்பேர்ப்பட்ட உண்மை ரகசியங்களை வெளிப்படுத்துவாரெனவும், அந்தச் சிஷ்யன் சாந்தி, சந்துஷ்டி, சாதுசங்கம், விசாரம் என நான்கு விஷயங்களையும் அடைந்த பக்குவியாயிருக்க வேண்டுமென்பதையும் நன்கு விளக்கிய கவியா

றும். இதை விளக்கப்படுத்த ஓர் திருஷ்டாந்தம் கூறுவோம் ஒரு தாயானவள் குழந்தையின் ரோஷமத்தைக்கருதி எண்ணெய் கொடுக்கச் செல்லுங்கால் அது ஓடி ஒளிவது வழக்கம். அதற்குத் தாயானவள் எண்ணெய் குடிக்கும் காரணத்துக்கு நேர்விரோதமான பக்ஷணத்தைக் கையிற்காட்டி யெண்ணெயை மறைத்து வைத்து விட்டு எண்ணெய் குடிக்கும் சமாசாரத்தை அற ஒழித்துச் சற்றுநேரம் பொறுத்து காலிலே பாவனையாய்ப் பக்ஷணந் தின்னும் பொருட்டு அழைப்பதாக அதை நம்பும்படி செய்து பக்ஷணத்தைக் கையில் நன்றாய்ப்பிடித்துக்கொண்டு, குழந்தை ஒரு துண்டு விழுங்குமுன்னே மறைத்திருந்த எண்ணெயை எடுத்து அதன் வாயிற் புகட்டி அதன் துக்கத்தை மாற்ற மற்றோர் துண்டு கடைசியாய் ருசிக்குக் கொடுப்பதுபோல, ஆசாரியனாகிய பிதாவும், சிஷ்யனாகிய மாதாவும் ஞானமாகிய அமிருதத்தை, அதன் இஷ்டப்படி அக்ஞானத்துண்டை முன்னும் பின்னும் கொடுத்துப் புகட்டவேண்டும். இது நிற்க இதிலடங்கிய விஷயங்கள் மூன்று என்று சொன்னோம். அதாவது:— 1. கர்மபலத்தியாகம், 2. கர்மத்தியாகம், 3. மனோத்தியாகம். சொன்ன மூன்று தியாகங்களும் சேர்ந்தது கர்ம சந்நியாச யோகமென அறிவாய். இதை இந்தக் காலத்திய பண்டிதர்கள் தப்பாய் அர்த்தம் பண்ணி அநுஷ்டித்து வருவதைப் பார்த்த நீ சந்தேகித்துக் கேட்டனை. அதை நிவிர்த்திக்குமாறு சொல்லுவதைக் கவனித்துக் கேட்பாயாக. அதாவது கர்ம சந்நியாசமென்று கூறியதில் கருமத்தை விடல் என்று பொருள் படுவதால் சிகையை முண்டிதம் பண்ணி யக்ஞோப வீதத்தை விசர்ஜித்து வெள்ளை வஸ்திரத்தில் காவியேற்றிச் சம்சாராதிகளைப் பிரிந்து மலையில் தனித்தோ, அல்லது அநாதியாய் உலகத்தில் சஞ்சரித்தோ வாழ்கிறது சந்நியாசமெனப் பிராம்மண ஜாதி முதல் மற்றெல்லா ஜாதிகளும் அநுஷ்டித்து வருகின்றனர். இதையே மதஆசாரியர்களும் அங்கீகரித்து வருகின்றனர். இது கர்மசந்நியாசம் ஆகாது. ஏனெனில் சரீரங்கர்மம், மனகர்மம், நாடுகர்மம், பேசுவதுகர்மம், மலம் ஜலம்

கழித்தல்கர்மம், உண்பதுகர்மம், பார்ப்பதுகர்மம், நடப்பது கர்மம் இத்தனை கர்மங்களை வைத்துக் கொண்டு ஒருவன் விட்டதாகக்கூறும் கர்மசந்நியாசம் எங்ஙனம் கூடும்? ஆதலால் மேலே சொன்ன நியாயப்படி. மனத்தை முண்டிதம் பண்ணி பிராரப்தம் புஜிக்க நேரும் கர்மாக்களைச்செய்து, தான் சாக்ஷியாய் நிற்றலே கர்மசந்நியாசமாதலால் இனிகர்ம சந்நியாசியோகியாய் இருக்கக்கடவை.

கா:— சுவாமி! இந்தக்கர்மசந்நியாச யோகமிக்க அற்புதமாயும் மனோரம்மியமாயும் ஜீவன் முக்தி ஸ்தானத்தைத் தொட்டுக் காட்டுவதாயும் இருக்கின்றமையால் நான் மிக்க சிறத்தையோடு அமிருதமாய்ப் பானம் பண்ணுகின்றேன். சுவாமி! சமஸ்கிருதத்தில் பண்டிதராயுள்ளவர்களும், அதற்கு பீடமாகிய ஸ்ரீமத் சங்கராச்சாரிய சுவாமிகளும் நாளது வரை இப்படிக் கண்டித்ததாய்க் காணோமாதலாலும், கீதாபாஷியத்தையே அவர்கள் மேற்கோளாய்க்கொண்டு ஆசரிப்பதாலும், தங்களால் உத்தரவாகும் விஷயத்தில் அனுபவம் எனக்குப் பொருத்தமாயிருப்பினும் இந்த இடத்தில் கீதா சுலோகங்களையே தாங்கள் மேற்கோளாய் எடுத்துக் காட்டி வியாக்கியானம் பண்ணினால் எனக்கும் உலகத்திற்கும் நியாயம் விவரமாய் வெளிப்படுமென நினைக்கின்றேன். அப்பால் சந்நிதானத்தின் சித்தம் எனது பாக்கியம்.

கு:— பெண்ணே! நீ புகன்றது நியாயமாயும், தர்மமாயும் இருக்கிறது. கேட்பாயாக. நான் சொல்லியிருக்கும் தமிழின் பிரயோக மெல்லாம் ஆதியாயுள்ள உபநிஷத்துக்கும்கீதைக்கும் மாறாகச் சொன்னது ஒன்று கிடையாதெனினும் உபநிஷத்தையும் கூறுகின்றேன்: அதிலிருந்து நீ சந்தேக மறத் தெளியக்கடவாய்.

உபநிஷத்:—

"நகர்மநப்ரஜயாதநேந, த்யாகேநைகே அம்ருதத்வமாநசு;" என்ற உபநிஷத்தின்படி கர்மத்தினாலாவது, புத்திரோற்பத்திகளினாலாவது, தனங்களைச் சேகரிப்பதினாலாவது, தனக்

கொடையினுலாவது, அந்த ஏகமான பரப்பிரம்ம சுகப்பிராப்தி கிடையாதெனக் கூறியிருக்கின்றது. இன்னும் தேர உப நிஷத்திலும் மேற்கோள் கூறுகின்றேன். அதையும் கவனித்து உணர்வாயாக.

கீதை:—

"யோகஸ்த குருகர்மாணி ஸங்கம் த்யக்த்வா தனஞ்ஜய |
ஸித்த்யஸித்த்யோஸ் ஸமோ பூத்வா ஸமத்வம் யோக உச்யதே"

இதன் பொருள், யோகம் எப்படிச்செய்வதென்றால், பிரவர்த்தித்த கர்மத்தில் லாப லோபங்களைச் சமப்படுத்திச் செய்யும் கர்மாவே யோகமெனப்படும். தவிரவும் உன்போலவே அர்ச்சுனனுக்குச் சந்தேகம் விளைந்து அந்த சந்தேக நிவிர்த்திக்கு அடியில் வருமாறு கூறப்பட்டிருக்கிறது. அதாவது:-

"யம் ஸந்யாஸமிதிப்ராஹுர்யோகந்தம் வித்தி பாண்டவ |
நஹ்யஸந்யஸ்த ஸங்கல்போ யோகீபவதி கச்சன" இதன் தாத்பரியம், எதை நீ ஸந்யாசமென்று உணர்கிறாயோ அதை யோகமென்று உணரக்கடவாய். தவிரவும் சங்கல்பத்தை விடாது ஒருக்காலும் யோகியாகமுடியாது. இன்னும்அநேக உபநிஷத்துகள் இருப்பினும், வாக்குப் பிரயோகங்கள் வேறாயிருக்குமே யொழிய உண்மைத்தத்துவங்கள் வேறாயிருக்காவென நீ பிரதிக்ஞை செய்வாயாக.

குறள்:—

நீட்டலு மழித்தலும் வேண்டாவாம்
உலகம் பழிப்ப தொழித்து விடின்."

ஆதலால் நீ கர்ம சந்நியாசி யோகியாகக்கடவாய்.

கா:— ஸ்வாமி! உபநிஷத்திலும், கீதையிலும்' சொன்ன தாத்பரியங்கள் அறிவுக்குப் பொருத்தமாயும் மிக்க உண்மையாயும் இருக்கின்றன வென்றே நம்புகின்றேன். எனினும் மிக்க சம்ஸ்கிருத பாண்டித்யமுடையவர்களும் ஆசாரிய சிரேஷ்டர்களாயு மிருக்கிற, தற்கால மஹான்கள் இதே சுலோகங்களைப் பிரயோகித்து, ஆசாரங்களை வேறுவிதமாய்

அநுஷ்டித்து வரும்படியான சந்நியாச மார்க்கமுள்ளதாய் வியாக்கியானம் பண்ணித்தாமும் அநுஷ்டித்துப் பிறரையும் அநுஷ்டிக்குமாறு போதித்து வருவதால், அவர்கள் கொள்கைப்படிக்கும் மேற்கூறிய கீதா சுலோகத்தில் வியாக்கியானம் பண்ணும்படியான பதப்பிரயோகங்கள் இருக்கலாமோ என்ற சந்தேகம் அடிமைக்கு யிருப்பதால் அதை நிவிர்த்திக்குமாறு பிரார்த்திக்கின்றேன். தவிரவும் புருஷனுக்குச் சம்பந்தமில்லாததும், பிரகிருதியின் வசத்தாய்ச் செய்யப்படுவதுமான கருமத்தை சந்நியசிப்பதென்றால் எனக்கு அவ்வளவு அழகாய் விளங்கவில்லையாதலால் அதையும் விபரிக்குமாறு பிரார்த்திக்கின்றேன்.

கு:— பெண்ணே! உன் சந்தேகம் யுக்தமானது விபரிக்கவேண்டியது என் கடமையாகும். ஆதலால் நன்கு கவனிப்பாயாக. சுலோகம்:- "யோகஸ்த்தகுருகர்மாணி ஸங்கந்த்யக்த்வா" என்ற பதப்பிரயோகத்தினால் வீட்டையும், பெண்டு பிள்ளைகளையும் துறந்து தனித்துச் சஞ்சரிப்பதே சந்நியாசமெனக்கருதி, அவ்வாறு பண்டிதர்களும் செய்கிறார்கள். அது மிக்க தவறு. ஏனெனில் அந்த சுலோகத்தில் மற்றோர் அடியில் ஸித்தியஸித்த்யோஸ்ஸமோ பூத்வா ஸமத்வம் யோக உச்யதே! என்று முடிந்திருக்கும் பின் வாக்கியத்தை அறியாமல், அவசர புத்தியால் தீர்மானித்தவர்களென்று நீ அறிவாயாக. எப்படியென்றால், யோகஸ்த்த குருகர்மாணி என்ற வாக்கியத்தையும் பின்வாக்கியத்தையும் சேர்த்து அர்த்தம்பண்ணிக்கொண்டு, அப்பால் ஸங்கந்த்யக்த்வா என்ற பதத்தின் பொருளை ஆராயுமிடத்து அதன் உண்மைத்தத்துவம் ஸ்பஷ்டமாய் வெளியாகும். அதைப்பேசுமிடத்து யோகமாகிய கர்மம் எது வென்றால் சங்கத்தையொழித்து சித்தியையும், அசித்தியையும் கோராமலே செய்யும் கர்மா, யோகம் எனக் கூறியதாகும். அது எந்தச் சங்கத்தை யொழிப்பதென அறியவேண்டியது அவசியம் இதில் சித்தி அசித்தி யென்று நோக்கக்கூடிய சங்கம் யா

தென ஆராயுமிடத்து மனம் முதல் ஞானேந்திரியங்களே இந்தவிடத்தில் அசத் சங்கமாகும். ஆதலால் அதைவிடலே யோகமென வற்புறுத்திய சுலோகமென நீ அறியக்கடவாய் இன்னும் கர்ம சந்நியாச மென்ற பதத்தினுலும் தப்பர்த்தம் பண்ண நியாயமுண்டு. ஏனெனில் கர்மத்தைவிடல் என்று பொருள்படுவதினல் சரீர கர்மத்தையொழித்து இருத்தலே யோகமென அர்த்தம் பண்ணலாம். அந்த அர்த்தமும் தப் பேயாகும். ஏனெனில் இந்த இடத்தில் கர்மத்தைப்பற் றிக்கொண்டிருக்கிற வஸ்து எதுவென்றும், பற்றியிருப்பது நியாயந்தானுவென்றும் ஓர் விவேகி விசாரணை செய்தாலொ ழிய சந்நியாசமென்ற சொல்லுக்கு அர்த்தம் அனர்த்த மாகவே விளையும். ஆதலால் பாதாதி கேசமுதலுள்ள இந் தச் சரீரத்தில் வியாபகமாயிருக்கிற நான் என்பவன் யாவன் என்பதை விசாரிக்கவேண்டும். அப்படி விசாரிக்கப்புகுவோ மாயின் இந்தச் சரீரத்தை நான் என்று சொல்லப்பொருந் தாது. ஏனெனில் சரீரம் இறந்திருப்பதைப் பார்க்குங் காலத்தில் அப்போதும் நான் என்று சொல்லும் சக்தி சரீ ரத்திற்கில்லை. இன்னும் ஐம்புலன்களை விசாரிக்குமிடத்து ஷை பிரேதத்திலிடத்தில் ஷை புலன்களிலிருந்தும், அவற் றின் தொழில்களையும் செய்யமுடியவில்லை. ஆதலால் அவற் றையும் நான் என்று சொல்லப்பொருந்தாது. இன்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தையும் விசாரிக்குமிடத்து மனம் பற்றினலன்றி அவை தொழில் செய்ய முடியவில்லையென்று பிரத்தியக்ஷப் பிரமாணத்தில் நாம அனுபவித்து வருவதால் அவையும் நானல்ல. தவிரவும் ஐம்புலன்களை ஞானேந்திரி யங்கள் ஜன்னலாக உபயோகப்படுத்தி வருகின்றன. இன் னும் மனத்தை விசாரிக்குமிடத்து மனப்போக்கு வரத்துள் ளதாய்க் காண்கிறோம். ஏனெனில் ஓர் சமாசாரத்தைக் கேட்டுக்கொண்டிருக்கையில், கேட்டுக்கொண்டிருந்த மனி தன் தன் மனம் வேறு இடத்திற்சென்றுவிட்டதாயும்திரும்ப ஓர் முறை சொல்லவேண்டுமெனக் கேட்பது நம்முடைய பிரத்தியக்ஷ அனுபவத்தில் இருக்கிறது. இந்த இடத்தில் மனம் கேட்ட காலத்தையும் கேளாமல் விட்டகாலத்தையும்

பிரத்தியேகமாயிருந்து கவனிக்கும் புருஷன் வேறாயிருத்தலால் மனத்தையும் நான் என்று சொல்லப்பொருந்தாது. தவிரவும் பிரத்தியேகமாய்க் கவனித்த எந்தப் புருஷனோ அவனே நீயென்று சாங்கியத்தில் வியக்தமாய் அறிந்துகொண்ட உனக்குப் பந்தமாவது, முக்தியாவது கிடையாது. பிரகிருதியின் தருமத்தை தான் செய்வதாகக் கர்த்திருத்துவம் வகிக்கும் மனத்தை விடுவதே மோக்ஷமாதலால் சந்நியாசமென்ற அர்த்தத்தில் மனதைக்கர்மத்தில் செல்லவிடாது. ஆத்மாவில் லயப்படுத்தலென்று அர்த்தம் பண்ணவேண்டும். இதுவேதான் கீதையின் தாத்பரியம். மற்றப்படிக்குச்செய்யும் அர்த்தம் தவறென்று சத்தியமாய்க் கூறத்தகும். ஆதலால் நீயும் சரீர தர்மமாகிய கர்மத்தில் மனம் செல்லவிடாது. சாக்ஷியாய் நின்று எத்தொழில்களையும் செய்யக்கடவை. அப்படிச்செய்யில் உன்னைக் கர்மங்கள் பந்திக்கா.

'இருள்சேரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார்மாட்டு.' என்ற குறள் வசனத்தையும் அறிவாயாக.

கா:— சுவாமி! தங்கள் வியாக்யானத்தால் சந்தேகமறத்தெளிந்துகொண்டேன். இதுவரை கூறிய யோகங்கள் ஜீவன் முக்தர்கள் நடையாயிருக்கிறதே யொழிய தத்வம் பூரணமாய் அனுபவியாதவர்களுக்கு உரியவை யல்லவென்று நான் சந்தேகிப்பதாலும், அப்பியாசிகளுக்கு இந்த யோகங்கள் பொருத்தமா என்ற சங்கை எனக்கு உதிக்கிறபடியாலும் ஏற்கனவே இந்தக் கர்ம சந்நியாசத்தில் மூன்று தியாகங்கள் அடங்கியிருப்பதாய்க் கூறியிருப்பதை இன்னும்ஸ்பஷ்டமாய் விரித்துக்கூறும்படிக்கும் பிரார்த்திக்கின்றேன்.

கு:— பெண்ணே! உனக்கு விளைந்த சந்தேகம் நியாயமே. சமாதானம் சொல்லுகிறேன். சாவதான மனத்துடன் கேட்பாயாக. உண்மை உணராத ஒருவனுக்கே பொய்யாகிய கர்மத்தில் சிரத்தை ஏற்படும். ஆதலால் உண்மை உணர்ந்த

வன் ஞானியே. எதுபோலென்றால் சொப்பனங்கண்டுவிழித்தவன் ஜாக்கிரத்தில் சொப்பனத்தின் கூற்றை அறிவின் வழியால் பொய்யென்று தள்ளுதல்போல் சாங்கியத்தால் தன்னை யுணர்ந்த ஞானி, முள்ளில் போட்ட வேஷ்டியை முள்ளை யுதறித்து வேஷ்டியை எடுத்தல்போலப் பிரபஞ்சமாகிய முள்ளில் சங்கல்பத்தோடுங்கூடின சத்துவ சொரூபமாகிய வேஷ்டியைக் கழற்றி நிற்கவேண்டிய கர்மம், ஞானத்தின் அப்பியாசமேயொழிய, கர்மத்தின் அப்பியாசமில்லையென்றும் காண்பாய். இதை மற்றோர் திருஷ்டாந்தத்தால் கூறுவோம். தற்காலத்தில் "லா" காலேஜில் படித்து வக்கீல் வேலைக்கு 'பாஸ்' பண்ணின ஒருவன் வக்கீல் தொழிலுக்கு புதிதாயிருப்பினும் வக்கீல் நடையை 'கோர்ட்' டில் அப்பியசிப்பது தர்மம்போல பூரணதத்துவத்தை யுணர்ந்த ஞானியும் ஜீவன் முக்தர்கள் நடையையே அப்பியசிப்பது தர்மமாதலால் இந்த யோகங்கள் சொல்லத்தகுந்ததும் அப்பியசிக்கத்தகுந்தவை யென்றும் நீ சங்கையறத்தெளியக்கடவை. இனி மற்றொரு கேள்வியாகிய தியாகத்தைப்பற்றிச் சமாதானம் சொல்வதைக் கேட்பாயாக.

## 1. பலத்தியாகம்.

தியாகம் மூன்றில் பலத்தியாகத்தைப்பற்றி உனக்கு முதன்மையாய்த்தெரிவிக்கிறேன். தவிரவும் சாங்கிய யோகி ஒருவனுக்கே தான் இந்த மூன்று தியாகத்தையும் அப்பியசிப்பது தர்மமாகுமென்பதை நீ மறவாதிருக்கக்கடவை. எற்கனவே கர்மங்கள் தன் சுவாதீனமில்லாமலே பிரகிருதி சம்பந்தத்தால் செய்யப்படுகின்றன வென்று நன்குணர்ந்தவனாதலால் பூர்வம்கர்த்திருத்வவாசனையை ஒழிப்பதின்பொருட்டு மூன்று விதமான தியாகத்தில் இந்தப் பலத்தியாகத்தை அனுஷ்டானத்திற்குக்கொண்டுவரவேண்டும். அது எப்படியென்றால் எந்தக்கர்மம் செய்ய நேரினும் அதன் லாபலோபத்தைத்தனக்குச்சம்பந்தமன்னில் பகவத்அர்ப்பணஞ்செய்வது பலத்தியாகம் என்று சொல்லப்படும். இப்படி அப்பியசித்து இது சகஜத்திற்கு வந்த பின்னர் கர்மத்தியாகத்தை

அநுஷ்டிக்கவேண்டும். இதற்கோர் திருஷ்டாந்தத்தால் உனக்கு நிரூபிப்போம். அதாவது மனிதர்கள் ஆகாரம் உட்கொள்வதைத் தவிர அதில் விளையும் பயனாகிய ஜீரண சக்திக்கும், மலம்-ஜலம்-இரத்தம் இந்த மூன்றையும் பிரித்துச்செய்யவேண்டிய ஜோலிக்கும் தான் கர்த்தாவாயிருத்தல் கிடையாது. அங்ஙனம்போலக் கர்மத்தைச் செய்யுங் கடமையைத் தவிர மனிதன் பலனுக்கு ஜவாப்தாரி யில்லையாதலால் இவ்விதம் பலத்தியாகத்தைச் செய்து பழகல் வேண்டும்.

## 2. கர்மத்தியாகம்.

மேற்சொன்ன பலத்தியாகத்தை யனுஷ்டித்த பின்னர் இந்தக் கர்மத்தியாகத்தை அநுஷ்டிக்கவேண்டும். இதை எப்படி அநுஷ்டிப்பதென்றால் பிரகிருதியின் பிரேரணையால் இந்தக்கர்மம் நடைபெறுகிறதென்று தீர்மானித்த திடபுத்தியோடும் கூடினவனாய் நமது கடமையும் அல்லவென்று கர்மத்திற்கு விலக்ஷணனாய் நின்று சாக்ஷியாயிருக்கவேண்டும். இதற்கு ஓர் திருஷ்டாந்தம் கூறுவோம். ஓர் பட்டணத்தில் தென்வடலோடிய தெருவில் அல்லது வீதியில் ஒரு மனிதன் நீடித்த நாளாய்த் தனது கிரஹத்தில் வசித்துவந்தான். அப்படி யிருக்குங்காலத்தில் ஷை கிரஹம் ஆலயத்திற்குப் பாத்தியப்பட்ட சொத்து என்று 50 வருஷத்திற்குப் பின்னர் தேவஸ்தானத்தார் வழக்குச்செய்து குடியிருந்த மனிதனை அப்புறப்படுத்தி ஒப்படைப்பு செய்துகொண்டார்கள். வீடு தனது என்று பாவித்தவனும் நீடித்தகாலம் குடியிருந்தவனுமான அநுபோகபாத்தியமுடையவன் அன்றை வீட்டுக்குச் சாமான்களை அப்புறப்படுத்திக்கொண்டு துக்கத்துடன்சென்றான். இந்த ஸ்திதியில் இருக்கிற மனிதன் தன் ஜோலியின் நிமித்தம் வெளியேறித் திரும்புங்கால் சரீர வாசனாபலத்தினால் யதாப்பிரகாரம் முன்னிருந்த வீட்டினுள்ளேயே பிரவேசித்து, தன்னுடைய மறதிக்கு நிந்தித்துக் கொண்டு தற்காலம் வசிக்கும் மனைக்குத்திரும்பச்செல்லுவான். அங்ஙனம்போல, சரீரம் பிரகிருதிக்குச் சொந்தமென்றும், அத

ஞல் நடைபெறுகிறதென்றும் நிர்மாணித்து, உணர்ந்த ஞானி யன்னது என்று பாவித்த வாசனையால் வரும் மறதியைக் கெடுக்கும் அப்பியாசமே கர்மத்தியாகம் என்று நீ தெளியக்கடவை. தவிரவும் இந்தத் திருஷ்டாந்தத்தால் பிரகிருதி சம்பந்தங்களே தேவதாம்சமானதாலும் அதற்குப் பாத்தியப்பட்ட ஆலயமே சரீரமாதலாலும் அதை என்னது என்று பாவித்த அக்ஞானத்தை நீக்கியது ஞானம் என்றும் தெளிவுறக்காண்பாய். இனி:—

## 3. மனோதியாகம்.

மேற்படி கர்மத்தியாகத்தை அநுஷ்டித்த பின்னர், மேற்சொன்ன இரண்டு தியாகத்தை அநுஷ்டிப்பது என்ற சங்கல்பமாகிய மனோதியாகத்தைச் செய்யவேண்டும். இது எப்படிச் செய்வதென்றால் தற்காலத்தில் இங்கிலீஷ் அரசர் இந்தியாவிற்கும் சக்கிரவர்த்தியே அவ்வரசனுக்குயாதொரு ரோஷமும், பலனும் கிடையாது. அரசுரிமைவகிப்பது 'பார்லிமெண்டு' நாட்டை மாகாணங்களாய்ப் பிரித்திருக்கின்றனர் எல்லா மாகாணங்களுக்கும் சேர்த்து இந்தியா 'செக்ரட்டரி' என்று ஒருவர் அவரின் கீழ் 'கவர்னர் ஜெனரல்'. அவரின்கீழ் மாகாணத்துக்கு ஒரு கவர்னர்' அப்பால் ஜில்லாவிற்கு ஓர் 'கலெக்டர்' இவ்வாறு அரசாங்கம் நடைபெற்றுவருகின்றது. இதில் அரசனுடைய ஆக்ஞை யாகவே எல்லாக்கர்மங்களும் நடைபெற்று வரினும் மேற்படி அரசன்கர்மங்களைச் செய்தவனுமல்ல, செய்யாதவனுமல்ல. இதில் அரசன் சாக்ஷி மாத்திரமாய் இருக்கின்றான். இத்தன்மைபோல, நமது அங்க தேசத்தில் அரசுரிமை வகித்துப் பிரகிருதியைக் கொண்டு எல்லாக் கர்மங்களையுஞ் செய்து, தான் செய்யாதவனாக இருக்கின்ற ஆத்மா நீ என்று உணர்ந்தபடி மனத்தையும் தியாகஞ்செய்ய வேண்டும். இதுவே மனோதியாகமென்று கூறப்படும். இனி உனக்குண்டாகும் சங்கைகளை நிவிர்த்திக்கத் தயாராக இருக்கின்றேன். சந்தேகமிருப்பின் கேட்கக்கடவாய்.

கா:— சுவாமி! தங்கள் இனிய வசனங்களால் எல்லா யோகங்களையும் ஸ்பஷ்டமாய் நன்குணர்ந்தேன். எனினும் லோகோபகாரமாய் அநேக கேள்விகள் இந்த இடத்தில் நான்கேட்க வேண்டியதவசியமாயிருத்தலால், அதையும் கிருபை கூர்ந்து அருளுமாறு பிரார்த்திக்கின்றேன். அதாவது தற்காலத்தின் சந்நியாசம் இந்த கீதைக்கு மாறுபாடுள்ளதெனத் தீர்மானித்த இடத்தும், ஷை சந்நியாசம் ஆத்ம லாபத்தை அநுசரித்ததுதானா என்றும் அது எந்தப்பக்குவத்தில் அடையக்கூடியதென்றும் விவரிக்குமாறு வேண்டுகின்றேன். இன்னும் தங்கள் வாசாவல் ஞானப்பியாசமென்றும், கர்மாப்பியாசமென்றும் இரண்டுள்ளதென அறிகிறேன். அதில் ஞானப்பியாசத்தைத் தெரிந்துகொண்டேனெனினும் கர்மாப்பியாசம் இன்னதெனக் கேட்கத் திருப்தியடைகிறேன் ஷை கர்மாப்பியாசத்தின் ஆரம்பமும் முடிவும் தெரிய விரும்புகின்றேன். இதுவுந் தவிரத் தியாகத்தைப்பற்றிப் பேசிய இடத்தில் ஞானிகளுக்குச் சுதர்மகர்மா வென்று கூறினீர்கள். ஷை சுதர்மம் என்றது ஜாதி அல்லது குலத்தை அநுசரித்ததாயிருக்க, மாறுய்ச்சொன்ன விஷயத்தில் கிஞ்சித்து அடிமைக்குச் சந்தேகம் ஜனிக்கின்றது. ஏனென்றால் இது கீதையை அநுசரித்ததென்றே சந்நிதானத்தின் வாயிலாய்க் கேட்டு நான் ஆநந்திக்கிறேன். அது அங்ஙனமாயின் அர்ச்சுனனோ க்ஷத்திரியன்; நானோ பெண்பால், அதிலும் தாசி. மேலும் குல தர்மத்தை ஆசரித்து நடக்க வேண்டுமென்று அந்தக் கீதையில் நான் படித்துமிருக்கிறேன். ஆதலால் ஸ்வதர்மம், குலதர்மம்-இந்த வாக்குப் பிரயோகங்களை எனக்குச் சங்கையற விரித்துணர்த்துமாறு பிரார்த்திக்கின்றேன்.

கு:— பெண்ணே! உன் கேள்வி உண்மையாய் லோகோபகாரார்த்தமாய்த் தான் என்றதை நான் அறிந்து கொண்டே உன்னை வியாஜமாய் வைத்துச் சமாதானங் கூறுகின்றோம். என்றாலும், நீயும் அறியவேண்டிய விஷயமே யாதலின் மிக்க சிரத்தையோடு கவனிப்பாயாக. துறவு என்பது இரு

விருதமாய் வழங்கி வருகின்றது. அதாவது சாங்கியத் துறவு என்றும் கர்மத்துறவு என்றும் ஆன்றோர் கூறியுள்ளார். இதில் நான் இருவகை சொன்னதும் கேட்டு வந்த உன் ஆச்சிரமமும் சாங்கியத்துறவு என்று கூறப்படும். நீ சந்தேகித்துக்கேட்ட சந்நியாசமானது கர்மத்துறவு என்று நீ அறியக் கடவாய். அத்துறவும் சாங்கியத் துறவாகிய லிங்கத்திற்கு அடிப்பீடம் போல இருக்கிற படியாலும், ஜீவர்களின் பக்குவ விசேஷத்தைப் பொறுத்திருப்பதாலும் அதுவும் ஆத்மஞானத்தின் பொருட்டே ஏற்பட்ட கர்ம சாதன சதுஷ்டயமென்று நீ அறிந்துகொள்ளக் கடவை. உன் அடுத்த கேள்விக்குச் சமாதானம்:- கர்மாப்பியாசம் நான்கு சாதனங்களையுடைய தென நூல்கள் முறையிடினும், தற்காலத்தில் சமஷ்டி உலகப்பக்குவத்தால் எட்டுச் சாதனங்களை அதனியற்கையிலே அமைத்துக் கொண்டிருக்கிறது. அதன் ஆரம்பம் கர்மேந்திரியங்கள் தொட்டு, சங்கல்ப வடிவமாகிய மனம் ஈறிக்கும் பிரயத்தன பரியந்தம் அளாவியிருக்கிறதென நீ அறியவேண்டும். ஸ்வதர்ம விவரத்தைப்பற்றி இனிக்கூறுவோம். ஞானமாகிய கண்ணாடியில் பிரதிபலிக்கும் உலகத்திற்கு ஸ்வதர்மமென்னும் சப்தம் பொருந்தாது. தோன்றி மறையும் நாம ரூபத்திற்குச் சுதர்மமெனும் வழக்குக் கிடையாது. சாசுவதமாயுள்ள சத்தியத்தின் செயலே ஸ்வதர்மமென அறிவுடையோர் கூறுவர். நீ அவ்வாறு தெளிவது உன் கடமையாகும். கீதையில் அர்ச்சுனன் க்ஷத்திரிய ஜாதியாயிருப்பினும், நாம ரூபத்தையும், ஜாதியையும் நீக்கிச் சத்தியமாயுள்ள அவனது ஆத்மாவின் ஸ்வதர்மத்தைக் கூறியதே யன்றி ஜாதிக்கு ஸ்வதர்மமெனக் கூறியதல்ல. இதன் தத்துவம் உனக்கு விரித்துக் கூறுமிடத்து குலம், ஜாதி முதலிய எல்லா தர்மங்களும் சந்தேகமற உணர்வாயாதலால் அதை உனக்கு விரித்துக்கூறுவோம். நீயும் ஆலசிய மின்றிக் கேட்பாயாக. அதாவது பிரம்மத்தினிடத்து உலகம் தோன்றியது போல பிரம்ம ஞானிகளிடத்தில் நான்கு ஜாதிகள் தோன்றலாயின. [illegible] சமய சிருஷ்டியில்

ஜாதி இரண்டும், அப்பால் உலகத்திலுள்ள விவேகிகள் ஜீவ கோடிகளைப் பக்குவம் பார்த்து ஆத்ம ஞானத்தின் ஆசாரணையில் நான்கு ஜாதிகளாய்ப்பிரித்து அந்தந்தஜாதிக்கேற்ற கர்மாக்களைச் செய்துய்யுமாறு, வற்படுத்திய பதத்தின்படி பிடித்த காலமாம் ஜாதி என்ற பிரிவினையால் அது வழங்கி வருகிறது. ஆதலால் சுக்கில சுரோணித சம்மந்தத்தால் பிறந்த நார்களில் ஜாதி வேற்றுமை கிடையாது. ஆனால் ஒவ்வொரு ஜீவனிலும் நான்கு ஜாதிகளுண்டு. அதாவது கர்மேந்திரியங்களே சூத்திர ஜாதி, ஞானேந்திரியங்களே வைசிய ஜாதி; மனோந்திரியமே க்ஷத்திரிய ஜாதி, ஆத்ம-அநாத்ம விவேகமே பிராம்மண ஜாதி என்று நீ நிர்மானிக்கக் கடவை. இன்னும் சரீரம் பஞ்சம ஜாதி. இதற்கு வள்ளலார் அடியில்வருமாறு கூறுகின்றனர். 'பறையர் என்பதும் பண்டிதர் என்பதும், மறைபுயிந்த மலின உடலையே' என்றபடியே நீ பெண்ணாயிருந்தாலும், தாசியாயிருந்தாலும், அதிலும் சிறந்த பாபியாயிருந்தாலும், ஆத்ம ஞானமென்னும் ஓடத்திலேறிய உனக்கு ஜாதி பேதங்களால் உன்னைப் பந்திக்க முடியாதென்று நான் பிரதிக்ஞை செய்வேன். தவிரவும் உலகத்தில் பெண்பால் வர்க்கத்தில், அறிவுடையோர் மாட்டு, இரண்டு ஜாதிகளென வழங்கி வருகின்றது. ஆண்பால்களிலும் அவ்வாறு இரண்டு ஜாதி. அது என்னவெனில் பெண்களில் தாசி என்றும், வேசிஎன்றும் ஜாதியால் அழைக்கப்படும். இவ்விரண்டில் தாசி என்னும் ஜாதிகளில் இரண்டு விதம். இந்த இரண்டு விதத்தை முன்னுடிப்பேசுவோம். பிரகிருதியில் பிறந்த ஆண் பெண்களில் தமோ குண விசேஷத்தால் வியாபித்து பிறப்பது பெண்ணாதலால், அப்பெண்களுக்குத் தன் சுவாதீனத்தில் ப்ரம்மத்தை அடையும் சக்தி இல்லையென அறிந்த மேலோர் விக்ரஹ ஆராதனையை நிக்கித் தன் கணவனைத் தெய்வமாகப் பாவித்துப் பூஜித்துவரவேண்டுமென்றும் வைத்து, கர்மகாண்டமென்னும் வேதப்படி பதிவிரதா என்ற நாமம் சூட்டியிருப்பினும் அந்தப்பதியின் வாம்பிற்கு உட்பட்டுப் பணிவிடை செய்யும் தர்மத்

தால் தாசி என்று கூறத்தகும். இனி மற்றோர் தாசி யாவெ ரில் சென்று ஜென்மாந்தரங்களில் காம இச்சையால் மோகித்து ஆலயங்களுக்குப் பாத நாட்டியங்களால் திருப்தி பண்ணி வைக்கக் கருதி முடிவு பெறாமல் ஜன்மம் எடுத்து ஆலயத்தில் பிரதிஷ்டித்திருக்கும் விக்ரஹத்திற்குத் திரிகரண சுத்தியோடு தன்னை மனைவியாய் ஒப்புவித்து, அஷ்டாங்க போகத்தில் ஒன்றாகிய பாதத்தை அப்யாசித்துத் தன் சரீ போகத்திற்கு புறத்துறவு பூண்ட சந்நியாசிகளுக்கு மனைவி யாயிருந்து தொண்டு புரிந்து வாழும் பெண்களுக்கும் தாசி என்று கூறத்தகும். இதையன்றி காம அபேக்ஷையால் தனப்பிராப்தியைக் கருதித் தன் சரீரத்தை ஓர் சரக்கையாய்க் கருதி தனம் கொடுத்தவர்களுக்கு ஓர் இரவு முழுதும் தன் சரீரமாகிய சரக்கையைப் போக்கியத்திற்கு விடுதலென்னும் தர்மத்தையுடையவர்கள் ஜாதி, வேசி என்று ஆன்றோர் கூறுவர். இந்த இடத்தில் எது எப்படியிருப்பினும், கவ னிக்கத்தக்கதல்லவெனக் காட்டும் ஓர் திருத்தாண்டவம் அடியில் வருமாறு கூறுகின்றது:— தாண்டவம் "சங்க நிதி பதுமநிதி இரண்டுந் தந்து-தரணியொடு வானாளத்தரு வரேனும், மங்குவாரவர் செல்வம் மதிப்போமல்லோம்-மாதே வர்க்கே காந்தரல்லராகில், அங்கமெலாங் குறைந்தழுகு தொழு நோயராகி-ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும், கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்-அவர் கண்டீர் யாம் வணங்குங் கடவுளாரே." என்னும் குறள்:—

'இளையரின முறையரென்றி கழார் நின்ற
ஒளியோ டொழுகப்படும்.'

இந்த இரண்டு மேற்கோளாலும் ஜாதி முறை கர்மம் இவை கள் ஞானத்திற்குச் சம்பந்தமில்லை எனக் கூறியிருக்கின்றது இன்னும் கைவல்ய உபநிஷத்தில் கூறியதையும் கேட்க கைவல்யம்:— "போகமாருயிர் கண்டதை உண்பதும் புணர்வதும் இயல்பே காண்-ஆசமங்களும் சுபாவத்தை விதிக்குமோ அந்தனை தெரியாதோ-காகமே கருத்திடு வேட்டை, சாந்திடு நெருப்பே நடு-வேதவாயுவே அசை

யென ஒருவரும் விரித்திடல் வேண்டாவே." இதனாலும் பிரகிருதி சம்பந்தமான தர்மத்திற்கு ஞானியான ஓர் புருடன் பாத்தியப்பட்டவனல்லவென்று வியக்தமாய்க்கூறிற்று ஆதலால் இப்பிரமாணங்களால் சங்கையறத் தெளியக்கடவாய்.

கா:— சந்நிதானத்தில் என் சங்கையறத் தெளியுமாறு போதித்தவைகள் எனக்கு அத்யந்தம் ருசிகரமாயிருக்கின்றன. எனினும் மற்றேனையோர்கள் குல தர்மத்தை அனுசரித்து நடக்கவேண்டுமென்று கீதையில் கூறியிருப்பதால், மேற்கூறிய சமாதானங்களிலிருந்து உலகம் திருப்தியடையாதென நான் கருதுவதால், குலதர்மத்தைப்பற்றி விவரமான தத்துவம் கூறுமாறு பிரார்த்திக்கின்றேன்.

கு:— பெண்ணே! குல தர்மத்தைப்பற்றி விரித்துக் கூறுவோம் நீ சிரத்தா பக்தியுடன் கேட்பாயாக. ஒரு ஜீவனுக்குக் குல தர்மம் இரண்டு. அது என்னவெனில் சரீர தர்மமும், மனோ தர்மமுமாகும். இதில் முன் சொல்லிய சரீர தர்மமாவது, மனோ தர்மத்திற்கு வேறுபாடுள்ளதாகும். சரீர தர்மத்தில் குலதர்மம் இருவகைப்படும். அதில் ஒன்று நித்திய நைமித்திக கர்மம்:— அது மல ஜலம் விசர்ஜித்தல், குளித்தல், புஜித்தல், நடத்தல், பேசுதல், பார்த்தல் இவைகளே. சரீர குலதர்மமானது வாத பித்த சிலேஷ்மத்தை அனுசரித்து சரீரபோக போக்கியங்களை அனுபவித்தலாகும். இவ்விரண்டு தர்மத்தில் சரீர குல தர்மமாத்திரம் ஒவ்வொரு ஜீவர்களுக்கும் வேறு பாடுள்ளதாயிருக்கும். இனி மனத்தின் குல தர்மத்தைப்பற்றிப் பேசுவோம். அதாவது சத்வ, ரஜஸ், தமோ குணங்கள் என்றே மூன்றில் எந்தக் குணம் அதிக்கிரமித்து நிற்கிறதோ அந்த ஆசாரத்தை அனுஷ்டிக்கும். ஆதலால் குலதர்மமென்பதை இன்னுமநேக விஷயங்கள் இந்தவிடத்தில் சொல்லமுடியாதவைகளாயும் கேட்கக் காலம் போதாததாயும் இருக்கின்றன. என்றாலும், பூர்வ பிராரப்த வினையை அனுசரித்து சரீர கர்மம் நடை

பெறுவதென்று சித்தாந்தித்திருப்பதால் அதை மாற்றுகிற தற்கு யாவராலும் முடியாதெனத் நிர்மாணித்தும் அவ்வாறு உணர்ந்து மிருப்பதால் பிரகிருதியின் சுபாவமே சரீரத்தின் குலதர்மமென்று நிச்சயமாய் நிர்மாணிக்கக் கடவை. ஆனால் மனத்தின் குலதர்மத்தை மாற்றும் பிரயத்தனம் புருஷனுக்கு இருப்பதாலும், அப்படி அனுபவிக்கும் ஓர் புருஷன் ஞானியென்று கூறப்படுதலாலும், அந்த ஞானிக்குத் நிர்மாணித்த ஓர் குலதர்மத்தைச் சரீரத்திற்குச் சூட்டுதல் பொருந்தாது. இதற்கு மேற்கோள் கைவல்யம்.

"பேத கர்மத்தால் வந்த பிராரப்தம் நானாவாகும் ஆகலால் விவகாரங்களவரவர்க்கானவாகும் மாதவஞ்செய்வினுஞ் செய்வர் வாணிபஞ்செய்யினும் செய்வர் பூதலம் புரப்பர் ஐயம் புகுந்துண்பர் ஜீவன் முக்தர்"

பேத கர்மத்தால் வந்த பிராரப்தம் நானாவிதமாகும். ஆதலால் விவகாரங்கள் அவரவருக்கு ஆனவையாகும். தவிரவும் மேலே சொன்ன சமாதானங்கள் லோகப் பழக்கத்துக்கும் சாஸ்திரத்துக்கும் விருத்தமாயிருப்பினும், அதைக் கவனித்துக் கௌரவப்படுத்தவேண்டிய கடமை உனக்கும் நமக்கும் இந்த இடத்தில் அவசியமில்லை என்பதைப் பொறுத்துச் சாஸ்திரத்திலுள்ள சட்டத்தையே பிரயோகித்து நான் சொல்லத் தயாராக இருக்கின்றேன். அதன் மூலம் உலகம் திருப்தியடையக் காரணமுண்டென்று நீ உத்தேசித்த லோகோபகார சிந்தனைக்குச் சமாதானஞ் செய்து கொள்வாயாக. அதாவது வேதாந்தக் கிரந்தங்கள் எல்லாம் வாசனைகள் மூன்று என்றும் அவற்றை ஒழித்தலே போகமென்றும் இடையறாது கூறும். அவையென்னவெனில் லோகவாசனை, சாஸ்திர வாசனை, தேகவாசனை சொல்லப்பட்ட இந்த மூன்று வாசனைகளை மேல்பிரஸ்தாபித்த உலக அர்த்தங்களையும், சாஸ்திரார்த்தங்களையும் அடக்கிக்கொண்டிருக்கிறது எனக்கொள்க. அதெப்படியெனில், தேகம் நீடித்த காலமாய் எதை அனுசரித்துப் பழகி வருகின்றதோ அந்தப் பழக்கமே தேகத்திற்குக் குலதர்மமாயும், சுதர்ம

மாயும் ஆகிறது. லோக வாசனையில் சத்தியமோ, அசத்தியமோ, தெரிந்தோ, தெரியாமலோ, உலகத்தில் பெரும்பான்மையோர்களால் அனுசரித்து நடக்கும் நடபடிக்கையைத் தழுவும் வாசனை லோக வாசனையாகும். அது வைமத்திய. உலக குலதர்மமும் சுதர்மமும் ஆகும். சாஸ்திர வாசனை என்பதோ சாஸ்திரத்தைச் சரியாயோ, தப்பாயோ அர்த்தம் பண்ணி வியவகரிக்கும் தர்மம்-சாஸ்திரத்தின் குலதர்மம் அல்லது சுதர்மம் என்று கூறுந்தகும். இப்பேர்ப்பட்ட நானாவித பேத சஞ்சாரமான குலதர்மம், சுதர்மம் என்னும் இடத்தை நான் வியவகரிப்பதன் மூலமாய்த் திருப்தி அடையாவிட்டாலும், எந்த சாஸ்திரம் இந்த மூன்று வாசனைகளையும் ஒழிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறதோ அந்தப் பாகத்தில் நம்பிக்கை வைத்து நீயோ அல்லது உலகமோ ஒழித்தலே தர்மமாகும். ஆதலால் இனி உனக்கு வினையும் சந்தேகம் ஏதாவது இருப்பின் நீ தாராளமாய்க் கேட்டுத் திருப்தியடையக் கடவாய்.

கா:— ஸ்வாமி! தங்கள் பிரதிபுத்தரத்தின் போக்கை நான் ஆராயுமிடத்து, நான் எந்த விஷயத்தை நினைத்து எனக்காகவோ லோகத்திற்காகவோ கேட்டேனோ அதைத்தெரிந்துகொண்டும் அதைப் பச்சையாய் எடுத்துச்சொல்லி இந்தச் சமாதானங்களைச் சொல்லாமல், குறிப்பால் உணர்த்தி அதிலும் ஓர் குற்றத்தை வைத்து அநாகரிகமென்று சொல்லாமலே கண்டித்து, இவ்வாறு போதிக்கும் இந்த உத்தமவிருத்திக்கு எதை உபமானமாய்ச் சொல்லி நான் நன்றி பாராட்டும் மதிப்பை அடைந்தவனாவேன்! இந்த இடத்தில் திருவள்ளுவ நாயனாரின் திருவாக்கியம்:—

'தனக்குவமை யில்லாதான் றாள் சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றலரிது.'

என்றது சத்தியமாய் விளங்குகிறது. ஆயினும் கர்மபரித்தியாகம் செய்த புருஷோத்தமன் கேவலம் சொல் என்னும் கர்மாக்களிலுங்கூட, அற்ப கவுதியோடும் வெப்பந்தவிப வேண்டிய ஒருவனுக்கு வாயால் ஊதுங்காற்றுப் போலுமே

தான் இருப்பதாக நினைக்கிறேன். எவ்வளவு விரித்துக் கூறும் காருண்யம் இவ்விடத்திருப்பதாக நான் சத்தியமாய்க் காணினும், அடக்கம் என்னும் லோபத்தன்மை அற்ப மர்மமென்னும் 'மஸ்லின்' துணியால் மறைத்துச் சொல்லுவதாகவே காணப்படுகிறது. ஆயினும் என் அளவிற்கு இது மிதமிஞ்சின வியக்தமென்றே ஆநந்தமாய் அநுபவிக்கின்றேனாயினும், இன்னும் கிஞ்சித் சிரமம் கொடுக்கவேண்டியவனாயிருக்கிறேன். அதிதன்மைவெளியில், இந்த இடம் கீதையின் சம்பந்தத்தில் விநோதமேயன்றி யாதலால், இந்த இடத்தில் கீதையிலேயே மேற்கோள் எடுத்து உபதேசித்தால் ஜகத்தில் அவிவேகிகள் தவிர மற்றையோர்கள் மிக்காம்மியமாய் உட்கொண்டு, மேலே சொன்ன மூன்று வாசனையையும் ஒழித்து, மிக்க சிரேயஸ்கரமான சமஷ்டி ஞானம் பெறுவதற்கு ஹேதுகாமுண்டென்று நான் நினைக்கின்றேன் அப்பால் சந்நிதானத்தின் சித்தம்.

கு:— பக்தியிற் பிறந்த பாவாய்! நீ கண்டு வியப்படையும் லோபத்தனம் வாஸ்தவமே. ஏனெனில் கர்மத்தைச் சந்நியசித்த ஒருவனுக்கு வாக்குப்பிரயோகமான சொல் தனிப் பிரகிருதியின் சம்பந்தத்தால் ஏற்படுவதால் வாக்குத்தாட்டியைத் தவிர சொல்லின் எடை குறைந்தேதான் காணும் இதற்கு நாம் இருவரும் ஜவாப்தாரியல்ல. இந்தக்குணம் உன்னிடத்திலும் உள்ளதே. அதை நீ முன்னால் விசாரிக்காமலே என்னைக் கட்டிறுப் போனும். அது எங்ஙனமெனில் நீ எதை நினைத்துக் கேட்டதாக ஒப்புக்கொண்டு இந்த இடத்தில் இந்த உத்தரப்பிரதி யுத்தரம் நடத்தி வருகின்றனையோ, அதை நீயும் பச்சையாய்க் கேளாமல் அதை என்னைக் குறிப்பாலறியவிட்டது உனக்கு எந்தத் தர்மமோ, அதைப் பரஸ்பரம் லோபஞ் சூழ்ந்த மர்மம் என அறியாமலிருப்பின், எனக்கு மிகுந்த வியப்பே! இதில் அறியவேண்டிய விஷயம் ஒன்று உளது. கர்மத்தை நீக்கிய ஓர் யோகி உபதேசம் என்னும் கர்மாவிலுங்கூட, நீ சொன்ன 'மஸ்லின்' துணியை ஒத்த சொல்லால் மறைத்து அந்தத் திரையை

யாகிறும் புத்தியால் நீக்கி, உண்மையைத் தரிசிக்கும் யோக்கியதை யில்லாத எந்த ஜகத்தும் இந்தயோக நிஷ்டைக்கும் பாத்திரமல்ல வென்பதைப் பன்முறை சொல்லி யிருப்பதோடு, இந்த இடத்திலும் வற்புறுத்துகிறேன். சொல் என்னும் கர்மாவில் மூடியிருக்கிற அந்த அற்பத்திரையையும் அவிழ்த்து நிர்வாணமாய்க் கொடுத்தால், வாங்குகிறவன் புத்திக்கு ஜோதியில்லாமல் துப்பென்னும் தாமதத்தால் ஆவரித்துக்கொண்டு தமோகுணமென்னும் வியாமோகத்தால் மூடப்பட்டவனாகி, சங்கல்ப லோகத்தில் அழுந்தி இறப்பனே அல்லால் அதி சூக்ஷ்மமான பிரம்ம தத்துவத்தில் யூக்கியயாகா னென்ற காருண்யம் பற்றியே, இந்த லோபத்தனம் இன்றியமையாத சாதனமென்றும் நீ காணக்கடவாய். இனி உன் இஷ்டப்படி கீதையின் மேற்கோளால் விளக்குவதையும் கேள். கீதை:—

1. தேஹிநோஸ்மின்யதா தேஹே கௌமாரம்யௌவனம் ஜரா!
தததா தேஹாந்தரப் ப்ராப்திர் தீரஸ் தத்ரநமுஹ்யதி!!

2. அவ்யக்தா தீனி பூதானிவ்யக்த மத்யானிபாரத!
அவ்யக்த நிதனான்யேவ தத்ரகாபரிவேதனா!!

3. வாஸாம்ஸி ஜீர்ணானியதா விஹாய நவானி க்ருஹ்ணாதி நரோபராணி,
ததா சரீராணி விஹாயஜீர்ணாநி அந்யானி ஸம்யாதி நவானி தேகி!

இதில் கூறிய முதல் சுலோகத்தின் தாத்பரியம் என்னவெனில்;— இந்தத் தேகமானது பால்யம், யௌவனம், கௌமாரம், விருத்தாப்பியம் என்ற நான்கு அவஸ்தைகளால் மாறுதலடைவது அதன் இயற்கை தர்மமென்றும், தேஹ அந்திய காலத்திலும் மற்றொரு சரீரத்தைப் பிடித்தே தீரும் என்றும், அதற்குத் தீரனாயுள்ள ஓர் புருஷன் துக்கிக்க அருகனல்லன் என்றும் கண்டித்திருக்கிறார். ஆதலால் இதுவே சரீரத்திற்குக் குலதர்மமும் சுதர்மமுமாகுமெனச் சொல்லில் நன்கு பொருந்தும். சத்தியமும் அதுவே. இதனிரண்

டாவது ச்லோகத்தின் தாத்பரியம் என்னவெனில்,--இந்தத் தேகமென்னும் பூதமானது இவ்வாறு உருவம் பெறுமுன் வ்யக்தியில்லாத அவஸ்தையில் உருப்பெற்று விளங்கியதென்றும், தேகம் பிரிந்த பின்னர் அவ்வுருக்கொண்டு வ்யக்தியிடத்தில் மறைகின்றதென்றும் அறியாத நீ மத்திய காலத்தில் உன்னை யறியாது திருஷ்டிக்குத் தென்பட்ட இந்தத் தேகத்தில், 'எனது' என்னும் பாவம் சத்தியவானாகிய உனக்கு எவ்வாறு வரக்கூடுமென்று அர்ஜுனனைக் கண்டித்ததை நன்குணர்வாய். ஆதலால் இதிலிருந்து இந்தத் தேகத்தின் பஞ்ச பூதங்கள் ஆதியிலென்றும், அது உருப்பெற்று மத்திய காலத்தில் தோற்ற மாத்திரமாய் மறைகிறதென்றும், அதற்கப்பால் முன் சொன்ன ஆதி அவஸ்தையை அடைகிறதென்றும் காண்பதால் இதன் குல தர்மமும் சுதர்மமும் இதுவேயென்று நன்கு மதிக்கத்தகும். இதன் மூன்றாவது ச்லோகத்தின் தாத்பரியமென்னவெனில், ஒரு ஜீவனுக்குத் தேஹம் வஸ்திரமென்றும், அந்த வஸ்திரம் சிதைந்துபோன பின்னர் அவிழ்த்தெறிந்து நூதன வஸ்திரம் தரிப்பதில் ஆனந்தமடைவது பழக்கமென்றும், அர்ஜுனனுக்குப் போதித்துப், "பாபத்தால் ஜீரணித்துப்போன வஸ்திரங்களைக்கிழித்துப் பட்டத்துக்குரிய அரசனாகிய நீ, நூதன வஸ்திரம் உன் சகோதரருக்குக்கொடுப்பது உனது கடமை" யென்றும் வற்புறுத்தியதாகக் காட்டுவதால் இதுவும் நர் குலதர்மமும் சுதர்மமும் ஆகும். இன்னும் சந்தேக மறக்கூறுமிடத்து கீதைக்குக் காரணம் பாரதம். அந்தப் பாரதத்தில் சொல்லியவண்ணம் அந்த அரசர்கள் சந்திரகுலமென்று மொழிந்திருக்கக் காணலாம். இந்த மொழியால் இராமாயணத்தை இழுக்கத் தாண்டுவதால் எல்லாம் கீதைபாகவே முடிகிறது. ஆகையால் அந்நியமான இடத்தில் நான் பிரஸ்தாபிக்கவில்லை. அந்த இராமாயணத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட அரசன் சூரிய குலமென்று நன்கு காணலாம். இதில் பாரதத்தில் சொன்ன சந்திர குலமானது புண்ணிய மார்க்கமென்றும், இன்னும் வடமொழியால் தக்ஷிணாயன மார்க்கமென்றும்,

னாமாதி மார்க்கம் என்றும் பல நாமங்களை சூட்டப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இதைச் சந்திர குல பரம்பரை என்று வழங்கினாலும் ஷை பாரத குல கர்த்தாக்கள் மூன்று குல தர்மத்தை அடைந்து ஒழுகி நடந்திருக்கிறார்கள். அதாவது தர்மபுத்திரர் சந்திர குல மார்க்கத்தைத் தத்துவமாய் அநுஷ்டித்திருக்கிறார். பீஷ்மாச்சாரியார், விதுரன், சகாதேவன் சந்திர குலத்தில் தோன்றினாலும், சூரிய குல சஞ்சாரத்தில் நடைபெற்றிருக்கிறார்கள். மூன்றாவதான கௌரவர்கள் வேதத்தால் கண்டுபிடிக்க முடியாததும் மிருகங்களுக்குப்பொருத்தமானதும் அஸுர மிச்ரமான நூதன குலத்தைச் சிருஷ்டித்து அதற்குக் குலம் சொல்ல எவராலும் முடியாதவண்ணமாய் ஓர் நூதன மார்க்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது எந்தக் குலமென்னும் சொல்லப் பொருந்தாமலிருப்பதாலும் மானுடப்போர்வையைப் போர்த்து வந்திருப்பதாலும் மானுடகுலமென்று அவிவேகிகளின் பொருட்டு நாமஞ்சூட்ட நேர்ந்தாலன்றி, வேறுவிதமாய்க்குலம் கற்பிக்க முடியாதென்பது என்று அபிப்பிராயம். இது நிற்க, சொல்லப்பட்ட ராமாயணத்திலோ அந்தக்குலமானது ஆத்மக்ஞான பரம்பரை என்று நன்கு விளங்கும். அதில் பிறந்த தசரதனோ தழுவியமார்க்கம் சந்திரகுலம். அவனுக்குப் பிறந்த ராமன் விஷயமோ சத்யமான சூரிய குலம். அவ்வாறில்லாத பக்ஷத்தில் நாம் பூஜிப்பதற்கு உரியவனாகமாட்டான். தசரதனைப் பூஜிப்பவரும் கிடையாது. இத்தியாதி காரணங்களால் பிறந்த குலம் தோற்றமாத்திரமாயும், அநுபவிக்கும் விவேகம்குலம் என்னும் பாட்டையைத் தேடுவதால், நாமரூபத்தில் விரித்துக் கூறும் எந்தக்குலமும் அக்கினிமுன்னின்ற வைக்கோல் போலாகுமே யொழிய பிரஸ்தாபிக்க விவேகத்தின் முன் நிற்காது. நீயும் ஜகத்தும் அறியவேண்டியதை விட்டு அநாகரிகமானதும் இயற்கையான சுதர்ம குல தர்மத்துக்கு மாறுபுள்ள ஆசாரவேற்றுமைகளைச்சிருஷ்டித்துக்கொண்டு அதை அவலம்பித்து என்னையும் வேதோப நிஷத்துக்களையும் இழுத்துக்கேட்கில், உன்றன்மந்த மாறான சமாதானம்

எங்ஙனம் கூறுவது? ஆகையால் ஸ்ரீ ஸிருஷ்டியின் மூலதர் மத்தை ஆறாவறிந்து பூத பௌதிகக் மூல தர்மத்தையும் அப்பால் பிரகிருதியின் மூலதர்மத்தையும் சால விசாரித்து, அதில் விரவியிருந்து நிவிர்த்தியோடும் கூடினவனாய்க் கர்ம சந்நியாசமென்னும் யோகப்பேற்றை இனிச் சமுசயமின் றிக் கேள்வியிறந்து அடையக்கடவாய். எனது சம்பூரண ஆசியும் உனக்கு அளிக்கிறேன். நீ சாந்தியடைந்தவாம்பில் நின்று முடிவான சொல்லைக் கேட்டு ஆநந்திக்க எதிர்பார்த்த வருமிருக்கிறேன்.

கா:— ஹே சற்குரு! "சொன்னதைச் சொல்வதல்லால் சொல் லாத என் சொல்லுதற்கென்னத்தைச் சொல்வதினி எளி யேன், பராபரமே"! என்று கூறிய தாயுமான சுவாமிகள் வாக்குக்கிணங்க என்னை மௌனத்தில் இருத்திவிட்டது என்று சொல்லுதற்கும் என் நா, வாசா கைங்கர்யத்தில் பழ மையாய்ப் போய்விட்டபடியால் மீண்டும் பிரயோகப்படுத் தப் பிரியமில்லாதவனா யிருக்கிறேனாயினும், ஓர் அற்ப சங் கை எங்ஙனமே உதித்து கடைசியாய் வைத்துக்கொள்வோ மென்று நிர்மாணித்த ஓர் கேள்வியே சேஷமிருக்கிறது. அந்தக் கேள்வி இப்போது எனக்கு அவசியமில்லாவிடினும் லோகத்தின்பொருட்டு அவசியமாயிருக்கலாமென நான் நன் குணர்கிறேன். ஆதலால் இதைக் கடைசியான சிரமமா கக் கொடுக்கின்றேன். இதற்கு முன் சொன்ன கர்மயோ கத்திலும் மேலே நிகழ்ந்த இந்த யோகத்திலும் நிர்வாணம் என்ற பதப்பிரயோகம் தங்கள்வாசாயில் விளையக்கண்டேன். சாஸ்திரங்களிலும், வேதங்களிலும் பார்த்திருக்கின்றேன். அதன் அர்த்தத்தை ஜகத்து தப்பாயெண்ணியிருக்கும்வண் ணம் 'நிர்வாணம்' என்றால் என்ன என்பதையே விரித்துக் கூறுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

கு:— குருவின் சொல்லிற் குறிகொண்டுய்யும் குணமணியே! உன் கேள்வியில் ஓர் விசேஷம் இருக்கிறது. எந்த யோகத் திலும் உன் கேள்விகள் அதற்குச் சம்மந்தமில்லாமல் விஜாதி

யான கேள்வி விளையக்காணோம். இந்த யோகத்திலும் ஸஜாதியமான கேள்வியையே கேட்டு வருகின்றனை. அந்த நிமித்தமே உன் கேள்விக்குச் சமாதானம் கூற விரும்புகிறேன்; எனினும், இனிக்கேள்வியில் மௌனம் என்ற உன் சத்தியத்தை நம்புகிறவனும், அறிகிறவனுமாதலால் இதைத் திருப்தியோடு உனக்குத் தெரிவிக்க இச்சை கொள்ளுகிறேன். நீ மௌனத்தில் நின்று விபாஜமாய்க் கேட்பாயாக ஸ்திரீகளுக்கு ஆடை ஆபரணங்களை அணிந்துகொள்ளுவதில் ஆசையெனினும் அது மாயையின் விகாரங்கள் என்று நீ இப்பொழுது தான் தெளிந்திருக்கலாம். அதை தெளிந்துகொள்ளாதபக்குவத்தில் நின்று விசாரிக்க நாம் புக வேண்டும். அப்படி விசாரிக்க பிரதமத்தில் முக அலங்காரத்தில்காதும் மூக்குமே பிரதானம். இதில் ஆபரணம் அணியும் பொருட்டுக் காதைக்குத்தி அந்தக் கஷ்டத்தைச் சகித்து, மூக்கைக்குத்தி அதன் கஷ்டத்தையும் சகித்து நாம் அணிந்துகொள்கிறோம். இந்த இடத்தில் யோசிக்கவேண்டிய விஷயம் ஒன்றுளது. நகையணிய வேண்டாத இடத்தில் மனஸ்தாபத்தால் காதை ஒருவன் கிள்ளிவிட்டால், துக்கத்தையும் விளைவித்துக் 'கிரிமினல் கோர்ட்டு' க்குப்போய் நீயும் அலைந்து பொருட்செலவும் செய்து, அவனைத்தண்டிக்காமல் விடுவதில்லை. இந்தச் சுதர்மம் உனக்கு இவ்வாறு இருக்க, ஆபரணம் அணிந்துகொள்ள ஏற்பட்ட குத்தின் வலியைச் சகித்ததும், அந்தக்காதின் இயற்கை தர்மத்திற்கு மாறாய்க் கனத்தைத் தாங்குவதும் உன்னுடைய ஆசையின் கூத்தென நீ தெரிந்துகொண்ட பின்னர், இந்தக்கனத்தைப் பரிகரிக்கும் வைராக்கியம் வந்து அதைக்கழற்றி வைக்கில் அது காதின் நிர்வாணமன்றோ! ஆங்கது போல, மனம் ஆதியில் சத்வ சொரூபமாயிருக்க அதில் சங்கல்பாதி தோஷமென்னும் அழுத்தமான அறுபது அடுக்குச் சேலையால் மறைத்து வைத்திருப்பதை விசாரமென்னும் நிபத்தால் 'கிரந்தி' என்னும் முடிச்சை அவிழ்த்து ஞானம் என்னும் அக்கினியால் எரித்துப் புனரபி சேலையைக் கட்டுவதில்லை

யொன்று நிர்மாணித்த அந்த இடம் நிர்வாண மென்றுபிரத்தியேகச் சொல்லால் சொன்னதைத் தவிர அதுவும் கர்ம சந்நியாசமே. இதுபோலவே குலம், ஜாதி, பந்தியம், அபந்தியம் என்று விசேஷித்துக் கூறப்பட்ட இவ்வாபரணங்களைக் களற்றியெறிந்த நீ நிர்வாண நிஷ்டை கூடினவனொன்றே மதிக்கத்தகுமென்பதையையமறத்தெளிவாய். இந்தக் கர்ம சந்நியாச யோகம் என்றாலும், நிர்வாண யோகமென்றாலும், சொல்லின் வேற்றுமை தவிர இடத்தின் வேற்றுமை இல்லை. ஆனால் சந்நியசித்த பின்னரே நிர்வாணமென்று கூறத் தகும் இந்த அளவின் வேற்றுமை தவிர, வேறு வேற்றுமை இல்லை.

ஓம்தத் ஸத்

ஓம் சாந்தி—சாந்தி—சாந்தி ஓம்.

## ஸ்ரீ ராம கீதோபநிஷத்தில்

### நான்காவது அத்தியாயமான கர்ம சன்னியாசயோகம்

முற்றிற்று.

ஓம்.

# சந்தேகப்பிரசினம்.

கா:— சற்குரு சுவாமி! சந்நிதானத்தில் நான் இனிக்கேட்டு சந்தேகம் நிவர்த்தித்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லையெனினும், எனக்குச் சாற்றிய இந்த நாலு யோகங்களும் பகவத் கீதையைப் போலும் வியவகாரத்தில் தோற்றி இதின் சாரங்கள் அதனிடத்திலிருப்பதை சாமான்யத்தில் கிராஹ்யம் பண்ணும் சக்தியின்மையால், மேற்படி கீதையின் போக்கையே சிந்தித்துக்கொண்டு என் புத்தி பிரவர்த்தித்து வருகிறது. அந்த கீதையில் அனேக ஆக்ஷேபணைகள் இடையிடையே நிகழ்ந்து தக்க சமாதானம் எல்லாவற்றிற்கும் தேடியறிய சக்தியற்றவளாயுமிருக்கிறேன். இது நிற்க, என் போன்ற அனேக பக்குவிகள் பகவத்கீதையை ஒப்புக்கொள்ளத்தக்க ஆதாரமில்லாமலே நிவர்த்தித்து நிற்பதையும் நான் அறிகிறேன். இந்த ஸ்திதியில் தங்கள் சந்நிதியிற் கேட்ட நான் அந்த கீதைக்கு எள்ளளவும் இது மாறல்லவென்றும் தங்கள் திருவாக்கை நம்பிய ஒரு காரணத்தாலேயே, இது ஒரு உத்தமமான நூலென்றும் பற்றுதலுடையவளாயிருக்கிறேன். இந்தப் பற்றுதல்விசாரதிருஷ்டியோடு ஏற்படுமாறு எனக்கெழும்பும் பிரசினைகளை தங்கள் முன்னிலையில் தீர விசாரித்தாலன்றி மற்றேனையோர்களுக்கு இதை நன்னூலெனச் சித்தாந்திக்கச் சக்தியற்றவளாவேன். ஆகையால், தங்களுக்குச் சாவகாசமான வேளைகளில் என் சந்தேகங்களை யறவே ஒழிக்குமாறு பிரார்த்திக்கிறேன்.

கு— பிறவிப்பெருங்கடல் தாண்டிய பெண்ணரசே! உன் தீரமான புத்திக்கு, அதில் விளையும் எச்சந்தேகங்களும் நிவர்த்தியாகாமலிருக்க நியாயமில்லை. ஆயினும், என் வாயிலாய்க் கேட்க வேண்டுமென்று கூறுவதும் உனதுத்தம குணத்தின் மாண்பேயாகும். ஆதலின் நான் மிக்க வுத்சாகத்தோடு உனக்குண்டாகும் சந்தேகங்களைத் தெளிவு செய்யத் தயாராயிருக்கிறேன்.

தா:— ஸ்வாமி! பகவானால் அர்ஜுனனுக்கு அருளிச்செய்யப் பட்டகீதை மிக்கவிசேஷமென்றே யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம். ஆனால், இப்போர்ப்பட்ட வரியதத் துவ நூலுக்கு வியாக்கியானம் பண்ணியிருப்பவர்கள் அந்த நூல் தோன்றிய கால தேச வர்த்தமானத்தை யோசித்து அதை வாசிக்கக் கருதுவோர்களுக்கு நூலிற் புகுமுன்னர் மேற்படும் தடைகளைத் தாம் வருவித்து அவற்றிற்கேற்ற சமாதானம் கூறியிருந்திருப்பின் அக்ஞானத்திற்கிடம் உண்டாயிராது. உதாரணமாக, ஆரம்பத்தில் விஷாதயோக மென்றால் என்னவென்பதைத் தெளிவாக்காததோடு அதற்கு நேர் பதிலுரையாமல் பகவான் சாங்கியயோகத்தைச் சாற்றியிருப்பதாலும், இதுபோல் இன்னும் பலவிடங்களிலும் சந்தேகமுண்டாகுமாறு உட்கிடை தெற்றென வெளியாகாத தன்மையில் அமைந்திருப்பதாலும் எம்போன்ற பக்குவிகளுக்கு ஒவ்வொன்றாய்க் கேட்டுத்தெளியவேண்டியது அவசியமாயிருக்கிறது. ஆகையால், தங்கள் வாசாமிர்தத்தை யெதிர் பார்த்தவளாயிருக்கிறேன்.

கு:— பெண்மணி! நீ கூறிய தன்மையே. நீ விரும்பிய வண்ணமே, உன் பொருட்டாய் ஜகத்தோருக்கும் பிரயோஜனப்படுமாறு நீ கேட்குமிடந்தோறும் தெளிவுபடுத்தித் தருகிறேன். எனினும், உன் கேள்விகளுக்கு நீயே சமாதானம் தேடிக் கொள்ளுவதுதான் உன் பக்குவத்துக்கு விசேஷமாதலால், அதற்குப்போதுமான சாவகாசமெடுத்துக் கொண்டு ஆராய்க! அப்பால், பகவத்கீதையையோதலாம்.

## ஸ்ரீ ராம கீதோப நிஷத்து முற்றிற்று.

குறிப்பு:— பகவத்கீதை விஷயமான சம்வாதம் இதனிரண்டாம் பாகமாக விரைவில் வெளிவரும்.

ஓம்.

# அநுபந்தம்.

## இவ்வாசிரியராலியற்றப்பட்ட பாக்கள்.

## 1. ஜீவன் முக்தன் தன்மை.

### எழுசீரடி விருத்தம்.

1. இருவேறி யற்கையி னின்பதுன் பங்களை
யிருவிழியில் வரவேற் றுமே
வருபோது கனமின்றி வைத்தமோ னத்திலே
வளருமொரு தீரனாகி
கருபோதெனுங்கங்குல் காணாக் கயியதாய்
கலவிசெய்யும் புருடனாகி
இருபோது மறநின்ற வெல்லையில் புருடனே
யிரண்டிலுறு ஞானி யாவன்.

2. அன்பிலுரு வாகியு மாக்கையோ டாக்கையி
லாதரிப் பவனு மாகி
நன்போதுவி னடனமிடு கின்றபல கோஷத்து
ணழுவாத யோகி யாகி
தென்புகொளு நடையினொடு திகழவிட் டாக்கையைத்
திரிசயத் துறவு செய்ய
இன்பமுள தன்னிலையி லென்றுமகலாதவ
னேற்றமுள ஞானி யாவன்.

3. தேகமுள கோட்டையிற் றிகழ்கின்ற தத்துவம்
திக்குபா லகர்க ளாக
தேகியது நடுவிலே திரிசயத் துறவின்றி
தெய்வத்து டெய்வ மாகி
ஆகமதில் நிற்பினு மதுதானு மாகியு
மத்வைத மறநின் றுமே
லோகமுறு பாவனைச் சோர்வற நடத்துவன்
சுகஜீவ ஞானி யாவன்.

4. திரிசயந்திருக்கினுந் தேடிவரு முணவுகள்
திகழுமிரு விதமு மாக
திரிபுரை மறுத்தவன் போடதனை யுண்டுமே
சித்திக்க வார்த்தை யாடி

பெரியெனுந் தன்னிலையி னின்றேதும் வாரா
தியல்பினுறு கர்ம மென்ற
விரிவான புத்தியால் வேதித்து நிற்பவன்
விமலமுள ஞானி யாவன்.

5. போருக் கிழுப்பினும் புலமைக் கிழுப்பினும்
புகலுமொரு சாந்தி நின்று
வாரியிற் றள்ளினும் வன்னியிற் றள்ளினும்
வைத்தநிலை பிறழா மலே
கோரிக்கை யின்றியுங் கோருமவர் கூத்தினிற்
கூத்தாடி யெக்க ளித்து
நேருபவை யாதினும் நேசித்தி ருப்பவ
வினைவற்ற ஞானி யாவன்.

6. கருணையுள பார்வையுங் காதலொடு காதலுங்
கனிந்தசொற் சொல்லுமாய்
தருமமொடு தருமமுந் தகைமையொடு தகைமையுந்
தத்துவப்பிசகின்றியே
மருமமுள தன்னிலையு மாறாது நின்றுமே
மயல்பெருகு தேகத்தனுக்
கருமமொடு கருமமாய்க் கருவியே செய்ததாய்க்
காண்பவன் ஞானி யாவன்.

7. சத்தசத் தின்றியே சருவமுந் தன்னிலைச்
சாருபடி யான தென்று
சித்தொன்றி லேவந்த விளைவென்று மெண்ணியே
வேறுப்பிரிக்காமலும்
பித்துண்டு பண்ணாத வியற்கையழகாமெனப்
பெருமைசிறி துங்கொடாமல்
மத்துண்ட தயிரான மறவா திருப்பவன்
மகிமையுள ஞானி யாவன்.

8. தருவாக நின்றுமே தத்துவக் கடலினைத்
தத்தளித் தோடுமாறு
பெருவாரி தன்னிலே போகமிவ் வுலகெலாம்
பெரிதுவக் கக்குறித்து

ஒருவாதனை யுமிட் டியர்வாதனைக்குரிய
வொண்பொருள் விளங்குகருணை
திருவாக மோடுலக நேசத்துளுறைவனை
நிஜமான ஞானியாவன்.

9. குழவியொடு கிழவிவரை கூறுமற் றியாவையுங்
கூறுதன்னிலயமதிலே
விழைவுறவர் திலகுமொரு விண்ணூறுதன் வித்ததில்
விரிந்தபல சாகை யென்று
நிறைந்தவர்க ளுக்கினிய வின்னமுது தேனுமா
யின்பமுற வார்த்தை யாடி
தழைந்ததளிர் பச்சிளங் கிள்ளையென நிற்பவன்
தத்துவமு ணர்ந்த ஞானி.

10. ஆலயப் பணியிலு மத்வைத நோக்கிலு
மவரவர்க் கான வாறு
நூலினுட் புகுதலும் நூலைவிட் டகறலும்
நோன்போடு நோன்பு மறவே
பாலினிற் றோய்ந்ததும் பகருமொரு வெண்ணெயாய்ப்
பரிசய மெலாம்நீக் கியும்
சாலவே தன்னிலைச் சாட்சியென நிற்பவன்
சாந்தமுள ஞானி யாவன்.

—•••❖•••—

## சாங்கிய மாணவனிலக்கணம்.

1. மாசற்ற சற்குரு மலர்ப்பத மிரண்டையும்
மனதிலுற வாய்ப்பதித்து
தேசுபெறு தீரனே திருவோ டுறைந்தவளர்
திகழுமொரு சம்பத்துளான்
ஈசன்முத லானபல வெண்ணரிய தேவதைக்
கிருவினைகளைப் பிணைத்து
நாசமில் நானெனும் நாட்டத் திலுற்றவன்
நன்மையுள குலமாணவன்.

2. ஒருகணமு மொழியாது மொன்றொரு நுணர்ந்தபடி
யுறையுமிட மதுவா மெய்

வருகணமுஞ் செல்கணமும் வருவித்து நோக்காது
வளருகவியற்கைதனிலே
மருகணமு மின்றியுயர் வானசுக வாழ்விலே
பொன்றியவை யின்றிநிற்கும்
பெருகியவர் ஞானவெளிப் பிச்சியென நிற்பவன்
பேரிய குலமானவன்.

3. வருமுன்வினை யாதினும் வந்தவழி யாவையும்
வழுத்துமொரு ஞான தீப
மெரியுமொரு வொளியதனி லிருளறவே நின்றுமல்
லின்பதுன் பங்க டந்த
பொருளெதப்பொருளினைப் போற்றியுங் கேட்டுமே
புன்மையெல் லாந்த விர்த்து
மருமையுள வானநற் சாந்தியைத் தேடுமே
ளன்பொழுகு குலமானவன்.

4. ஐயுறுதலின்றியே வான்றசற்குருசொலை
யறிவிற் குறித்து நித்தம்
மெய்யுணர்வு கொண்டுமே மித்தையா முலகெலா
மின்னுமொரு ஜோதிகண்டு
செய்யுமொருநிடவிசா ரத்தினுற்சுட்டிடத்
தேவையுள புருடனுகி
மெய்யுருகு மாறே நிதித்தியாசஞ் செய்பவன்
நிஜமான குலமானவன்.

5. ஒருமொழியி னுண்மையை யுற்றுற்று நோக்கியும்
உதமுப சாந்தமெய்தி
அருமொழியிலேவழியுந் தெருளமுத வாரியிற்
குளித்துக் குளித்து நன்றுப்
பெருமைபடை யொத்தவெச் சங்கற்பம் யாவையுங்
களைத்து ரத்தி நின்று
மருகுமொரு புருடனே வைராக்கிய வானெனும்
வரிசையுள குல மானவன்.

6. நலமிடர்க ளென்றுவரு நவிலும்வினை யாதினும்
நடுநிலைமை பெயரா மனும்
பலமிகுமஞ் ஞானநதி மன்னுது மென்றுமே
மாறும கிழ்ச்சி யோடு
முலகமது வொன்றுமொன்றியுயர்பதவியி
லொருகாட்ட முற்றநிற்குந்
தன்மையிது கொள்கையாய்த் தவியேயு சாவுமன்
தக்கநற் குலமானவன்.

# பிழைத்திருத்தம்

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|
| 1 | 3-வது பாட்டில் 3-வது | மூன்றுவரிவு | மூன்றுமறிவ |
| 6 | 24 | முள்ளவர்கள். அதிகாரி | முள்ளவர்கள் அதிகாரி |
| 19 | 27 | சொல்லமாம் | சொல்லலாம் |
| 20 | 12 | சுபாமும் | சுபாவம் |
| | 15 | சார்வத | சாசுவத |
| 28 | 26 | அந்த நியபான | அந்நியமான |
| 29 | 5 | பார்த்தால் | பார்த்தல் |
| 33 | கீழிருந்து 3-வது | வேதங்களிருப்பினும் | வேதங்களிலிருப்பினும் |
| 44 | 1 | அனனின்றும் | அதனின்றும் |
| | 16 | ஆசஷ்டமத்துவ | ஆசஷ்டமதத்துவ |
| | 31 | வேறுக்கு | வேருக்கு |
| 47 | 27 | யாகிதமென்றும் | மாகிதமென்றும் |
| | 29 | அப்பு-சிப்புக்கு | அப்புசிப்புக்கு |
| 48 | 2 | கொள்ளளுவ | கொள்ளுவ (ருதி |
| 52 | 13 | தொழிலுபூதப்பிறகிருதி | தொழிலும் பூதப்பிரகி |
| 53 | 13குறளில் | லனைத்தான் ஆகுலரேர்பிற | லனைத்தறன்; ஆதுலரே |
| | 16 | கேள்விக்குத்தாம் | கேள்விக்குத்தாய் (பிற |
| | 18 | உளதேயானுல் | உளதே. ஆனுல், |
| | 30 | விவரிக்கும் | விவகரிக்கும் |
| 56 | 23 | நேல்வித்தென்று | செல்வித்தென்று |
| 68 | 18 | கிடக்கும். ஞானமாயும் | கிடக்கும் ஞானமாயும் |
| 73 | 23 | ஜீவன் சரீர சம்பந்த | ஜீவசரீர சம்பந்த |
| 74 | 8 | பிரகாசத்தை மறைந்து (விடத்தும் | பிரகாசத்தை அவை (மறைத்தவிடத்தும் |
| | 20 | ஞானசூரியனே விவேக (த்தல் | ஞானசூரியனை விவே (கத்தால் |
| 81 | 2 | யமதர்மந் 'கோட்டில்' | யமதர்மக் 'கோட்டில்' |
| 84 | 10 | கருவி காரணங்களால் | கருவி கரணங்களால் |
| | 31 | மூக்திப்பதத்தை | முக்திப்பதத்தை |
| 85 | 2 | ஞாயாசனுதி | ஞானபாசனுதி |
| | 25 | முத்தொழில் | முத்தொழிலில் |
| 88 | 8 | அவை சசவாமொறும் | அவ்வ சசவாமொழுர் |

| | | | |
|---|---|---|---|
| 90 | 20 | பிறத்யைதயின்றி | பிரத்தையின்றி |
| 93 | 7 | கர்மசந்நியாசி | கர்மசந்நியாச |
| 95 | 11 | செய்பதல் | செய்தல் |
| 98 | 26 | சிகையை முண்டிதம் | சிகையை முண்டிதம் |
| 100 | 24 | நி கர்ம சந்நியாசியோகி | நி கர்மசந்நியாசயோகி |
| 103 | 9 | ஆ. ஆத்மாவில் | ஆ ஆத்மாவில் |
| 109 | 22 | என்றும் ஜாதியால் அறை (க்கப்படும் | என்றும் இருவகை |
| | 23 | ஜாதிகளில் | ஜாதியில் |
| 111 | 26 | என்றே மூன்றில் | என்ற மூன்றில் |
| | 27 | ஆசாரத்தை அநுஷ்டிக் (கும் | ஆசாரத்தை அதை அநு (ஷ்டிக்கும் |
| | 28 | குலதர்மமென்பதை | குலதர்மமென்பது |
| | 29 | விஷயங்கள் | விதங்கள் |
| 119 | 11 | தெளிந்துகெள்ளாத | தெளிந்துகொள்ளாத |